
தமிழரசு
1-3-1988 ரூ. 1
AIR



மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள், தம் ஆலோசகர்கள் டாக்டர் எஸ். எஸ். சித்து, திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப., மற்றும் தலைமைச் செயலர் திரு எம். எம். ராஜேந்திரன், இ.ஆ.ப., ஆகியோருடன் 18.2.88 அன்று ஆலோசனை நடத்தினார்.

மேதகு ஆளுநர் அவர்கள், 18.2.88 அன்று தலைமைச் செயலகத்தில் தம்மைச் சந்திக்க வந்த பொதுமக்கள் கொடுத்த மனுக்களைப் பெற்றுக் கொண்டு, அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார்.



# தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி



## போது அறிவிப்பு

புதுடில்லி மத்திய அரசு உள் விவகார அமைச்சகத்தில் 30.1.1988-ஆம் நாளிட்டு வெளியிடப்பட்ட கீழ்க்காணும் அறிவிக்கை-ஆணை பொதுமக்களின் தகவலுக்காக மீண்டும் வெளியிடப்படுகிறது:-

### அறிவிக்கை

G.S.R 66 (E) குடியரசுத் தலைவரின் பின்வரும் பொது அறிவிப்பு (Proclamation) பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:-

இந்தியக் குடியரசுத் தலைவராகிய ஆர்.வெங்கட்ராமன் என்ற நான், தமிழ்நாடு மாநில ஆளுநரிடமிருந்து அறிக்கை வரப்பெற்றதன் பேரில், அவ்வறிக்கையையும், எனக்கு வரப்பெற்ற ஏனைய தகவல்களையும் ஆழ்ந்து பரிசீலித்த பின்னர், இந்திய அரசியலமைப்புச் சட்ட விதித்துறைகளின்படி (இதன் பிறகு அரசியலமைப்புச் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) அம்மாநில அரசு செயற்பட இயலாத நிலைமை ஏற்பட்டுள்ளது என நான் ஐயமறத் தெளிந்துள்ளேன்.

ஆகவே இப்போது, அரசியலமைப்புச் சட்டத்தின் 356-ஆம் பிரிவில் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டும், அது சார்பாக என்னைச் செயற்பட வைக்கிற ஏனைய அதிகாரங்களைக் கொண்டும், நான் பின்வருவனவற்றை இதனால் அறிவிக்கிறேன்:-

(a) இந்தியக் குடியரசுத் தலைவர் என்கிற முறைமையில், மேற்சொன்ன மாநில அரசின் எல்லா அலுவல்களையும், அம்மாநில ஆளுநர் அவர்களிடம் நிலை பெற்றுள்ள அல்லது அவர் செலுத்தத் தக்க எல்லா அதிகாரங்களையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்;

(b) மேற்சொன்ன மாநிலத்தின் சட்டமன்ற அதிகாரங்கள், நாடாளுமன்றத்தால் அல்லது அதன் அதிகாரத்தின்பேரில் செலுத்தத்தக்கவை என்று அறிவிக்கிறேன்;

(c) இப் பொது அறிவிப்பின் நோக்கங்களுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்கு அவசியமானவையென்று அல்லது விரும்பத்தக்கவையென்று எனக்குத் தோன்றுகிற, இது தொடர்பாகவும், ஒட்டியும் வருகிற பின்வரும் விதித்துறைகளை இயற்றுகிறேன்.

(i) மேற்சொன்ன இப் பொது அறிவிப்பின் (a) பகுதி பொருட்படி, நான் பொறுப்பேற்ற அலுவல்களையும், அதிகாரங்களையும் செலுத்துகையில், இந்தியாவின் குடியரசுத் தலைவர் என்ற முறைமையில், மேற்சொன்ன மாநில ஆளுநர் வாயிலாக, நான் பொருத்தமெனக் கருதும் அளவுக்குச் செயற்படுவது சட்ட சம்மதமாகும்;

(ii) அம்மாநிலம் தொடர்பாக, அரசியலமைப்புச் சட்டத்தின் பின்வரும் விதித் துறைகள் செயற்படுவது இதனால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது; அவையாவன:-


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019
பிரபவ - மாசி 18

மலர் : 18 இதழ் : 14&15

1-3-1988

மாநிலச் சட்டமன்றத்திற்குக் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டு அனுப்புகின்ற பொருள் சம்பந்தப்பட்ட அளவுக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 3-ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை:-

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் ஆளுநர் அவர்களுக்கு அனுப்புகிற அறிக்கைகளை மாநிலச் சட்ட மன்றத்தின் முன் வைப்பது தொடர்பாகக் குறிப்பிடுகிற அளவிற்கு மட்டிலும் அரசியலமைப்புச் சட்டத்தின் 151-ஆம் பிரிவின் (2) பகுதி;

163, 164 ஆகிய பிரிவுகள்;

மாநில அரசின் அலுவல்களை, அமைச்சர்களிடையே ஒதுக்கீடு செய்வது தொடர்பாகக் குறிப்பிடும் அளவிற்கு மட்டிலும் 166-ஆம் பிரிவின் (3) பகுதி;

167-ஆம் பிரிவு;

அம்மாநிலத்தின் சட்டப்பேரவைத் தீர்மானம் நிறைவேற்றுவது தொடர்பாகக் குறிப்பிடும் அளவிற்கு மட்டிலும், 169-ஆம் பிரிவின் (1) பகுதி; 174-ஆம் பிரிவின் (1) பகுதி, (2) பகுதியின் (a) துணைப்பகுதி;

175 முதல் 178 வரையிலான பிரிவுகள் (இரண்டும் உட்பட);

179-ஆம் பிரிவின் (b) (c) பகுதிகள்; அப்பிரிவின் முதல் வரம்பு நிபந்தனை;

180, 181 பிரிவுகள்;

சட்டப்பேரவைத் துணைத் தலைவரின் சம்பளங்கள் படிகள் தொடர்பாகக் குறிப்பிடும் அளவிற்கு மட்டிலும் 186-ஆம் பிரிவு;

188, 189, 193, 194, 195, 196 பிரிவுகள்;

198-ஆம் பிரிவு;

199-ஆம் பிரிவின் (3) (4) பகுதிகள்;

சட்டப்பேரவைத் துணைத் தலைவரின் சம்பளங்கள் படிகள் தொடர்பாகக் குறிப்பிடும் அளவிற்கு மட்டிலும் 202-ஆம் பிரிவின் (3) பகுதி;

208 முதல் 211 வரையிலான பிரிவுகள் (இரண்டும் உட்பட);

213-ஆம் பிரிவின் (1) பகுதியின் வரம்பு நிபந்தனை; (3) பகுதியின் வரம்பு நிபந்தனை;

323-ஆம் பிரிவின் (2) பகுதி; மாநிலச் சட்டமன்றத்தில் குறிப்புடன் அறிக்கை வைப்பது தொடர்பாகக் குறிப்பிடும் அளவிற்கு மட்டிலும்;

(III) மேற்சொன்ன மாநிலத்தின் சட்டப்பேரவை இதனால் கலைக்கப்படுகிறது;

(IV) இம்மாநிலத்தைப் பொறுத்தவரையில், அரசியலமைப்புச் சட்டத்தில் ஆளுநர் குறித்து இடம்பெற்றுள்ள யாதொரு குறிப்பும், குடியரசுத் தலைவரைக் குறிப்பதாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும்; மாநிலச் சட்டமன்றத்தின் அல்லது அதன் அவைகளின் அலுவல்கள், அதிகாரங்கள் பற்றி இடம்பெற்றுள்ள யாதொரு குறிப்பும், சந்தர்ப்பம் வேறுவகையில் பொருள் குறித்தாலன்றி, மற்றபடி, நாடாளுமன்றத்தைக் குறிப்பதாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும்; குறிப்பாக, 213-ஆம் பிரிவில் ஆளுநர் பற்றி அல்லது மாநிலச் சட்டமன்றம் அல்லது அதன் அவை பற்றி இடம் பெற்றுள்ள யாதொரு குறிப்பும், குடியரசுத் தலைவர் அல்லது நாடாளுமன்றத்தை அல்லது, அதன் இரு அவைகளையும் குறிப்பதாகப் பொருள் கொள்ளப்படவேண்டும்.

ஆனால் இதில் கூறப்பட்டுள்ள எதுவும், 153-ஆம் பிரிவின் விதித்துறைகள், 155-159-ஆம் பிரிவுகள் (இரண்டும் உட்பட), 299, 361 பிரிவுகள், இரண்டாம் விவர அட்டவணையின் 1 முதல் 4 பாராக்கள் ஆகியவற்றைப் பாதிக்காது, அல்லது இப்பகுதியின் ((1) துணைப்பகுதியின் கீழ், மேற்சொன்ன மாநில ஆளுநர் அவர்கள் மூலமாகத் தாம் தகுதியெனக் கருதுகிற அளவுக்குச் செயல்படுவதிலிருந்து குடியரசுத் தலைவரைத் தடுக்காது.

(V) மாநிலச் சட்டமன்றத் தீர்ப்புச் சட்டங்கள் அல்லது மாநிலச் சட்ட மன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள் பற்றி, அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள யாதொரு குறிப்பும், இவ்வறிவிப்பின் மூலம், நாடாளுமன்றம் மாநிலச் சட்ட மன்றத்தின் அதிகாரங்களைக் கொண்டு இயற்றிய, அல்லது குடியரசுத் தலைவர் இயற்றிய அல்லது, அரசியலமைப்புச் சட்டத்தின் 357ஆம் பிரிவின் (1) பகுதியைச் சேர்ந்த (a) துணைப் பகுதியிலும் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு அதிகாரி இயற்றிய சட்டம் பற்றிய குறிப்பினையும் உள்ளடக்கியதாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும்; தமிழ்நாடு மாநிலத்தில் செயலிலுள்ள, தமிழ்நாடு 1891-ஆம் ஆண்டு பொதுப்பகுதிகள் சட்டமும் (தமிழ்நாடு சட்டம் 1/1891 ) மாநிலச் சட்டங்களுக்குப் பொருந்துகின்றவாறுள்ள 1897-ஆம் ஆண்டு பொதுப் பகுதிகள் சட்டமும், (10/1897) மாநிலச் சட்ட மன்றத்தின் சட்டம் போன்றே எந்த ஒரு சட்டம் தொடர்பாகவும் செல்திறன் உடையதாக இருக்கும்.

| | |
|---|---|
| புதுடில்லி,<br>30-1-1988. | ஆர். வெங்கட்ராமன்,<br>குடியரசுத் தலைவர். |
| புதுடில்லி<br>30-1-1988. | சி. ஜி. சோமையா,<br>உள்துறைச் செயலாளர். |
| சென்னை-9,<br>30-1-1988. | ஏ.பத்மநாபன்,<br>தலைமைச் செயலாளர். |

---

## ஆணை

### புதுடில்லி 30.1.1988

G.S.R. 67(E) குடியரசுத் தலைவர் பிறப்பித்த பின்வரும் ஆணை பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப்படுகிறது:-

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 356-ஆம் பிரிவின் கீழ், நான் பிறப்பித்த 30.1.1988ஆம் நாளிட்ட அறிவிப்பின் (c) பகுதியைச் சேர்ந்த (1) துணைப்பகுதியின்படி, மேற்சொன்ன பொது அறிவிப்பின் (a) பகுதியின் மூலம் குடியரசுத்தலைவர் பொறுப்பேற்ற தமிழ்நாடு மாநில அரசின் எல்லா அலுவல்களும், அரசியலமைப்புச் சட்டத்தின்படி, அம்மாநில ஆளுநர் அவர்களிடம் நிலைபெற்றுள்ள, அல்லது, அவர் செலுத்தத்தக்க அதிகாரங்களும், மாநிலத்தில் தற்போது செயலிலுள்ள யாதொரு சட்டமும், குடியரசுத் தலைவரின் மேற்பார்வை, நெறிப்படுத்தல், கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு உட்பட்டு, அம்மாநில ஆளுநர் அவர்களால் செலுத்தத்தக்கவை என்று நான் இதனால் கட்டளையிடுகிறேன்.

| | |
|---|---|
| புதுடில்லி,<br>30-1-1988. | ஆர். வெங்கட்ராமன்,<br>குடியரசுத் தலைவர். |
| புதுடில்லி,<br>30-1-1988. | சி. ஜி. சோமையா,<br>உள்துறைச் செயலாளர். |
| சென்னை-9<br>30-1-1988. | ஏ. பத்மநாபன்,<br>தலைமைச் செயலாளர். |

# அயராது உழைப்போம்!

## மேதகு குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன்

"இந்தியாவின் ஒருமைப்பாடும் ஒற்றுமையும், அந்நிய சக்திகளாலும், உள்நாட்டுக் கலகக் கும்பல்களாலும், அச்சுறுத்தலுக்கு ஆளாகிவிட்ட சூழ்நிலையிலும் கூட ஜனநாயகம், மதச்சார்பின்மை, சோஷலிசம் போன்ற நமது அரசியல் சாசனம் குறிப்பிட்ட நோக்கங்களை அடைய நாம் கடுமையாக உழைத்து வருகிறோம்.

நம் பொருளாதாரத்தின் வலிவைச் சோதிக்கும் முகமாக பருவமழை பொய்த்துப் போனபோதும் நமது விவசாயிகள் அதனை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளனர். பஞ்சாப் போன்ற இடங்களில் நிலவிய பயங்கரவாதம் நம் அனைவரின் முயற்சியாலும் ஒடுக்கப்பட்டு விட்டது. திரிபுராவில் தோன்றிய தீவிரவாதிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளையடுத்து, அதனை ஒரு கலவரப் பகுதியாக அறிவிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாக்கப்பட்டோம். வகுப்புவாதத்தையும், அடிப்படைவாதத்தையும் களைய வேண்டும் என்ற உறுதியான நோக்கில் தேசிய ஒருமைப்பாட்டுக் கழகங்களை ஏற்படுத்தி, வகுப்பு ஒற்றுமையை வளர்த்து வருகிறோம்.

மத்திய-மாநில உறவுகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நீதிபதி திரு ஆர்.எஸ். சர்க்காரியா தலைமையிலான குழு, தனது அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. இவ்வறிக்கையின் மீதான அரசின் முடிவை எடுக்குமுன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களும் கருத்தில் கொள்ளப்படும்.

எதிர்காலத் தலைமுறையினரின் நன்மைக்காக புதிய தேசிய கல்விக்கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டு, அதனை நடைமுறைப்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். துவக்கப்பள்ளிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்தவும், கல்விச்சூழலை உருவாக்குவதற்கும் கரும்பலகை இயக்கம் துவக்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் ஐந்து லட்சம் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டம் தொடர்கிறது. நவோதயா பள்ளிகளின் எண்ணிக்கை 206 ஆக அதிகரித்துள்ளது. மகளிருக்கான இலவச உயர்நிலைக்கல்வித் திட்டம் எல்லா மாநிலங்களிலும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சிறிய குடும்பம் என்ற எண்ணத்தை உருவாக்குவதே நமது தேசிய முன்னுரிமையாக இருக்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் இரண்டு கோடிப் பேர் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்த முன்வந்துள்ளனர். சுகாதாரமும், குடும்ப நலமும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பிரச்சினைகள் ஆதலால், இவ்விரண்டு தொடர்பான திட்டங்கள் இணையாகவே அமல்படுத்தப்படுகின்றன.

மகளிருக்கு எதிரான அனைத்து வகையான அநீதிகளிலிருந்தும் அவர்களை விடுவிப்பதை நம் தேசியக்கடமையாக ஏற்றுள்ளோம். கி.பி. 2000 வரையில் மகளிரின் பிரச்சினைகள் குறித்து விவாதித்து நீண்டகாலத் திட்டம் ஒன்றை அரசு வரைந்துள்ளது. மகளிர் பற்றிய தேசியக்குழுவை மாற்றியமைப்பதுடன், அமைப்பு சாராத துறைகளில் உள்ள மகளிர் பிரச்சினைகளைப் பற்றி ஆராய தனியாக ஒரு தேசியக்குழு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய நீரோட்டத்தில் இளைஞர்களின் பங்கை அதிகரிப்பதற்காக, நேரு இளைஞர் மையங்கள் புனரமைக்கப்படுகின்றன.

சுமுகமான தொழில் உறவு இந்த ஆண்டின் ஒரு முக்கிய அம்சமாகும். தொழில்துறை நிர்பந்தத்தில் தொழிலாளர்களின் பங்கை மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கில் அரசு செயல்பட்டு வருகிறது. தொழில் உறவுகள் குறித்து விரிவானதொரு சட்டம் இயற்றவும், தொழிலாளர் சேமநல நிதித்திட்டத்தில் பல முக்கிய மாறுதல்களை ஏற்படுத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது.

அமைப்பு சாராத துறையில் இருக்கும் பெரும்பான்மையான தொழிலாளர்களைச் சுரண்டலிலிருந்து விடுவிக்க, போதிய புள்ளிவிவரம் நம்மிடத்தில் இல்லை. இத்தொழிலாளர்களின் நலனிலும் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டுள்ள நாம், அவர்களை வறுமையிலிருந்து மீட்கவும், அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் 'ஊரகத்தொழிலாளர் பற்றிய தேசியக்குழு' ஒன்றை நியமித்துள்ளோம். குழந்தைத் தொழிலாளர் பற்றி தேசியக் கொள்கையை வரைந்ததுடன், கொத்தடிமைகளின் புனர்வாழ்வுக்கும், தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து முக்கியப் பணியாற்றி வருகிறோம்.

20 அம்சத் திட்டம், கிராமப்புற மக்களின் நம்பிக்கையை வளர்க்கும் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் மொத்தத் திட்டச் செலவில் 30 சதவீதம் 20 அம்சத்திட்டத்திற்குச் செலவிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை உறுதித்திட்டம் போன்ற திட்டங்கள் வறுமையை ஒழிக்கும் முக்கிய காரணிகளாகச் செயல்பட்டு வருகின்றன. கடந்த ஏழு ஆண்டுகளில், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் சமூகத்தின் நலிவடைந்த பிரிவினர் சுமார் 23.4 மில்லியன் குடும்பத்தினருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உதவியளிக்கப்பட்டுள்ளது. இம்மக்களில் 14 சதவீதம் பேர் மகளிர். 1987 ஏப்ரலிலிருந்து 1988 ஜனவரி வரை தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதித்திட்டம் ஆகியவற்றின் கீழ் 471 மில்லியன் மனித நாட்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

நீர்வளம் தற்போது முதன்முறையாக ஒரு முக்கிய தேசிய சொத்தாக அங்கீகரிக்கப்பட்டு, புதிய தேசிய நீர்க் கொள்கை வரையப்பட்டுள்ளது. கங்கை செயல் திட்டம் 25 முக்கிய நகரங்களில் முழுமூச்சுடன் செயல்பட்டு வருகிறது.

நலிவடைந்த பிரிவு மக்களுக்கு வீடு கட்டுவதற்கு நிதியுதவி அளிப்பதற்காக, தேசிய வீட்டு வசதி வங்கி ஒன்றை ஏற்படுத்த அரசு சட்டம் இயற்றியது. விரைவில் தேசிய வீட்டுவசதிக் கொள்கையை அரசு அறிவிக்கும்.

திறமைமிக்க, பொறுப்புணர்ச்சியுடன் கூடிய, நிர்வாகத்தை வழங்குவது என்ற நோக்கத்திற்காக மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கூட்டங்கள் கூட்டப்பட்டன. பொதுமக்களின் குறைதீர்க்கும் பிரிவுகளை ஏற்படுத்தியவுடன், மாவட்ட அளவில் திட்டமிடுபவர்களுக்கு புதிய பயிற்சி முறைகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இலவசச்சட்ட உதவித் திட்டங்களை அமல்படுத்துவதற்காக, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பொறுப்பின் கீழ் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 47 ஆம் பக்கம்

# புதிய ஆளுநர் பதவி ஏற்பு



தமிழ்நாட்டின் புதிய ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டரின் பதவி ஏற்புவிழா 17-2-'88 பிற்பகல் 4.45 மணி அளவில் ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

அண்ணாசாலை பெரியார் சிலை அருகில்-ராஜாஜி மண்டப வளாகத்தின் வாசலிலிருந்து முன்னும் பின்னும் குதிரைப்படைப் போலீஸ் அணி வகுத்து வர-ஆளுநர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

ராஜாஜி மண்டப வாசலில் ஆலோசகர்கள் திரு எஸ்.எஸ்.சித்து, திரு ஏ. பத்மநாபன், தலைமைச் செயலர் திரு எம். எம். ராஜேந்திரன் ஆகியோர் ஆளுநரை வரவேற்றனர். அதன் பின்னர் காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் பார்வையிட்டார்.

ராஜாஜி மண்டபத்தில் படிக்கட்டுகளில் ஏறியவுடன் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. சந்துர்கர் அவரை வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றார்.

தமிழக ஆளுநராக திரு பி.சி. அலெக்சாண்டர் அவர்களை நியமித்த குடியரசுத் தலைவர் அவர்களின் ஆணையைத் தலைமைச் செயலர் திரு எம். எம். ராஜேந்திரன் முதலில் படித்தார்.

பின்னர் தலைமை நீதிபதி திரு. சந்துர்கர், ஆங்கிலத்தில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். ஆளுநராக திரு. பி.சி. அலெக்சாண்டர் பதவி ஏற்றுக் கொண்டு, அதற்குரிய ஆவணங்களில் கையொப்பமிட்டார். பின்னர், தலைமை நீதிபதியும் கையொப்பமிட்டார்.

பதவி ஏற்றவுடன் ஆளுநரும், தலைமை நீதிபதியும் கைகுலுக்கியபடி மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டனர்.

அதன்பின்னர் உயர்நீதிமன்ற நீதிபதிகள், அரசியல் பெருமக்கள் ஆகியோர், ஆளுநர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். பிறகு, ஆளுநர் அவர்கள் மேடையை விட்டிறங்கிச் சென்று, அங்கு அமர்ந்திருந்த பெருமக்கள் பலரையும் சந்தித்து வாழ்த்துதலைப் பெற்றுக் கொண்டார்.

பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து, அவர்களின் மூலம் தமிழகத்து மக்களுக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

ஆளுநர் பதவி ஏற்புவிழா மிக எளிய முறையில் நடைபெற்றது.

### மேதகு தமிழ்நாடு ஆளுநர்

## டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

**பெயர் :**

படிஞாறே தலக்கல் செரியன் அலெக்சாண்டர்.

**நிரந்தர முகவரி :**

பி.சி. அலெக்சாண்டர்,
படிஞாறே தலக்கல்,
மாவெலிக்கரா,
கேரளா.

**பிறந்த நாள் :**

*20.3.1921*

**கல்வி :**

எம்.ஏ.,(வரலாறு, பொருளியல்)
எம்.லிட் (ஆராய்ச்சி)
டி.லிட் (ஆராய்ச்சி)

**பணி :**

இந்திய ஆட்சிப் பணி (ஓய்வு)

**வெளி நாடுகளில்-பயிற்சி, ஆராய்ச்சி :**

இங்கிலாந்தில் நஃபீல்டு பௌண்டேசன் ஃபெல்லோசிப்பின்கீழ் வர்த்தகக் கழகத்தில் பயிற்சி.

ஃபோர்டு பௌண்டேசன் ஃபெல்லோசிப்பின் கீழ் கலிபோர்னியா, ஸ்டேன்ஃபோர்டு ஆய்வுக் கழகத்தில் ஆராய்ச்சி.

**இந்திய அரசில் வகித்த முக்கிய பதவிகள் :**

சிறுதொழில் வளர்ச்சி ஆணையர், 1960-63.

சிறுதொழில் வளர்ச்சி ஆணையர் மற்றும் தொழில் அமைச்சகத்தின் கூடுதல் செயலர், 1973-75.

அயல் நாட்டு வர்த்தகத்துறைச் செயலர்; பின்னர் வணிகத்துறைச் செயலர் 1975-78.

பாரதப் பிரதமரின் முதன்மைச் செயலர் 1981-85.

பிரிட்டனில் இந்தியத் தூதர் 1985-88.

**ஐ.நா. சபையில் வகித்த பொறுப்புகள்:**

நியூயார்க்கில் ஐ.நா. தலைமையகத்தில் தொழில் வளர்ச்சி மைய முதுநிலை ஆலோசகர், 1963-66.

டெஹ்ரானில் ஐ.நா. சிறுதொழில் திட்டப் பணித் தலைவர் மற்றும் ஈரான் அரசின் தலைமை ஆலோசகர் 1970-73.

முதுநிலை ஆலோசகர்; பின்னர் நிர்வாக இயக்குநர் மற்றும் உதவித் தலைமைச் செயலர், பன்னாட்டு வர்த்தக மையம் ஜெனீவா, 1978-1981.

**வெளியிட்ட நூல்கள் :**

- மலபாரில் டச்சுக்காரர்கள்.
- கேரளாவில் பௌத்த சமயம்.
- இந்தியாவில் தொழிற்பேட்டைகள்.

# சிறந்து விளங்கும் தமிழகம்

## மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர்

தமிழ்நாட்டு மக்களுக்கு எனது உளங்கனிந்த நல் வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாற்பது வருடங்களுக்கு முன்னர், நான், அரசு நிர்வாகப் பணியைத் தொடங்கிய மாநிலமாகிய தமிழ் நாட்டிலேயே தற்போது சேவை செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதை எண்ணி மிகப் பெருமை கொள்கிறேன்.

இந்திய நாட்டில் மிகச் சிறந்த முறையில் நிர் வாகத்தை நடத்தும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்பதைக் கடந்த காலங்கள் தெரிவித்துள்ளன. தலைமைச் செயலகத்தில் பணிபுரிந்துவரும் மிக உயர்ந்த பதவியில் உள்ள அதிகாரியிலிருந்து - கிராமத் தில் பணிபுரியும் ஊழியர்வரை - அல்லது காவலர்வரை- திறமை படைத்தவர்களாக விளங்குவதுடன் மிகவும் ஈடுபாட்டுடனும் பணியாற்றி வருகிறார்கள். இந்த வகையிலே சிறந்த மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழ் நாடு எப்போதும் விளங்கி வந்துள்ளது.

இதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம். ஒன்று, எல்லாரும் சிறந்த நிர்வாகத்திற்காகத் தங்களை முழு ஈடுபாட்டுடன் அர்ப்பணித்துக் கொள்கிறார்கள். மற்றொரு காரணம் - தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் பக்குவம் மிகுந்தவர்களாகத் திகழ்வது.

இத்தகைய திறம் பெற்ற தலைவர்களின் ஈடு பாடும், திறமை மிக்க நிர்வாக முறையும் இணைந்து, தமிழகத்தில் நிலையான தன்மையையும் பொருளாதார வளத்தையும் உருவாக்கியுள்ளன. இந்த நிலையை மேலும் மேன்மைப்படுத்தவும், மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு எந்த நேரமும் தயாராக இருக்க வேண்டும் என்ற வகையிலும் நிர்வாகத்தை நடத்த விரும்புகிறேன்.

குடியரசுத் தலைவர் ஆட்சி என்றாலே அது அரசு அதிகாரிகளின் ஆட்சியாகத்தான் இருக்கும் என்று மக்கள் பொதுவாக எண்ணுகின்ற எண்ணத்தை மாற்றி அமைக்க முனைவேன்.

நாங்கள் மக்களின் பிரதிநிதிகளாக இருந்து நிர் வாகத்தை நடத்துவோம். நாங்கள் நாடாளு மன்றத்துக்குப் பொறுப்புள்ளவர்கள். நாடாளுமன்றம் பொதுமக்களுக்குப் பொறுப்புள்ளது.

இன்றுள்ள நிலையில், நிர்வாகத்தை எதிர்நோக்கி யுள்ள பிரச்சினைகளை நான் நன்கு அறிவேன். தமிழகம் சமீபத்தில்தான் தீர்க்கதரிசனம் மிக்க-நாட்டுப்பற்றுக் கொண்ட - இந்த மாநிலத்தின் அரசியல் களத்தில் இருபதாண்டுகளாக ஒளி வீசித் திகழ்ந்த-மிகப்பெரும் தலைவர் - பாரத ரத்னா எம்.ஜி. ராமச்சந்திரன் அவர் களை இழந்து சோகத்தில் ஆழ்ந்திருக்கிறது. அவரை நான் நேரடியாக அறிந்து கொள்ளும் நல்வாய்ப்பைப் பெற்றிருந்தேன். ஏழை எளிய மக்களுக்காக-குறிப்பாக- ஆதிதிராவிட மலைவாழ் மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட அந்தத் தலைவரின் குணநலன்களைப் போற்றிப் பாராட்டியிருக்கிறேன். அவரால் நடைமுறைப்படுத்தப்பட்ட நல்ல திட்டங்களுக்குத் தொடர்ந்து முன்னுரிமை கொடுக்கப்படும். சத்துணவுத் திட்டம் இன்னும் நல்ல முறையில் அமலாக்கப்படும்.

மூன்று முக்கிய பணிகளை நிறைவேற்றுவதில் நான் உறுதிபூண்டிருக்கிறேன். அவையாவன :

தூய்மையான நிர்வாகம்,

எல்லா நிலைகளிலும் நிர்வாகத்தைத் திறமையான தாகவும், விரைவானதாகவும் ஆக்குதல்,

மக்களது தேவைகளை நிறைவு செய்வதில் நிர் வாகத்தைப் பொறுப்புடையதாக்குதல் - மக்களின் பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரி களை மக்கள் எளிதில் சந்திக்கும் நிலையை உருவாக்கு தல்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக மிக நேர்மை யான முறையிலும் - பாகுபாடற்ற முறையிலும் - மிக விரைவிலும் சட்டமன்றத் தேர்தலை நடத்துவதற்குரிய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வேன்.

வீடுதோறும் சென்று வாக்காளர் பட்டியல் தயா ரிக்கும் பணியும், வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியும் முடிவடைந்து விட்டன. அச்சமற்ற-தூய்மை மிக்க தேர்தல் நடைபெறுவதற்குரிய ஏனைய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

தலைமைச் செயலகத்திற்குச் சென்று ஒவ்வொரு அலுவல்நாளிலும் பணிஆற்றுவதுடன், எனது சக அதிகாரிகளுடன் நாள்தோறும் தொடர்பு வைத்துக் கொள்வேன்; என்னைச் சந்திக்க விரும்பும் பார்வை யாளர்களையும் சந்திப்பேன்.

நேர்மையான முறையிலும், அச்சமற்ற தன்மை யிலும் தங்களது அதிகாரங்களைப் பயன்படுத்தும்படி யும், பிரச்சினைகளுக்கு விரைவான முறையில் தீர்வு காணும்படியும் துறைச்செயலாளர்களை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். தங்களது பிரச்சினைகளுக்குரிய தீர்வு விரைவாகவும் சரியான முறையிலும் கிடைக்க வேண்டும் என்று நம்மிடமிருந்து எதிர்பார்ப்பதற்குப் பொது மக்களுக்கு உரிமை இருக்கிறது. காலந்தவறாமை, தூய்மை இவை ஓர் அரசின் சிறப்பம்சங்கள் என்பதை எனது சக அலுவலர்களுக்குத் தெளிவுபடுத்துவேன்.

ஏழை எளிய மக்கள் - குறிப்பாக ஆதிதிராவிட பழங்குடி மக்கள் நல்வாழ்விற்குரிய திட்டங்களை நிறை வேற்றுவதில் தனிக்கவனம் செலுத்துவேன்.

இதுபோன்ற ஒரு சில திட்டங்கள் இன்னும் சில நாட்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவை முன்னுரிமை யுடன் மேற்கொள்ளப்படும். இவற்றைப்போலவே குடி தண்ணீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதிலும் தீவிர கவனம் செலுத்தப்படும். சென்னை போன்ற நகர்ப் புறங்களிலும், கிராமப்புறங்களிலும் குடிதண்ணீர்ப் பற்றாக் குறையை நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும்.

தமிழகத்தின் ஆண்டுத் திட்டப்பணிகளுக்காக - மத்திய அரசிடமிருந்து 1457 கோடி ரூபாய் ஒப்புதல் பெறப்பட்டது. இதுவரை எந்த மாநிலத்திற்கும் ஒதுக் கப்படாத அளவு, அதிகமான தொகை இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தை உன்னதமான மாநிலமாக ஆக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது, தமிழக மக் களும் அரசுக்குத் துணையாக இருந்து முழு ஒத்துழைப் பையும் ஆதரவையும் நல்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

—மேதகு ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் பதவி ஏற்றபின் நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து (17-2-'88).

## தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகராக 4-2-1988-இல் பொறுப்பேற்றுள்ள டாக்டர் சிவீந்தர் சிங் சித்து இ.ஆ.ப., (ஓய்வு)

### வாழ்க்கைக் குறிப்பு



**பிறந்த நாள் :**

13.10.1929.

**கல்வி:**

எம்.ஏ. இந்தோ-பிரெஞ்சு தொழில் நுட்பக் கூட்டுறவுத் திட்டத்தின்கீழ் பிரான்சில் ஆறுமாதக் காலம் பொது நிர்வாகத்தில் பயிற்சி.

**அறிந்த பிற மொழிகள் :**

பிரெஞ்சு, பாரசீகம்

**பயின்ற இடங்கள் :**

லூதியானாவில் ஆர்யா உயர்நிலைப்பள்ளி, லாகூரில் கிறித்தவக் கல்லூரி; டெல்லியில் புனித ஸ்டீபன் கல்லூரி.

**பணி :**

1951-இல் போட்டித் தேர்வில் வெற்றிபெற்று, 2.4.1952இல் பணியில் சேர்ந்தார்.

2.4.1952 முதல் 1953 மார்ச் வரை ஐ.ஏ.எஸ் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி, 2.4.1953 முதல் 4.2.1954 வரை லக்னோவில் உதவி ஆணையர்; 12.2.1954 முதல் 3.1.1955 வரை அலகாபாத்தில் இணை மாஜிஸ்டிரேட்; 5.1.1955 முதல் ஜூலை 13 வரை பண்டா மாவட்டத்தில் உதவி கோட்ட அலுவலர் மற்றும் உதவிக் கோட்ட மாஜிஸ்டிரேட்; 1955 ஜூலை 17 முதல் 1956 ஜனவரி 19 வரை லலித்பூர் மாவட்டம் ஜான்சியில் உதவி கோட்ட அலுவலர் மற்றும் உதவிக் கோட்ட மாஜிஸ்டிரேட்; 1956 ஜனவரி 21 முதல் மார்ச் 2 வரை ஜலானில் மாஜிஸ்டிரேட் மற்றும் மாவட்ட ஆட்சியர்;

1956 மார்ச்10 முதல் ஏப்ரல் வரை லலித்பூர் மாவட்டம் ஜான்சியில் உதவி கோட்ட அலுவலர் மற்றும் உதவிக் கோட்ட மாஜிஸ்டிரேட், மே முதல் 1957 நவம்பர் 5 வரை ஜலானில் மாஜிஸ்டிரேட் மற்றும் மாவட்ட ஆட்சியர்; 1957 ஏப்ரல் 11,12 ஜான்சியில் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு);

1957 நவம்பர் 6 முதல் மத்திய உள்துறை அமைச்சகத்தில் பணி; நவம்பர் 23 முதல் 1959 பிப்ரவரி வரை அந்தமான் நிகோபார் தீவு போர்ட்பிளேயரில் துணை ஆணையர்; 1959 மார்ச் 3 முதல் வெளிநாட்டில் பொது நிர்வாகப் பயிற்சி;

1959 டிசம்பர் 21 முதல் 1960 மே 13 வரை உத்தரப்பிரதேசம் கேரியில் துணை ஆணையர்; மே 16 முதல் 1963 ஏப்ரல் 19 வரை லக்னோவில் உத்தரப் பிரதேசத் திட்டத் துறையில் துணை வளர்ச்சி ஆணையர் மற்றும் அரசு துணைச்செயலர்; 1963 ஏப்ரல் 20 முதல் 1964 ஏப்ரல் 21 வரை லக்னோவில் உத்தரப் பிரதேசத் திட்டத்துறையில் இணை வளர்ச்சி ஆணையர் மற்றும் அரசு இணைச்செயலர்; 1964 ஏப்ரல் 22 முதல் செப்டம்பர் 9 வரை லக்னோவில் தலைமைச் செயலர் அலுவலகத்தில் அரசு இணைச் செயலர், தொழில்துறை இணைச்செயலர் மற்றும் பண்பாடு-அறிவியல் ஆய்வுத் துறை இயக்குநர்; ஜூன் 18 முதல் ஜூலை 19 வரை தொழில்துறைச் செயலர்; செப்டம்பர் 10 முதல், லக்னோவில் உத்தரப்பிரதேச முதலமைச்சரின் செயலர்; பண்பாடு அறிவியல் ஆய்வுத்துறைச் செயலர் மற்றும் இயக்குநர்; அத்துடன் செப்டம்பர் 12 முதல், செய்தித் துறைச் செயலர்;

1965 ஜனவரி 25 முதல், தொழிற் கல்வித் துறைச் செயலர், 27.7.1967 முதல் கான்பூரில் மாஜிஸ்டிரேட் மற்றும் மாவட்ட ஆட்சியர்; 7.7.1970 முதல் கல்கத்தாவில் மத்திய அரசு இரும்பு உருக்கு கட்டுப்பாடு அலுவலர்; 18.3.1972 முதல், மத்திய அரசு உருக்கு, சுரங்கத்துறை அமைச்சகத்தில் உருக்குத்துறை இணைச் செயலர், 9.7.1975 முதல் புதுடெல்லியில் மத்தியஅரசு உள்துறை அமைச்சகத்தில் இணைச்செயலர்; 21.7.1976 முதல் உள்துறை அமைச்சகத்தில் கூடுதல் செயலர், 1977 அக்டோபர் முதல் கான்பூரில் நகர் மகாபாலிகா நிர்வாக அலுவலர்; 20.12.1978 முதல் ஆக்ரா கோட்ட ஆணையர்;

23.8.1980 முதல் மத்திய அரசு ஊரகச் சீரமைப்பு அமைச்சகத்தில் கூடுதல் செயலர்; 1.7.1981 முதல் மத்திய அரசு நல்வாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகத்தில் செயலர்; 11.2.1985 முதல், மத்திய அரசு சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகத்தில் செயலர், பஞ்சாப் மாநில ஆளுநரின் ஆலோசகர்.

தற்போது மேதகு தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.

## தமிழ்நாடு ஆளுநர் ஆலோசகராக 4-2-1988-இல் பொறுப்பேற்றுள்ள

# திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப.

### வாழ்க்கைக் குறிப்பு

**பிறந்தநாள்:**

*14.12.1928*

**கல்வி:**

எம்.ஏ (பொருளாதாரம், பொதுநிதி, அரசியல் மற்றும் வரலாறு-சென்னைப் பல்கலைக்கழகம்)

**பணி:**

*1951*-இல் அரசுப்பணியில் சேர்ந்தார். துணை ஆட்சியராகவும், மாவட்ட ஆட்சியராகவும் பணியாற்றி சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளையும், வளர்ச்சிப் பணிகளையும் திறம்பட கவனித்தார்.

மாநில அரசில் நிர்வாகத்துறை, மற்றும் தலைமைச் செயலகத் துறைகளில் முக்கியப் பதவிகளை வகித்தார். தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கழகம் ஏற்பட உழைத்தார். அதன் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் என்ற வகையில், பொதுத்துறையிலும், பொது மற்றும் தனியார் துறைகளிலும் பல பெரும் தொழில் திட்டங்களுக்குத் திட்டமிட்டு அவை ஏற்படப் பாடுபட்டார்.

நடுத்தர மற்றும் சிறுரகத் தொழில்கள் பலவற்றை ஏற்படுத்தும் பதவிப் பொறுப்புகளில் இருந்துள்ளார்.

வெளிநாடுகளில் தொழில் திட்டங்களை ஆய்வதற்கும், பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் சென்ற குழுக்களுக்குத் தலைமை தாங்கிச் சென்றுள்ளார். தொழில் துறைச் செயலாளராகப் பணியாற்றியபோது, தமிழ் நாட்டில் தொழிற்கொள்கை உருவாக்கல், திட்டமிடல், வளர்த்தல் ஆகியவற்றுக்கு முழுப் பொறுப்பு வகித்தார்.

பொதுப்பணித்துறை, நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைச் செயலாளராக இருந்தபோது, பாசனம், கட்டிடம், சாலைகள், நல்வாழ்வு, குடும்பநலம் ஆகிய துறைகளின் கொள்கைகளை உருவாக்குவதில் சிறப்பாகப் பணியாற்றினார்.

மின்வாரியத் தலைவராக இருந்தபோது, நீர் மற்றும் அனல் மின்திட்டங்களை நிறைவேற்றி, மாநிலத்தில் மின் வளத்தைப் பெருக்கினார்.

தொழிலாளர் நலத்துறைச்செயலாளராக இருந்தபோது தொழில்துறையில் நல்லுறவுக்கும், தொழிலாளர் நலச் சட்டங்கள் உருவாக்கவும், தொழிலாளர் நலவாழ்வுக்கும் பாடுபட்டார்.

இருபதாயிரம் தொழிலாளர்களைக் கொண்ட தனியார் நிறுவனமான பின்னி கம்பெனி தவறான நிர்வாகம் மற்றும் நஷ்டம் காரணமாக நெருக்கடியில் சிக்கி, அதன் துணி ஆலை மூடியிருந்தபோது, அந்தக்கம்பெனியைச் சீரமைக்க இந்திய அரசின் வேண்டுகோளின்படி மாநில அரசால் அதன் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்ட இவர், திறம்படச் செயல்பட்டு, மூடியிருந்த ஆலை திறக்கப்படவும் பின்னி கம்பெனி வெற்றிகரமாகச் செயல்படவும் அரும்பணி ஆற்றினார்.

மத்திய அரசில் கப்பல் மற்றும் போக்குவரத்து அமைச்சகத்தின் இணைச் செயலராகப் பணியாற்றும் போது, பெரும் துறைமுகங்களுக்கான கொள்கைகள், பணித்திட்டங்களை வகுப்பதில் பெரும்பங்காற்றினார். சிங்கப்பூர் துறைமுக வளர்ச்சிக்கழகம் நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

இந்தியாவுக்கும் மற்ற வெளிநாடுகளுக்கும் இடையே கப்பல் போக்குவரத்து ஒப்பந்தங்கள் ஏற்



படுத்தச் சென்றிருந்த தூதுக் குழுக்களுக்குத் தலைவராக இருந்து அரும்பணி ஆற்றியிருக்கிறார்.

சோவியத் யூனியன், யுகோஸ்லாவியா, அல்ஜீரியா போன்ற வெளிநாடுகள் பலவற்றுக்கு இந்தியாவிலிருந்து சென்ற தூதுக்குழுக்கள் பலவற்றில் இவர் அங்கம் வகித்திருந்தார். சுவீடனில், அரசுகளுக்கிடையேயான கடல் ஆலோசனை அமைப்பினால் நடத்தப்பட்ட ''உலகக் கடல் பாதுகாப்பு மற்றும் கடல், சுற்றுப்புறத் தூய்மைப் பாதுகாப்புக் கருத்தரங்கில்'' இவர் கலந்து கொண்டார். யுகோஸ்லாவியா, அல்ஜீரியா, சோவியத் யூனியன், இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளில் நடைபெற்ற விவாதங்களில் கலந்து கொண்ட பெருமையும் இவருக்கு உண்டு. சோவியத் யூனியனில் நடைபெற்ற கடல், அடிப்படையான தொழில்கள் பற்றிய பயிற்சி வகுப்பிலும் கலந்து கொண்டார்.

கப்பல் போக்குவரத்து, கப்பல் அபிவிருத்தி போன்ற தேசியக் குழுக்களில் அங்கம் வகித்திருக்கிறார்.

கப்பல் போக்குவரத்து முறைகேடுகள் பற்றிய ஆய்வுக் குழுவுக்குத் தலைமை வகித்திருக்கிறார் (பத்மநாபன் குழு).

மத்திய தேர்வாணைக்குழு, கனிம, மற்றும் உலோக வர்த்தகக் கழகம், மாநில வர்த்தகக் கழகம், ஆகியவற்றிலும் நிர்வாகிகள், உயர் அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் பல அமைப்புகளிலும் அங்கம் வகித்துள்ளார்.

சுற்றுப்புறத் தூய்மைப் பாதுகாப்பு பற்றிய உலக வங்கியின் நிபுணர் குழுவில் இவரும் ஒரு நிபுணராக இருக்கிறார். சுற்றுப்புறச் சூழல், சத்துணவு மற்றும்

பாசனத் திட்டங்களை வகுக்கும் உலகவங்கிக் கூட்டங்கள் வாஷிங்டனில் நடைபெற்றபோது, இவரும் கலந்து கொள்கிறார். வருவாய் நிர்வாகச் சிறப்பு ஆணையர் மற்றும் நிவாரணப்பணி ஆணையராக இருந்தபோது, தமிழ்நாட்டில் புயல் வெள்ளச் சேதங்கள் தடுப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருந்து, திறம்படச் செயல்பட்டார்.

1983 டிசம்பர், 1984 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வெள்ளச் சேதம் ஏற்பட்டபோதும், 1983 ஆம் ஆண்டு மத்தியில் கடும் வறட்சி நிலவியபோதும் பிரச்சினைகளைச் சமாளிக்க வழிகாட்டினார்.

1.8.85 முதல், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் நிலையில் கண்காணிப்பு ஆணையாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றார். பின்னர் தமிழக அரசு தலைமைச் செயலராக நியமிக்கப்பட்டார். 21.7.1986 முதல் இப்பதவியில் தொடர்ந்து பணியாற்றி வந்திருக்கிறார். இவரது முதிர்ந்த அனுபவத்தையும் ஆற்றலையும் கருத்தில் கொண்டு இவருக்கு ஆறு மாதங்கள், ஆறு மாதங்கள் என்று இருமுறை மத்திய அரசால் பதவி நீட்டிப்பு அளிக்கப்பட்டது (30.6.88 வரை). தற்போது மேதகு ஆளுநரின் ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.

**சிறந்த எழுத்தாளர் - சிறந்த பேச்சாளர்**

இவர் சிறந்த எழுத்தாளர்; சிறந்த பேச்சாளர்; ஆங்கிலத்தில் இவர் எழுதிய ''மழைத்துளிகள்'' ''மெழுகுவர்த்தியை ஏற்று'' ஆகிய கவிதை நூல்களும் ''புனித நந்தனார்'' என்ற உரை நடை நூலும் உலகப் புகழ் பெற்றன. இவரது இலக்கியப் படைப்புகளுக்காக டாக்டர் பட்டம் இவருக்கு அளிக்கப்பட்டது.

**வகித்த முக்கிய பதவிகள்**

1. வணிகவரி துணை ஆணையர், சென்னை.
2. வணிகவரி ஆணையரின் செயலர், ரெவின்யூ போர்டு, சென்னை.
3. மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம்
4. மீன்வளத்துறை இயக்குநர்
5. தலைவர், மற்றும் நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு தொழில்வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ).
6. அரசு கூடுதல்செயலர், தொழில்துறை.
7. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் லிமிடெட்(சிட்கோ) சென்னை.
8. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் லிமிடெட் (டான்சி)
9. அரசுச் செயலர், பொதுப்பணித்துறை.
10. தலைவர், தமிழ்நாடு மின்வாரியம்.
11. அரசுச் செயலர், நல்வாழ்வு-குடும்பநலத்துறை.
12. அரசுச் செயலர், தொழில்துறை.
13. அரசுச் செயலர், தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத்துறை.
14. நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலர், பின்னி லிமிடெட்.
15. இணைச் செயலர், இந்திய அரசு கப்பல் மற்றும் போக்குவரத்து அமைச்சகம், புதுடெல்லி.
16. தலைவர், தமிழ்நாடு மாநிலத் தொழில் வளர்ச்சி வாரியம் லிமிடெட், (சிப்காட்) சென்னை.
17. சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் வருவாய் நிர்வாகத்துறை, தமிழ்நாடு அரசு.
18. தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலர் நிலையில் நிர்வாகச் சீர்திருத்தத்துறை ஆணையர், மற்றும் கண்காணிப்பு ஆணையர்
19. தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலர்
20. தமிழ்நாடு அரசு மேதகு ஆளுநரின் ஆலோசகர்



## தமிழ்நாடு அரசு
## தலைமைச் செயலர்
# திரு எம். எம். இராஜேந்திரன், இ.ஆ.ப.
## வாழ்க்கைக் குறிப்பு

மதுரையைச் சேர்ந்த இவர், 12.4.1935ல் பிறந்தார். தாம்பரம் கிறித்துவக் கல்லூரியில் பயின்று பி.எஸ்ஸி. ஆனர்சு,எம்.ஏ இயற்பியல் பாடத்தில் முதல் வகுப்பில் பல்கலைக் கழகத்திலேயே முதல் தகுதியுள்ள மாணவராகத் தேறினார்.

1957ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.எப்.எஸ். மற்றும் ஐ.ஏ.எஸ் தேர்வுகளில் இந்தியாவிலேயே இரண்டாவது மாணவராகவும், தமிழ்நாட்டிலேயே முதல் தகுதி பெற்ற மாணவராகவும் தேறினார்.

1964 முதல் 1968 வரை இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் ஆட்சியாளராக அரும்பணி ஆற்றிய இவர், பின்னர், தொழிலாளர்நல ஆணையாளராகவும், வேலைவாய்ப்புத் துறை, வீட்டு வசதித்துறை, பொதுப்பணித்துறை ஆகியவற்றின் செயலராகவும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு மின்வாரியம் ஆகியவற்றின் தலைவராகவும், சமூக நலத்துறை, உள்ளாட்சித்துறை ஆகியவற்றின் செயலாளராகவும் பணியாற்றினார். 1976 முதல் இந்திய அரசின் கல்வி சமூக நலத்துறை அமைச்சகத்தில் இணைச் செயலராகவும், சத்துணவு மற்றும் குழந்தைகள் வளர்ச்சிச் செயலகத் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

1977ல் யுனிசெப் நிர்வாகக் கழகத்திற்கு அனுப்பப்பெற்ற இந்தியப் பிரதிநிதிகளுக்குத் தலைமை ஏற்றுச் சென்ற இவர், பின்னர் யுனிசெப் பணிக்குழு உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். யுனிசெப் நிர்வாகக் கழக உறுப்பினராகவும் இவர் செயல்பட்டார். தமிழ்நாடு சத்துணவுத்திட்டத்திற்கு உலக வங்கி உதவியைப் பெற இவர் உறுதுணை புரிந்தார்.

1981 ஜூன் திங்கள் முதல் 1987 ஜனவரி முடிய நியூயார்க் நகரில் யுனிசெப்பின் முதுநிலை ஆலோசகராகப் பொறுப்பேற்றிருந்தார். மைய அரசின் வேண்டுகோளுக்கிணங்க, தாயகம் திரும்பிய இவர், 1987 பிப்ரவரித் திங்களில் தமிழ்நாடு கண்காணிப்பு ஆணையராகவும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் ஆணையராகவும் பணிபுரிந்தார். பின்னர் தலைமைச் செயலர் நிலைக்குப் பதவி உயர்வு பெற்றார்.

6.2.1988 அன்று தமிழக அரசின் தலைமைச் செயலராகப் பொறுப்பேற்றார்.

# அண்ணலின் பொன்மொழிகள்



* உண்மையும் அகிம்சையும் மனித சமூகத்தை விட்டுவிட்டுத் தனியாக உட்கார்ந்துகொண்டு அனுஷ்டிக்க வேண்டிய அறங்களல்ல; அவை மனிதவர்க்கம் தினசரி வாழ்க்கையில் உபயோகிக்க வேண்டிய அறங்களாகும்.

* நம்மிடம் அன்பாக இருப்பவர்களிடம் மட்டுமே அன்பாக இருப்பது என்பதல்ல அகிம்சை-நம்மை வெறுப்பவர்களிடமும் அன்பு கொள்வது ஒன்றே அகிம்சை.

* சமூக அநீதி எங்கே நடப்பதாக இருந்தாலும் சரி, அதை எதிர்க்காத யாரும், தீவிரமாக அகிம்சையை அனுசரிப்பவராக இருக்க முடியாது.

* தீண்டாமையைத் தாக்குவது உயர்வு தாழ்வு வேற்றுமையைத் தாக்குவதாகும். தீண்டாமை ஒழிந்தால், அதே விநாடியில் சாதிமுறை பரிசுத்தமாகிவிடும்.

* கல்வி என்பதற்கு நான்கொண்ட பொருள் ஒழுக்கத்தைப் படிப்படியாக வளர்ப்பது என்பதே.

* ஏழைகளுக்குத் தன்னலமற்ற தொண்டு செய்வதைக் காட்டிலும் அதிகத் தூய்மையான-கடவுளுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய வழிபாடு வேறு எதுவும் இல்லை.

* ஒழுங்கு, தியாகபுத்தி, பணிவு, திடசித்தம் ஆகியவையின்றி உண்மையான முன்னேற்றத்தை அடைய முடியாது. இந்தக் குணங்களை அளிப்பதில் உண்ணாவிரதத்துக்கும், பிரார்த்தனைக்கும் உள்ளது போன்ற சக்தி வேறு எதற்கும் கிடையாது.

* தூய்மையான வழிகளின் மூலம் பெற்ற அதே சுதந்திரத்தை, அதே தூய்மையான, நேர்மையான வழிகளின் மூலம் காப்பாற்றிவர வேண்டும்.

* கெட்ட காற்று வெளியேற வேண்டுமானால், நல்ல காற்று வேகமாக உள்ளே நுழைய வேண்டும். அதுபோல், கெட்ட எண்ணம் வெளியேற வேண்டுமானால், நல்ல எண்ணம் உட்புக வேண்டும்.

* ஒருவன் தன்னைத்தான் பரிசுத்தமாக்கிக் கொள்வதுதான் தன் நாட்டிற்குச் செய்யக்கூடிய சிறந்த சேவையாகும்.

* நான் என்ற அகந்தையை ஒழிப்பது, மிகமிகப் பணிவோடு நடந்துகொள்வது, அதிகமான பொறுமை காட்டுவது, தெளிவான நம்பிக்கையோடிருப்பது-இந்தக் குணங்களெல்லாம் உடையதுதான் சத்தியாக்கிரகமாகும்.

* தேக ஆரோக்கியமுள்ள புத்திசாலிகளான நல்ல குழந்தைகளைத் தேசத்திற்கு அளிக்கும் தாய், தேசத்திற்கு உண்மையாகச் சேவை செய்தவளாகிறாள்.

* சீதனம் என்பது பெண்களை விலைபேசி விற்பதைத்தவிர, வேறொன்றுமில்லை. வரதட்சிணை கொடுத்தால்தான் திருமணம் செய்து கொள்ள முடியும் என்று நிபந்தனை விதிக்கும் எந்த இளைஞனும், தான் படித்த படிப்புக்கும், தன்னுடைய தேசத்திற்கும் அவமதிப்பைத் தேடிக் கொடுத்தவனாகிறான்.

* நமக்குப் பிறர் என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறோமோ, அதையே நாமும் பிறருக்குச் செய்வோமாக.

* என் சொந்த வாழ்வில் பலமுறை பின்பற்றிப் பார்க்காத ஒன்றை மற்றவர்கள் செய்யும்படி நான் சொன்னதே கிடையாது. இதுதான் என் பலமாகும்.

தொகுப்பு : வ. இராசமனோகரன்



# பிரதமர் ராஜீவ்காந்தி அறிவித்த
# புதிய 20 அம்சத் திட்டம் - 1986

### 1. கிராமப்புற வறுமையை நீக்குதல்

ஏழ்மையை அகற்றுவதற்கான திட்டங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் எல்லா ஏழை மக்களுக்கும் போய்ச் சேரும்படி பார்த்துக்கொள்ளப்படும்.

ஊதிய வேலைவாய்ப்புத் திட்டங்கள் வட்டார மேம்பாடு மனிதவள வளர்ச்சித் திட்டங்களோடு இணைக்கப்படும். பள்ளிக் கட்டிடங்கள், சாலைகள், ஏரிகள், எரிபொருள், கால்நடைத் தீவனம் போன்ற தேசிய சமுதாய வசதிகளுக்கு வகை செய்யப்படும்.

உற்பத்தித் திறன், உற்பத்தி ஆகியவற்றை மேம்படுத்த, கிராம வேலை வாய்ப்பை விரிவுபடுத்த, பல்வேறு கிராம மேம்பாட்டுத் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படும்.

கைத்தறி, கைவேலை, கிராம மற்றும் சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும். சுய வேலை வாய்ப்புக்கான திறன் மேம்படுத்தப்படும்.

ஊராட்சிகள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் புத்துயிர் அளிக்கப்படும்.

### 2. மானாவாரி விவசாயப் பாதுகாப்பு

நிலத்தில் ஈரப்பசையைப் பாதுகாப்பதற்கான தொழில் நுட்பம் மேம்படுத்தப்படும். நிலம், நீர் வசதிகள் இன்னும் நல்ல முறையில் நிர்வகிக்கப்படும்.

உரிய, மேம்படுத்தப்பட்ட விதைகள் விநியோகிக்கப்படும்.

வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகள் மற்றும் வறட்சி நிவாரண நடவடிக்கைகளில் உரிய மாற்றங்கள் மூலமாக வறட்சி அதிகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

### 3. பாசன நீரை முறைப்படுத்தல்

நீர் பிடிப்புப் பகுதிகளை மேம்படுத்தி வடிநிலப் பிரதேசங்கள் டெல்டாப்பகுதிகளில் வடிகால் வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும்.

முக்கியப் பகுதிகளில் பாசன நிர்வாகம் மேம்படுத்தப்படும்.

தண்ணீர் தேங்குதல், உப்புத்தன்மை ஏற்படுதல், தண்ணீரை வீணாக்குதல் ஆகியவை தடுக்கப்படும்.

மேற்பரப்புத் தண்ணீர், நிலத்தடி நீர் உபயோகம் ஒருங்கிணைக்கப்படும்.

### 4. விளைச்சலைப் பெருக்குதல்

கிழக்கு வட்டாரத்திலும், உற்பத்தித் திறன் குறைவாக உள்ள மற்ற பகுதிகளிலும் அரிசி உற்பத்தியில் புரட்சிகரமான மாற்றங்கள் செய்யப்படும்.

சமையல் எண்ணெய்யில் தன்னிறைவு எட்டப்படும். பருப்பு வகைகள் இன்னும் அதிகமாக உற்பத்தி செய்யப்படும்.

பழம், கறிகாய் சாகுபடி தீவிரப்படுத்தப்படும். விவசாயப் பண்டங்கள் தொடர்பாக நவீன சேமிப்பு வசதி, பக்குவப்படுத்தும் வசதி, மற்றும் விற்பனை வசதி ஆகியவை அதிகரிக்கப்படும்.

கால்நடை வளர்ச்சிக்கும் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யும் விவசாயிகளின் உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்வதற்கும் உதவி வழங்கப்படும்.

மீன் பண்ணை மற்றும் மீன் பிடிப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

### 5. நிலச் சீர்திருத்தங்களை அமல் செய்தல்

நில ஆவணங்கள் நிறைவு செய்யப்படும்.

விவசாய நில உச்சவரம்பு நிர்ணயிக்கும் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டு விடும்.

உபரி நிலம், நிலமற்றவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

### 6. கிராமப்புறத் தொழிலாளர்களுக்குச் சிறப்புத் திட்டங்கள்

விவசாய சிறப்புத் தொழில்துறைகளில் ஒழுங்குபடுத்தப்படாத தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் அமலாக்கப்படும்.

பிணைத் தொழிலாளர் முறையை அகற்றும் சட்டங்கள் பூரணமாக நிறைவேற்றப்படும்.

பிணைத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களில் தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படும்.

### 7. சுத்தமான குடிநீர் வழங்குதல்

எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாப்பான தண்ணீர் வழங்கப்படும்.

இது போன்ற தண்ணீர் வழங்கு மூலாதாரங்களை நல்ல முறையில் பராமரிப்பதற்கு உள்ளூர் மக்களுக்கு உதவி வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ருக்குத் தண்ணீர் விநியோகம் தொடர்பாகத் தனிக் கவனம் செலுத்தப்படும்.

### 8. அனைவருக்கும் சுகாதார வசதி

ஆரம்பச் சுகாதாரப் பாதுகாப்பின் தரம் மேம்படுத்தப்படும்.

தொழுநோய், காசநோய், மலேரியா, பார்வை இழப்பு மற்றும் பெரும் நோய்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடப் படும்.

கிராமப்பகுதிகளில் குறிப்பாக பெண் களுக்கு, கழிப்பறை, குளியலறை போன்ற வசதிகளுக்கு வகை செய்யப்படும்.

ஊனமுற்றோர்களின் மறுவாழ்வுக் கான திட்டங்களில் தனிக்கவனம் செலுத்தப் படும்.

### 9. குடும்பத்திற்கு இரண்டே குழந்தைகள்

இரண்டு குழந்தை நெறியை, மக்கள் தாங்களாகவே ஏற்றுக் கொள்வதற்கு வகை செய்யப்படும்.

பெற்றோர்களிடையே பொறுப்பு உணர்ச்சி வளர்க்கப்படும்.

குழந்தை மரணவிகிதம் குறைக்கப்படும்.

மகப்பேறு, குழந்தைப் பாதுகாப்பு வசதி விரிவுபடுத்தப்படும்.

### 10. கல்வித் திட்டத்தை விரிவுபடுத்துதல்

ஆரம்பக் கல்வி எல்லாருக்கும் கிடைக்கும் படி செய்யப்படும். இதில் பெண் கல்வியில் தனிக்கவனம் செலுத்தப்படும்.

எல்லா மட்டங்களிலும் கல்வியின் தரம் மேம்படுத்தப்படும்.

முறைசாராக் கல்வி மற்றும் எழுத்தறி விப்புத் திட்டங்கள் மேம்படுத்தப்படும். திற மையை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக் கப்படும்.

மாணவர்கள் மற்றும் தொண்டு நிறு வனங்களின் ஒத்துழைப்புடன் முதியோர் கல்வித்திட்டத்திற்கு ஊக்கம் அளிக்கப்படும்.

தேசிய ஒருமைப்பாடு, சமூகப்பண்புகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு, நமது பாரம்பரியத்தின் பெருமையை உணரும் படி செய்யப்படும்.

### 11, தாழ்த்தப்பட்டோருக்கு நியாயம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக் கான அரசியல் ரீதியான வசதிகள், சட்டங்கள் பின்பற்றப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ருக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலம் அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்யப்படும்.

நில ஒதுக்கீட்டுத் திட்டத்திற்கு வலு வூட்டப்படும்.



கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற் கான தனிப் பயிற்சி வகுப்புகளுக்கு வகை செய்யப்படும்.

சிறப்புத் திட்டங்களுக்கு இன்னும் நல்ல முறையில் போதிய நிதி வசதிக்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தின் மற்ற பிரிவினருடன் பூரணமாக இணைந்து வாழ்வதற்குத் திட்டங்கள் மேற் கொள்ளப்படும்.

சொந்த இடத்திலிருந்து குடிபெயர்ந் துள்ள பழங்குடியினர் மறுவாழ்வுக்கு வகை செய்யப்படும்.

### 12. பெண்களுக்குச் சம உரிமை

பெண்களின் நிலை உயர்த்தப்படும்.

பெண்களுக்குரிய பிரச்சனை சம்பந்தமாக இன்னும் அதிக விழிப்பு உணர்ச்சி ஏற்படுத்தப் படும்.

பெண்களின் உரிமைகளைப்பற்றி மக்கள் தெரிந்துகொள்வதற்கு ஆவன செய்யப்படும்.

பெண்களின் பயிற்சி, வேலைவாய்ப்புக் கென தேசியத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

சமூக, பொருளாதார மேம்பாட்டு நட வடிக்கைகளிலும், நாட்டை நிர்வகிக்கும் பணி களிலும், பெண்களும் சம பங்கு பெறுவதற்கு வகை செய்யப்படும்.

வரதட்சிணைக்கு எதிராக மக்களிடையே விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்திவரதட்சிணை ஒழிப்புச் சட்டம் பயன் உள்ள முறையில் நிறைவேற்றப்படும்.

### 13. இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள்

விளையாட்டுகளிலும், கலாச்சார நட வடிக்கைகளிலும், தீரச் செயல்களிலும், இளைஞர்களுக்கு இன்னும் அதிக வாய்ப்பு அளிக்கப்படும்.

உடல் வலிமை பேணிப் பாதுகாக்கப் படும்.

கங்கை நதியைத் தூய்மைப்படுத்துவது, சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பது, மக்க ளுக்குப் பெரும் அளவில் கல்வி வசதி அளிப் பது போன்ற தேசிய அபிவிருத்தித் திட்டங் களில் இளைஞர்கள் பெரும் அளவில் ஈடு படுத்தப்படுவார்கள்.

எல்லாத் துறைகளிலும் சிறப்பு வாய்ந்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர் களுடைய திறன் மேம்படுத்தப்படும்.

தேசிய ஒருமைப்பாடு, கலாச்சாரப் பண்பாடுகள், மதச் சார்பின்மை, அறிவியல் உணர்வு ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளில் இளைஞர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

நேரு யுவ கேந்திரங்களின் கூட்டமைப்பு விரிவுபடுத்தப்படும்.

தேசிய சேவைத் திட்டம், தேசிய மாணவர் படை ஆகியவை வலுப்படுத்தப்படும்.

கிராமப்புற இளைஞர்களின் நலனுக்காகப் பாடுபடும் தொண்டு நிறுவனங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.



### 14. வீட்டுவசதி

கிராமப்புற ஏழை மக்களுக்கு வீட்டு மனைகள் கிடைக்கும்படி செய்யப்படும்.

குடியிருப்பு கட்டுமானப்பணிகள் விரிவு படுத்தப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான குடியிருப்பு கட்டுமானப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

குறைந்த செலவில் கட்டுமானப் பொருட்கள் உருவாக்கப்படும்.

### 15. குடிசைப் பகுதிகளைச் சீர் செய்தல்

குடிசைப்பகுதிகள் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படும்.

ஏற்கனவே உள்ள குடிசைப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

நகர்ப் பகுதிகளில் திட்டமிட்ட குடியிருப்பு கட்டுமானப் பணிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

### 16. வனப் பாதுகாப்புக்கும் புதிய திட்டம்

மக்களின் முழு ஈடுபாட்டுடன் இன்னும் அதிகமான மரங்களும் காடுகளும் வளர்க்கப்படும்.

வனப் பொருட்கள் சம்பந்தமாக, பழங்குடி மக்களுக்கும், உள்ளூர் மக்களுக்கும் உள்ள பரம்பரை உரிமைகள் பாதுகாக்கப்படும்.

தரிசு நிலங்கள் பயனுள்ள காரியங்களுக்காகச் சீர் செய்யப்படும்.

மலை, பாலைவனம் மற்றும் கரையோரப் பகுதிகளில் உரிய தாவரங்கள் வளர்க்கப்படும்.

### 17. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு

சுற்றுப்புறச் சூழல் குறைபாடுகளினால் ஏற்படக்கூடிய அபாயத்தை மக்கள் உணரும்படி செய்யப்படும்.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்கு மக்களின் ஆதரவு திரட்டப்படும்.

இடைவிடா அபிவிருத்திக்குச் சமச்சீரான தட்ப வெப்ப நிலையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படும்.

பல்வேறு திட்டங்களுக்கு நிலத்தைத் தெரிந்தெடுப்பதில் உரிய கவனம் செலுத்தப்படும்.

### 18. உபயோகிப்பாளர் நலனைக் காத்தல்

அவசிய உபயோகிப்பாளர் பண்டங்கள் ஏழை மக்களுக்கு எளிதாகக் கிடைக்கும்படி செய்யப்படும்.

உபயோகிப்பாளர் பாதுகாப்பு இயக்கம் ஒன்று உருவாக்கப்படும்.

உதவித்தொகைகள் அத்தியாவசியமானவர்களுக்குப் போய்ச் சேர்வதற்கு ஏற்ப, விநியோக முறை திருத்தி அமைக்கப்படும்.

பொது விநியோக முறை வலுப்படுத்தப்படும்.



### 19. கிராமங்களுக்கு மின் வசதி

கிராமங்களில் பயன்தரக்கூடிய தானியங்கிகளுக்கு மின்சக்தி வசதி விரிவுபடுத்தப்படும்.

மாற்று எரிபொருள் குறிப்பாக, சாண எரிவாயுக்கு வகை செய்யப்படும்.

கிராமப்புற எரிபொருள் உற்பத்திக்காக இணைப்பான வட்டாரத் திட்டங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

### 20. பயனுள்ள நிர்வாகம்

நடைமுறை எளிதாக்கப்படும்.
அதிகாரம் பரவலாக்கப்படும்.

பொறுப்புகள் வலியுறுத்தப்படும்.

வட்டார மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை கண்காணிப்பு முறைகள் உருவாக்கப்படும்.

பொதுமக்களின் குறைகள் உடனுக்குடன் பரிவுடன் கவனிக்கப்படும்.



# வனவளத்தில் 20 அம்சத்திட்டச் சாதனைகள்

இயற்கை நமக்களித்துள்ள பல அரிதான செல்வங்களுள் வனவளம் முக்கியமான தொன்றாகும். இயற்கை அமைப்பில் வனம் அடிப் படையான ஓர் அங்கமாக உள்ளது. மனித வாழ்வுக்கு ஆதாரமான அடிப்படைத் தேவைகளை அளிப் பது காடுகளாகும். நீரூற்றுக்களில் நீர் வளம் வற்றாமலிருக்கவும், வெள்ளச்சேதத்தைத் தடுத்திடவும், நில வளத்தைக் காத்து நமது நல வாழ்விற்குப் பயன்படுத்தத்தக்க நிலப்பரப்பினை அதிகப்படுத்தத் தேவைப்படும் மரங்களைப் பாது காக்கவும், காடுகள் வழி கோலு கின்றன. சீதோஷ்ண நிலை, சுத்த மான காற்று இவைகளையும் தக்க படி பெறுவதற்குக் காடுகள் மிக்க உதவி புரிகின்றன.

காடு வளர்ப்பில் நமது முக்கிய மான குறிக்கோள், முதலாவதாக, ஒதுக்கக் காடுகளில் தற்போதுள்ள பசுமை வளம் குன்றாத காடுகளைப் பாதுகாப்பதாகும். அடுத்து, தரிசு நிலங்களிலும், மற்றப் பொது நிலங் களிலும், மரங்கள் வளர்த்துப் பசுமை ஏற்படுத்துவதுமாகும். இது குறித்துத் தக்க நடவடிக்கைகள் தமிழக வனத்துறையினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

## வனப்பாதுகாப்பு (அம்சம்: 16)

பாரதப் பிரதமரின் புதிய 20 அம்சத் திட்டத்தில், அம்சம் 16-இல் பொதுமக்கள் உதவியுடன் மரங்களை நிறைய வளர்த்துக் காட்டுவளம் பெருக்குவது, பழங் குடியினர் மற்றும் வறுமைக்கோட் டின் கீழ் இருக்கும் மக்களின் உரிமை களைக் காத்தல், அவர்கள் வாழ் வினை மேம்படுத்துவது, அவர் களுக்கு விறகு மற்றும் இதர வனப் பயன்படு பொருட்கள் கிடைக்கச் செய்வது, தரிசு நிலங்களைப் பொது மக்கள் உதவியுடன் மேம்படுத்திப் பயன்பெறச் செய்வது, மலை இடங்கள், பாலைப்பகுதிகள் மற்றும் கடலோரப் பகுதியில் பொதுமக்கள் உதவியுடன் மரக் கன்றுகள் நட்டு வனவளம் பெருக்கு வது ஆகிய பணித் திட்டங்கள் கோட்பாடுகளாக நிர்ணயிக்கப்பட் டுள்ளன.

பொதுவாக, தாவரங்கள், விலங் கினங்கள் போன்ற அனைத்து உயிரி னங்களும் வாழப் பாதுகாப்பான உறைவிடமாகக் காடுகள் விளங்கு கின்றன. ஒதுக்கக்காடுகளாகவும், வனவிலங்குப் புகலிடங்களாகவும் உள்ள ஏறத்தாழ 2,18,000எக்டேர் பகுதி இன்னமும் பசுமை மாறாத இயற்கைக் காடுகளாகவே உள்ளன என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இப்பகுதிகள் கூடிய வரை எவ்வித இடையூறுகளுக்கும் உட்படுவ தில்லை. இருப்பினும் இப்பகுதி களிலுள்ள உயிரினச் சூழ்நிலையைத் தக்கபடி பாதுகாக்கவும், மேம் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மர வளர்ப்பினை விரிவுபடுத்து வது தரம் தாழ்ந்த காட்டுப்பகுதி களில்தான் சாத்தியமாகும். அதே சமயத்தில், தற்போதுள்ள மரங்கள் நிறைந்த காட்டுப்பகுதிகளிலேயே அதிக மரங்களை நடுவதோடு ஆங் காங்கு வளரும் தகுந்த இன மரங் களையும் நட்டு வளர்த்து அதிக மான மரங்களை வளர்ப்பதும் அவ சியமாகிறது.

மரங்களடர்ந்த பகுதிகளின் பரப்பினை அதிகரிப்பதுதான் நமது முதல் குறிக்கோள் ஆகும். எனினும் காடுகளைப் பாதுகாக்கும் அனைத்து முயற்சிகளும் வனத்துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராமப் புற மக்களின் எரிபொருள் தேவை யினை நிறைவு செய்யும்பொருட்டு வனவிரிவாக்கப்பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன. சமூக நலக் காடுகள் திட்டம் இதற்கான வாய்ப் பினைத் தருகிறது. வனப்பகுதி களை ஒட்டியுள்ள கிராமப்புறங் களில் சமூக நலக்காடுகள் திட்டத் தினைச் செயல்படுத்துவதன் மூலம் பழங்குடி மக்கள் வனப் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபாட்டுடன் பங்கு கொள்ள வழி செய்யப்படுகிறது. கிராமப்புற மக்களும் பயன் பெறும் வண்ணம் வனப்பணிகளை நிறை வேற்றுவதன் வாயிலாக இது நாள் வரை பயன்படுத்தப்படாத மனித சக்தியினை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தவும், அவர்களின் வாழ்க்கைத்தரம், பொருளாதார நிலை ஆகியவற்றினை மேம்படுத்த வும் வனப்பாதுகாப்புத் திட்டப் பணிகள் மூலம் முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

மேலும் எல்லாச் சமுதாய நிலங்கள், தரிசு நிலங்கள், சாலை ஓரங்கள், இருப்புப்பாதை ஓரங்கள், ஆற்றங்கரைக் கால்வாய்-ஓடைகள் ஓரங்கள், ஏரிகள், குளம் குட்டை களின் கரைகள் ஆகிய இடங்களி லெல்லாம் பொதுமக்களின்-மக்கள் குழுமங்களின் உதவியுடன் பசு மரங்கள் நட்டு வனவளம் அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுமக்கள் நாற்றங்கால் ( People's Nursery ) என்ற திட் டத்தின் கீழ், பொதுமக்களுக்கு

நாற்றுகள் வளர்க்க, கன்று ஒன்றுக்கு 45 காசு வீதத்தில் 1987-88-ஆம் ஆண்டுக்கு 62 இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, மிக்க ஏழைக் குடியானவர்கள், மற்றும் சிறு உழவர்கள், மற்றும் ஊரகவளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே தெரிந்தெடுக்கப்பட்டுள்ள உழவர்கள், சிறு அளவில் நிலம் படைத்தோர் ஆகியோருக்கு விதை, உரம், மற்றும் தொழில்நுட்பம் முதலிய உதவிகளை மானியமாகஅளித்து அவர்கள் வனப்பாதுகாப்புப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் பொது மக்களின் உழைப்பு ஒன்றையே முழுமையாக நம்பிச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மரம் வளர்ப்பு**

தமிழக அரசு நாட்டிலேயே முதல் முறையாக அறிமுகப்படுத்தியுள்ள ஒரு புதுமையான திட்டம் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் எல்லா மாணவர்களுக்கும் மரம் வளர்ப்புக் கலையைக் கற்பிக்கும் வகையில் பாடத்திட்டத்தில் சேர்ப்பதாகும். தற்போது இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. 1981-82 ஆம் ஆண்டு முதல் 1986-87 முடிய காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வனத்துறையினால் 6659.23 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டன. வனப்பண்ணைத் திட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் 2115.41 இலட்சம் மரக்கன்றுகள் அளிக்கப்பட்டன. மேலும், சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 2,06,272 எக்டேர் பரப்பில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

மேலும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**வன வளர்ப்பு ஊக்குவிப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்படி பொதுமக்களுக்குச் சிறிய மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் நிலையில் உள்ள விவசாயிகள், மற்றும் நிலம் இல்லாத ஏழை மக்களுக்கு அவர்கள் வசதிக்குத் தக்கவாறு அதிகபட்சமாக 500 மரக்கன்றுகள் நடுவதற்கு விலை ஏதும் இல்லாமல் இலவசமாக அளிக்கப்படும். ஆதி திராவிடர்கள் மற்றும் கீழ் மட்டப் பொருளாதார நிலையில் உள்ள பொதுமக்கள் இத்திட்டத்தின் கீழ், முதல் உரிமை பெறுவர். இத்திட்டத்தின்படி மரங்கள் பொதுமக்களால் நடப்பட்டு இரண்டாண்டுகள் முடிவில், உயிரோடிருக்கும் மரக்கன்றுகளின் தரத்தைப் பொறுத்து ரூ.2.50 வீதம் பயன்பெறுவோர்க்கு உதவித் தொகை வழங்கப்படும். மரங்கள் நட்டுப் பயன்பெறுவதற்கும் பொதுமக்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். இத்திட்டத்தின்படி ஆண்டுக் குறியீடு 80 லட்சம் மரக்கன்றுகள். 92.22 இலட்சம் மரங்கள் நடப்பட்டு பொதுமக்கள் பயன் பெற்றுள்ளனர்.

**வன வளர்ப்பு விரிவாக்கத் திட்டம்**

இத்திட்டமானது நடுத்தர விவசாயிகள் பயன்பெறும் வண்ணம் அமைக்கப்பட்டது. பொதுவாக நடுத்தர கிராம விவசாயக் குடிமக்களுக்கு மரக்கன்றுகள் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த விலையில் அதிக அளவில் விநியோகிக்கப்படும். விநியோகிக்கப்படும் கன்றுகளின் எண்ணிக்கைக்கு அளவு ஏதும் இல்லை. ஆனால் இத்திட்டத்தின்படி மரம் வளர்ப்பதற்காக அவர்கட்கு உதவித்தொகை ஏதும் வழங்கப்படமாட்டாது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுக்குறியீடான 270 இலட்ச மரக்கன்றுகளுக்கு, 180.92 இலட்ச மரக்கன்றுகள் விநியோகித்து நடப்பட்டுள்ளன.

**மனமகிழ் மரம் வளர்ப்புத் திட்டம்**

இத்திட்டமானது மேற் கூறப்பட்ட மக்களைத் தவிர மற்றையோருக்கு ஏதுவாக அமையப்பெற்றதாகும். இதன்படி, வியாபாரம் மற்றும் அழகு நோக்குடன் மரம் வளர்ப்பதற்கு அரசு சார்பில்லாத பிற துறைகள், பொதுமக்கள் நலன் கருதிச் செயல்படும் சங்கங்கள், கிராம ஒருங்கிணைப்புகள், மற்றும் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், கோயில்கள், மற்றும் பொது நிறுவனங்கள் ஒத்துழைப்புடன் மரங்கள் நட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 21 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

பொதுவாக 1987-88 ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் டிசம்பர் '87 முடிய நடப்பட்ட மரக்கன்றுகளின் எண்ணிக்கை 604.360 இலட்சம் ஆகும். பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியோருக்கு விநியோகிக்கப்பட்ட மரக்கன்றுகள் எண்ணிக்கை 367.505 இலட்சங்களாகும். மொத்தம் 35,000 எக்டேர் பரப்பில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. அவை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**பழங்குடியினர் நலம் பேணுதல்**

பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் வனத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் 3.63 லட்சம் மலைவாழ் மக்கள் உள்ளனர். ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக மலைவாழ் மக்கள் அதிக நெருக்கமாக உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் உப திட்டங்கள் தயாரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன.

பழங்குடியினருக்குக் கால்நடைகளை இலவசமாக மேய்ப்பதற்கும் அவர்கள் விவசாய மற்றும் குடும்ப உபயோகத்திற்குத் தேவையான சில வனப் பொருட்களை எடுத்துச் செல்லவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழக அரசின் புதிய ஆணைப்படி, பொதுமக்கள் தலைச்சுமையாகக் காட்டு விறகுகளைத் தங்கள் சொந்த உபயோகத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறது. பழங்குடியினருக்கு 1978 ஆம் ஆண்டு முதல், வனச்சரகர், வனப்பணியாளர் மற்றும்



வனக்காப்பாளர்களாக வனத்துறையில் பணிபுரிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அவர்கள் வாழும் பகுதியில் இத்துறையினரால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மலைத்தோட்டங்கள் வளர்த்தல்:- வருடத்திற்கு சுமார் 1500 எக்டேர்.

பழங்குடியினரின் பகுதிகளில் சாலை போடுதல்:- வருடத்திற்கு சுமார் 5 முதல் 10 கி.மீ. வரை.

பள்ளிக் கட்டிடங்கள், ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பு வனப் பணியாளர்களுக்கும் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்:- வருடத்திற்கு 5 முதல் 10 வரை குடியிருப்பு இல்லங்களும், ஒன்று அல்லது இரண்டு பள்ளிக் கட்டிடங்களும்.

இதுதவிர, தென்னார்க்காடு, வடஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, தர்மபுரி மாவட்டங்களில் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் (வனப்பகுதிக்கு வெளியே) சமூகக் காடுகள் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பயன்தரும் செடிகளான பழவகைகள், புல் வகைகள் 500 நாற்றுகள் தங்கள் சொந்த நிலங்களில் பயிரிட இலவசமாகக் கொடுக்கப்பட்டு உள்ளன.

பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்திற்காக 1980-81 முதல் 1986-87 ஆம் ஆண்டு வரை திட்டப்பணிகளுக்காகச் செலவிடப்பட்ட தொகை கீழ் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1984-85 | ரூ.46.68 | இலட்சம் |
| 1985-86 | ரூ.62.48 | இலட்சம் |
| 1986-87 | ரூ.93.00 | இலட்சம் |
| 1987-88 | ரூ.125.22 | இலட்சம் |

(இலக்கு)

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1985-90) பழங்குடியினர் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்திற்காக 200 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, பழங்குடியினர் கிராம நல வன இயல் திட்டத்தின் கீழ் அம்மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தும் வகையிலும் அதிக விலை மதிப்புள்ள சந்தன மரத் தோட்டங்கள் தோற்றுவிக்க 1986-87 இல் 44.02 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்றுள்ளன.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் (அ)



இயற்கைச் சூழல் பாதுகாப்பு (ஆ) சீரமைப்பு (இ) இயற்கைச் சூழல் மேம்பாடு மற்றும் நிலப்பயன்பாட்டு முறையை ஒழுங்குபடுத்துவது, அறிவியல் பூர்வமான திட்டங்களின் மூலம் அபிவிருத்திப் பணிகளைச் செயல்படுத்துவது, நீர்பிடிப்புப்பகுதிகளில், மண்வளம் மற்றும் நீர் வளப்பாதுகாப்புப் புகலிடங்களில் வனவிலங்குகளின் வாழ்க்கை முறையினை ஒட்டி, மேம்பாட்டுப் பணிகள், சிறிய மற்றும் தொடர் திட்டம் மூலம் மேற்கொள்ளுதல் ஆகியவையாகும். இயற்கைச்சூழலை மேம்படுத்த ஒருமித்த அணுகுமுறையை வகுத்து நீர்ப்பிரி முகடுகளில் உள்ள காடுகளை மேம்படுத்துவது நமது உத்தியாகும். தரம் தாழ்ந்த மலைச்சரிவுகளில் மரம் வளர்ப்பதும் மக்களுக்கு நாற்றுகள் வழங்குவதும் இத்திட்டத்தில் அடங்கும்.

அழிவுபட்டு வரும் மர இன வகை உள்ள சோலைக்காடுகளின் இயற்கைச் சூழல் பாதுகாப்பிற்கென்று கம்பிவலை வேலி அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

மாநிலங்களுக்கிடையே எல்லைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அடர்ந்த காடுகளிலும் இதர பிரச்சினைக்குட்பட்ட பகுதிகளைச் சுற்றிலும் கற்றாழை வேலி அமைத்தல், காடுகளை அழிக்கும் தீயிலிருந்து இயற்கைச் சூழல் பாதுகாப்புப் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப் பட்டுள்ளன.

வனச் செல்வத்தைத் தீயிலிருந்தும், கடத்தல்காரர்களிடமிருந்தும், வனவிலங்கு வேட்டையாடுபவர்களிடமிருந்தும் பாதுகாக்க, கம்பியில்லாத் தந்தி போன்ற முன்னேற்ற வசதிகளை மேற்கொள்வதும் இத்திட்டத்தில் வரும் பணிகளாகும்.

இவ்வியற்கைச் சூழல் பாதுகாப்புத் திட்டத்தில், இயற்கை அடர் காடுகளை அபிவிருத்தி செய்யும் வகையில் ஈட்டி முதலிய நல்ல மரங்களைப் பாதுகாத்தல், அவற்றிற்குப் புகலிடம் அளித்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் ஈட்டி மற்றும் இதர இனங்களை வனப்பகுதிகளில் மற்றும் இவ்வினங்கட்குத் தேர்வு செய்யப்பட்ட புகலிடங்களில் வளர்க்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. ஈட்டி மரம் பாதுகாக்கப்பட, தனி இடம் அமைத்து, அவற்றின் வளர்ச்சியையும், உற்பத்தித் திறனையும் ஆய்வு செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையினை மத்திய அரசு திட்டக்குழுவினர் பாராட்டியுள்ளனர்.

இயற்கைச் சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உதகமண்டலம், கூனூர், கோத்தகிரி ஆகிய ஊர்களின் நகராட்சிப் பகுதிகளில் மண் சரிவு தடுத்தல் மற்றும் சுற்றுப்புறச் சூழல், சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்த தரிசுப் பகுதிகளில் மண்பானையில் செடிகள் நடும் பணியும் மேற்கொள்ளப்படுகின்றன. 1987-88 இல் ரூ.122.55 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

ஆண்டுதோறும் இந்தத் திட்டங்களின் மூலம் காடுவளர்ப்பினைக் கண்காணித்து வருவதால், நாட்டின் இயற்கை வளம் வருடா வருடம் அதிகரித்து, செழிப்பேற்பட்டு மக்கள் வாழ்வு வளம் பெறுகிறது. சுற்றுப்புறச் சூழல் செம்மையடைவதனால் மக்கள் மற்றும் உயிரினங்கள் நலன் மிகவும் மேம்பாடு அடைகின்றது. மேற்படி காடு வளர்ப்புத் திட்டங்களின் கீழ், குறித்த காலத்தில் மழை பொழிவதற்கு உதவி புரிவதோடு, மண் அரிப்பு, நிலச்சரிவு, புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து நாடு காப்பாற்றப்படுவதற்குப் பாரதப்பிரதமரின் புதிய இருபது அம்சத் திட்ட நடவடிக்கைகள் மிகவும் உதவுகின்றன.



# சர்வதேச காந்தி விருது

ஆண்டுதோறும் ஜனவரி 30ஆம் நாள், தொழுநோயாளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. தொழுநோய் நிவாரணப்பணியில் ஈடுபட்டு சிறந்த தொண்டாற்றுபவர்களுக்கு இத்தினத்தில் விருதுகள் வழங்கிச் சிறப்பிக்கப்படுகின்றன.

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கஸ்தூரிபாய் தொழுநோய் நிவாரண நிலையத்தின் செயலர் பேராசிரியர் டி.என். ஜகதீசனுக்கு, 1988ஆம் ஆண்டு சர்வதேச காந்தி விருதினை 20.1.88 அன்று புது டில்லியில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் வழங்கினார். இவ்விருதைப் பெற்ற இன்னொருவர் சீனநாட்டைச் சேர்ந்தவர். அவர் பெயர் டாக்டர் மாஹாய்டே. தொழுநோய் ஒழிப்புக்குப் பாடுபட்ட இவர்களது அயராத தொண்டுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ்விருது, ஒரு லட்ச ரூபாய் ரொக்கமும், ஒரு பதக்கமும், பாராட்டிதழும் கொண்டது.

சர்வ தேச காந்தி விருதைப் பெற்ற பேராசிரியர் டி.எஸ்.ஜகதீசன், தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள மழவன்தாங்கல் கிராமத்தில் தொழுநோயாளர் நிவாரண இல்லம் ஒன்றை அமைத்துத் தொண்டு செய்து வருகிறார்.

---

தோலில் மொத்தம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நோய்கள் உள்ளன. அவற்றுள் தொழுநோயும் ஒன்றாகும். தொழுநோய் பரம்பரை நோய் அல்ல; பாவத்தின் சின்னம் அல்ல; கரும நோயும் அல்ல. இது மைக்கோ பாக்டீரியம் என்ற ஒரு வகை நுண்கிருமியினால் ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு வரும் தொற்று நோயாகும். இது தீராத நோயல்ல; தீய பழக்கத்தால் வருவதல்ல. இந்நோயை முறையாக முயன்றால் நலப்படுத்த முடியும்.

இந்நோய் உலகத்திலேயே இந்தியாவில்தான் அதிகம் உள்ளது. அதுவும் தமிழகத்தில்தான் மிக அதிகம் காணப்படுகின்றது.

2. இந்நோய் இன்றும் ஒரு அவமானச் சின்னமாகக் கருதப்படுகின்றது.

உடலின் எல்லா உறுப்புகளையும் பாதிக்கும் தன்மையுடையது. முற்றிலும் நலப்படுத்த முடியும்.

5. இந்நோய்க்கு மருந்து மாத்திரைகள் உள்ளன.

தொழுநோயின் வகைகள்:

1. தொற்றும் வகை.

2. தொற்றாத வகை.

தொற்றும் வகையின் அறிகுறிகள்:

1. இவ்வகை நோய் கண்டவர்களுக்கு இலேசாய்ச் சிவந்த, தேமல் போன்ற படைகள் சிறிதாக உடலின் பல பாகங்களில் உண்டாகும்.

2. படைகளில் எண்ணெய் பூசியது போல் பளபளப்பு இருக்கும்.

3. படையில் மையப் பகுதி தெளிவாகவும், ஓரம் போகப் போகத் தெளிவு குறைந்தும் காணப்படும்.

4. படைகளில் உணர்வு (தொடு உணர்வு, வெப்ப உணர்வு) குறைந்து இருக்கும்.

5. நரம்பு தடித்துக் காணப்படும்.

## தொலைப்போம் தொழுநோயை!

தொற்றாத வகைத் தொழுநோய்:

1. படையுடன் கூடியது.

2. படையின்றிக் காணப்படுவது.

படையுடன் கூடிய தொற்றாத தொழுநோயின் அறிகுறிகள்:

1. தேமல் போன்ற சில படைகள் காணப்படும்.

2. படையின் ஓரம் நன்கு தெளிவுடன் காணப்படும்.

3. அடிப்படையில் உணர்ச்சி குறைந்திருக்கும்.

4. முடி இருக்காது.

5. வியர்வை சுரக்காது.

6. நரம்புகள் தடித்துக் காணப்படும்.

தொழுநோயினால் உண்டாகும் விளைவுகள்:

1 கை, கால் விரல்கள் மடங்குவது; குறைவது.

2. ஆறாத புண்கள் காணப்படுதல்.

3. மூக்கு சப்பையாதல்.

4. சிங்கமுகத் தோற்றம்.

5. துர்நாற்றத்துடன் கூடிய வியர்வை சுரத்தல்.

6. கண்பார்வை இழக்க நேரிடுதல்.

7. ஆண், பெண் மலட்டுத்தன்மை.

டேப்சோன் (Dapsone), லாம்ப்ரீன் (Lamprene), ரீபாமைசிங் (Rimfamycin) போன்ற மாத்திரைகளை மருத்துவரின் அறிவுரைப்படி தொடர்ந்து உட்கொண்டு வந்தால் இந்நோயிலிருந்து காத்துக் கொள்ளலாம்.

(டாக்டர் இரா. கலைக்கோவனின் ''நல வாழ்வு நம் கையில்'' என்ற நூலிலிருந்து)




# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*



# ஈரோட்டில் அருங்காட்சியகம்

இந்திய தேசத் தந்தை காந்தியடிகள் இப்பூவுலகைவிட்டுச் சென்றபோது தந்தை பெரியார் அவர்கள் இந்தியநாடு 'காந்திநாடு' என்று பெயர் பெறவேண்டும் என்று கூறினார்கள். 17.9.1979இல் ஈரோடு நகரைத் தலைமையிடமாகக் கொண்ட ''பெரியார் மாவட்டம்'' தந்தை பெரியார் பெயராலேயே அமைக்கப்பட்டது.

ஈரோட்டில்தமிழக அரசின் கீழ் உள்ள அரசு அருங்காட்சியகத் துறையினரால் 7.10.87 அன்று ஒரு அருங்காட்சியகமும் அமைக்கப்பட்டுள்ளது. இது இத்துறையினரால் அமைக்கப்பட்ட ஆறாவது மாவட்ட அருங்காட்சியகமாகும்.

ஈரோடு பிரப் சாலை, காந்தி சாலை, கச்சேரி சாலை ஆகிய சாலைகள் சந்திக்குமிடம் ஈரோடு நகரின் மையமாகும். இப்பகுதியில் உள்ள ஈரோடு நகராட்சி அலுவலக வளாகத்தில் மேற்குப் பகுதியில் பிரப் சாலையை நோக்கி அமைந்திருப்பது அரசு அருங்காட்சியகமாகும். ஈரோடு இரயில் நிலையத்திற்கு வடக்கே ஒரு கிலோமீட்டர் தொலைவிலும், ஈரோடு பேருந்து நிலையத்திற்குத் தென்கிழக்கில் ஒரு கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது இதன் சிறப்பாகும்.

அருங்காட்சியகத்திற்கு முன் சிறிய தோட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தோட்டத்தில் பெரியார் மாவட்டத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இவற்றில் கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு பழமையானதாகும்.

**பெரியார் மாவட்டக் கூடம்**

அருங்காட்சியகத்திற்குள் நுழையும்போது முதலில் நாம் காண்பது பெரியார் மாவட்டக்கூடம். இங்கு தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டத்தின் அமைவிடம், பெரியார் மாவட்ட அமைப்பு, பெரியார் மாவட்டத்தில் காணத்தகுந்த இடங்கள், சிறப்பம்சங்கள், வரைபடங்கள், நிழற்படங்கள் மூலமாகவும் பொருட்கள் மூலமாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

**சிற்பக் கூடம்**

சிற்பக் கூடத்திற்குள் நுழையும்போது கோபிக்கருகிலுள்ள இராக்கினாம் பாளையத்தில் கிடைத்த தட்சிணாமூர்த்தி என்ற கற்சிற்பம் நுழைபவர்களை வரவேற்பதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மதுரைவீரன், சண்டிகேசுவரர், பைரவர் ஆகிய சிற்பங்கள் சிறப்பானவை. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கிடைக்கப்பெற்ற மரச் சிற்பங்கள் சிறந்த முறையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**படிமக் கூடம்**

தமிழகத்தில் சோழர் காலத்தில் படிமக்கலை சிறப்புற்றிருநதது. அவர்தம் சிறப்பினை விளக்க ஆறு பெரிய வெண்கலச் சிற்பங்கள் கண்ணாடிப் பெட்டிக்குள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் நடராசர், விஷ்ணு, காளி சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. பெரியார் மாவட்டத்திலேயே கிடைக்கப்பெற்ற இரு சிறிய பாலகிருட்டிணன்





சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

### ஓவியக் கூடம்

இனி நாம் காண்பது ஓவியக் கூடத்திலுள்ள இடைக்கால, தற்கால ஓவியங்கள். இரண்டு தஞ்சாவூர் ஓவியங்கள் சிறப்பானவை. பெரியார் மாவட்டத்திலுள்ள ஒரு அழிந்துபட்ட கோயில் ஓவியமாகத் தீட்டப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. இன்னும் சமகால ஓவியங்கள் சிறந்த ஒளியில் காட்சி அளிக்கின்றன.

### நாணயக் கூடம்

தொடர்ந்து செல்லுங்கால் பெரியார் மாவட்டத்தில் கிடைக்கப் பெற்ற பனை ஓலைச் சுவடிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. முப்பத்தி இரண்டு பழந்தமிழ்நாட்டு நாணய உலோக மாதிரிகள் நிழற் படங்களுடனும் அவற்றின் பெயர்களுடனும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

### வரலாற்றுக்கு முற்பட்டகாலக் காட்சிக் கூடம்

பெரியார் மாவட்டம் பெருங்கல் வட்டங்கள், புதைகுழிகள் போன்றவை நிறைந்து கிடக்கும் ஒரு மாவட்டமாகும். கிடைக்கப்பெற்ற புதை மட்பாண்டங்கள், கற்கருவிகள், மணிகள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. சமீப காலத்தில் இம் மாவட்டத்திலுள்ள கொடுமணலில் நடைபெற்ற அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற கார்னீலியன், களிமண், இரும்பு மணிகள், மட்பாத்திரங்கள் கோபி, நடுப்பாளையம், சதுமுகை போன்ற இடங்களில் கிடைக்கப் பெற்ற புதைபானை, ஜாடிகள், பர்கூர் மலைப் பகுதியில் கிடைக்கப் பெற்ற கற்கருவி ஆகியவை சிறப்பானவை.

### மானிடவியல் கூடம்

பெரியார் மாவட்டத்திலுள்ள மலைவாழ் மக்களின் பெரும்பகுதியினர் சோளகர்களாவர். இவர்கள்



வாழும் மலையைப் பின்னணியாகக் கொண்டு அவர்களது வாழ்க்கைக் கலன்கள், இசைக்கருவிகள் காட்சிப் பெட்டியில் இடம்பெற்றுள்ளன.

### இயற்கை அறிவியல் கூடம்

கனிமங்களும், பாறை வகைகளும், காலத்தால் கல்போல் மாறிய சிப்பிகளும், மரமும்; மரவகைகளும், நார் வகைகளும், பதப்படுத்தப்பட்ட கடல்வாழ் உயிரினங்களும், இயற்கை அறிவியல் கூடத்தை அலங்கரிக்கின்றன. காலத்தால் அழிந்துபோன பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த உயிரினங்கள் ஓவியமாகத் தீட்டப் பட்டுள்ளன.

10அடி நீளமுள்ள பதப்படுத்தப் பட்ட ஒரு முதலையும், இரண்டு வரகுக் கோழிகளும், அவற்றின் சூழ்நிலையை வர்ணிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டு இருப்பது சிறுவர்களையும், பெரியவர்களையும் ஈர்க்கிறது.

இவ்விதமாக, சிறிய கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஈரோடு அருங்காட்சியகம் கலை, பண்பாடு, வரலாறு, அறிவியல் ஆகியவற்றின் மையமாகச் சிறந்து விளங்குமென்பதில் ஐயமில்லை.

வேலை நேரம்: காலை 9 மணி முதல் பகல் 12.30 மணிவரை. மாலை 2 மணி முதல் மாலை 5 மணிவரை. விடுமுறை: வெள்ளி, இரண்டாம் சனி மற்றும் தேசிய விடுமுறைநாட்கள்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய இரகங்கள்




ஆண்டு தோறும் பல புதிய பயிர் இரகங்களை உழவர்களுக்கு வழங்குகின்றது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பொங்கல் பரிசாக, 11 புதிய பயிர் இரகங்களை, வழங்கி உள்ளது.

நெல், சிறுதானியம், எண்ணெய் வித்து, பருத்தி, மலர்ப்பயிர்களில் ஒவ்வொன்றும், மற்றும் பயறுகள், காய்கறிகள் ஆகியவற்றில் மூன்றுமாக மொத்தம் 11 புதிய உயர் விளைச்சல் இரகங்கள் வெளியிடப்படுகின்றன. இப்புதிய இரகங்கள் யாவும் அதிக விளைச்சல் தருவதுடன் பூச்சி-நோய்களைத் தாங்கி வளர்ந்து நல்ல பலனைத்தரவல்லவை. இந்த இரகங்களை உருவாக்க விஞ்ஞானிகள் பலரின் அயரா உழைப்பும், பல்வேறு கட்டங்களில் சோதனையிட உதவிய விரிவாக்க அலுவலர்கள் மற்றும் உழவர்களின் ஒத்துழைப்பும் பாராட்டத்தக்கது.

**நெல் ஆடுதுறை 39**

கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாகப் பாசன நீர்ப்பிரச்சனைகளில் மூழ்கி, நெல் சாகுபடிக்குப் புது உத்திகளைத் தேடும் காவிரி சமவெளிப்பகுதிக்கு, குறிப்பாக தஞ்சை மாவட்டப்பகுதிக்கு, புதிய நெல் இரகம் ஆடுதுறை 39 வெளியிடப்படுகிறது. இந்த இரகம், கல்ச்சர் ஏ.டி.9408 என்ற பெயரில் நிலங்களில் விரிவாகப் பரிசோதித்துப் பார்க்கப்பெற்றது. பழம் பெரும் இரகங்களான ஐ.ஆர்.8, ஐ. ஆர். 20, இரண்டையும் இணைத்த இனக்கலப்பில் உருவாக்கப்பட்டது.

தற்போது பயிரிடப்பட்டு வரும் ஐ.ஆர்.20, பொன்னி போன்ற இரகங்கள், அறுவடைக்கு வர, சுமார் 135 முதல் 140 நாட்கள் ஆகின்றன. இந்தப் புதிய ஆடுதுறை 39 நெல் இரகம், குறைந்த வயதில், அதாவது 120-125 நாட்களில் அதிக மகசூல் (5.6 டன்) கொடுக்கிறது. இது ஐ.ஆர். 20-யைவிட 14 விழுக்காடு அதிகமாகும். நல்ல தரமான அரிசியும் கிடைக்கிறது. முக்கிய நோய்களை எதிர்க்கும் தன்மையும் கொண்டது. தண்ணீர்த் தட்டுப்பாடான இன்றைய சூழ்நிலையில் சுமார் 40,000 எக்டர்களில் இந்தப் புதிய நெல் இரகம் பரவியுள்ளது. இந்தப் புதிய இரகம் பின்பட்ட தாளடிப்பருவத்திற்கு மிகவும் ஏற்றதாகும். வயது குறைவாக உள்ளதால் அடுத்துப் பயிரிடப்படும் கோடைப்பயறு மற்றும் நஞ்சைத்தரிசுப் பருத்தி விதைப்பு ஆகியவை பாதிக்கப்படுவதில்லை. எனவே இந்தப் புதிய ஆடுதுறை 39 நெல் இரகம், தஞ்சை உழவர்களிடம் நல்ல வரவேற்பைப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ராகி கோ. 13**

புதிதாக வெளியிடப்படும் கோ. 13 ராகி இரகம் கோ.7 மற்றும் டி.ஏ.எச். 107 ஆகிய இரகங்களின் கலப்பினச்சேர்க்கை மூலம் உருவாக்கப்பட்டதாகும். இது 95முதல் 100 நாட்கள் உள்ள குறுகிய கால இரகமாகும். இது ஏனைய இரகங்களைவிட 12 சதம் கூடுதல் மகசூல் தரவல்லது. எக்டருக்கு 3.6 டன் தானிய மகசூலும் 10 டன் தாளும் கொடுக்கவல்லது. ஒரே சீராகப் பூக்கும் தன்மையுடையது. அதனால் ஒரே முறையில் அனைத்துக் கதிர்களையும் அறுவடை செய்யலாம். சாயாத தன்மை கொண்டது. கதிர்களை எளிதாக அடித்து மணிகளைப் பிரித்தெடுக்கலாம். கொள்ளை நோய்க்கு எதிர்ப்பாற்றல் கொண்டது. ஆனி-ஆடி மற்றும் தை - மாசிப் பட்டங்களில் பயிரிடலாம். தமிழ்நாட்டில் ராகி பயிரிடப்படும் பகுதியான பெரியார், கோவை, தர்மபுரி, சேலம், வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களுக்கு இது பரிந்துரைக்கப்படுகிறது.




**உளுந்து ஆடுதுறை 5**

புது ஆற்றுப் பாசனப் பகுதிக்கு சித்திரைப்பட்டத்தில் இறைவையில் பயிரிடுவதற்கென்றே ஆடுதுறை 5 உளுந்து இரகம் வெளியிடப்படுகிறது.

புதிய ஆற்றுப்பாசனப் பகுதியில் அமைந்துள்ள பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, மன்னார்குடிக் கோட்டங்களில் சுமார் 5000 எக்டர் பரப்பில் கோடைப்பயறு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நிலக்கடலைப் பயிர்ச் சாகுபடியைத் தொடர்ந்து, கோடையில் உளுந்து இறவையாகப் பயிரிடப்படுகிறது. இந்தப்பகுதியில் தற்சமயம் டி.9 உளுந்து இரகமே பெரும்பாலும் பயிரிடப்படுகிறது. இதைவிட அதிக மகசூல் தரும் இரகம் தேவையென எதிர்பார்த்த வேளாண் பெருமக்கள் இந்தப் புதிய ஆடுதுறை 5 உளுந்தை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர். இந்தக் கோடை உளுந்துக்கு ஓரிரு முறை நீர் பாய்ச்

சினாலே போதுமானது. உளுந்து இரகத்தின் வயது 70 நாட்களே.

இந்தப் புதிய இரகம், கான்பூர் உளுந்து இரகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டது. நான்கு ஆண்டுகள் சோதனை செய்ததில் டி.9 இரகத்தைக் காட்டிலும் சுமார் 30 சதம் கூடுதல் மகசூல் தந்துள்ளது. மேலும் இந்த இரகம் மஞ்சள் தேமல் நோய், இலைக்கருகல், நச்சுயிரி நோய் மற்றும் வேர் அழுகல் நோய் ஆகியவற்றைத் தாங்கி வளரும்.

அதிக விளைச்சல் திறனும், முக்கிய நோய்களைத் தாங்கி வளரும் சக்தியும் கோடைப்பருவத்திற்கு ஏற்றதுமான இந்த ஆடுதுறை 5 உளுந்து, தஞ்சை மாவட்ட உழவர்களிடமிருந்து நல் வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கலாம்.

### பச்சைப்பயறு ஆடுதுறை 3

தஞ்சை மாவட்டத்தில் நெல்லைச் சார்ந்த பயிர் சுழற்சியில் நெற்பயிரைத் தொடர்ந்து சுமார் 2 இலட்சம் எக்டர்களில் பச்சைப் பயறு சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. தற்போது பயிரிடப்படும் ஏற்கனவே அறிமுகமாகியுள்ள ஏடிடீ.2 மற்றும் எஸ்.8 பச்சைப் பயறு இரகங்களில் குறைந்த அளவே மகசூல் கிடைக்கின்றது. இவைகளைவிட அதிக விளைச்சல் பெற ஆடுதுறை ஆராய்ச்சி நிலையத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகளால் உருவானது ஆடுதுறை 3 பச்சைப்பயறு இரகமாகும்.

இந்தப் புதிய இரகம் எக்டருக்கு சராசரி 1.1 டன் பயறு மகசூல் தந்துள்ளது. இதன் வயது 65 முதல் 70 நாட்கள். உயர் விளைச்சல் கிடைப்பதுடன் மஞ்சள் தேமல் நச்சுயிரி நோய் மற்றும் தண்டுப் புழு ஆகியவற்றைத் தாங்கி வளரக் கூடியதாகும். இந்த இரகத்தை மற்ற நெல் தரிசில் பயிரிடும் பச்சைப்பயறு ரகங்களைப் போல் தைப்பட்டத்தில் விதைக்க வேண்டும்.

### கொள்ளு-பையூர் 1

பையூர் 1 கொள்ளு என்கிற காணம் இரகம், மேட்டூர் நாட்டு இரகத்திலிருந்து தனிவழித்தேர்வு மூலம் உருவாக்கப்பட்டது. தமிழ் நாட்டில் கொள்ளு பயிரிடப்படும் எல்லா மாவட்டங்களிலும் இந்தப் புதிய இரகத்தைப் பயிரிடலாம். வடகிழக்குப் பருவகாலத்தில், மானாவாரியாக எக்டருக்கு 640 கிலோ கொள்ளு தரவல்லது. இந்த மகசூல் கோ. 1 மற்றும் நாட்டு இரகங்களின் மகசூலைவிட 15 முதல் 30 சதம் அதிகமாகும். இதன் வயது 105 முதல் 110 நாட்கள். இது தேமல் நோய் மற்றும் வேர் அழுகல் நோயை எதிர்க்கும் திறன் கொண்டது. இதன் பொட்டு, சிறந்த மாட்டுத் தீவனமாகப் பயன்படக்கூடியது.

### வீரிய ஒட்டுத்தென்னை வி.எச்.சி.2

தஞ்சை மாவட்டம் வேப்பங்குளம் ஆராய்ச்சிப் பண்ணையில் உருவாக்கப்பட்டது இந்தப் புதிய வி.எச்.சி.2 வீரிய ஒட்டுத்தென்னையாகும். கிழக்குக் கடற்கரை நெட்டை இரகத்துடன் மலேசியா குட்டை மஞ்சள் இரகத்தை இணைத்து இனக் கலப்பு முறையில் உருவாக்கப்பட்டது இந்தப் புதிய தென்னை இரகம்.

இது ஆண்டு ஒன்றுக்கு மரத்திற்கு 100 காய்களுக்கு மேல் தரவல்லது. இதன் மகசூல் நெட்டை இரகங்களின் விளைச்சலைவிட 55 விழுக்காடும், வி.எச்.சி.1 இரகத்தின் விளைச்சலைவிட 8 விழுக்காடும் கூடுதலாகும்.

இந்தப் புதிய இரகம் வி.எச்.சி.1 இரகத்தின் அளவிற்குக் கொப்பரை மகசூலும், அதைவிட 11 விழுக்காடு கூடுதல் எண்ணெய் மகசூலும் தரவல்லது. மேலும் இந்தப் புதிய இரகத்தில் மட்டைகளும் குலைகளும் சரிவதில்லை. பல்வேறு சூழ்நிலைகளிலும் நன்கு வளரக்கூடியது.




### பருத்தி எம்.சி.யு 11

எம்.சி.யு.11 பருத்தி, கலப்பினத் தேர்வில் கண்டறியப்பட்ட குளிர் கால இறவைச் சாகுபடிக்கேற்ற ஓர் உயர் விளைச்சல் இரகமாகும். இதன் வயது 155 முதல் 160 நாட்கள். ஏனைய குளிர்காலப் பருத்தி இரகங்களைவிட 15 நாட்கள் வயது குறைவு. எக்டருக்கு 22 முதல் 28 குவிண்டால் வரை மகசூல் தரவல்லது. எம்.சி.யு 5 மற்றும் எம்.சி.யு.9 இரகங்களைக் காட்டிலும் 4 குவிண்டால் கூடுதல் மகசூல் கொடுக்கும் திறன் கொண்டது.

இதன் அரைவைத் திறன் 34.6 சதவீதம், அதாவது எம்.சி.யு.5 பருத்தியை விட சுமார் 3 சதவிதம் அதிகம். எம்.சி.யு. 9 யைப்போன்று அரைவைத்திறன் கொண்டது. இழை நீளத்தில் எம்.சி.யு. 5 மற்றும் எம்.சி.யு. 9 இரகங்களை ஒத்திருக்கிறது.

இந்தப் புதிய இரகம் கோவை, சேலம், தருமபுரி, பெரியார், மதுரை, அண்ணா மாவட்டங்களில் பயிரிட உகந்தது. மேலும் அண்டை மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம் ஆகியவற்றிற்கும் ஏற்புடையதாக இருக்கும்.

### கத்தரி கோ.2

காய்கறி வகைகளில் கோ.2 என்ற புதிய கத்தரிக்காய் இரகம் ஒன்று வெளியிடப்படுகிறது. இந்த கோ.2 கத்தரி இரகம், கோயமுத்தூர் வரிக்கத்தரி என்ற நாட்டு இரகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டது. இந்த இரகத்தின் செடிகள் நடுத்தர உயரத்துடன் படரும் தன்மை கொண்டவை. எக்டருக்கு 38 டன் வரை மகசூல் அளிக்க வல்லது. காய்கள் நீளமாகவும், கரு ஊதா நிறத்துடனும் லேசான பச்சைவரி கலந்தும் கவர்ச்சியாகக் காணப்படும். இதன் வயது 150 நாட்கள். இந்த கோ.2 கத்தரி இரகத்தைக் கோவை, பெரியார் மாவட்டங்களில் பயிரிடலாம்.

### தக்காளி-பையூர் 1

பையூர் 1 தக்காளி இரகம் பூசாரூபி மற்றும் மருதம் ஆகிய இரகங்களின் கலப்பின் வழித்தேர்வாகும். மானாவாரியாக எக்டருக்கு 32 டன் மகசூல் தந்துள்ளது. இந்த மகசூல்




**பூசாரூபி மற்றும் பிகேஎம்.1 இரகங்களைவிட 5 டன் கூடுதலாகும். மேலும் இந்தப் புதிய தக்காளி இரகத்தில் இரண்டு மூன்று தடவை அதிக அறுவடை செய்ய இயலும். காய்ப்புழு, இலைப்புள்ளி மற்றும்**

நச்சுயிரி இலைச்சுருட்டல் நோய்களின் தாக்குதல் குறைவு. இதன் பழங்கள் உருண்டு, திடமாக இருப்பதால் நல்ல வைப்புத்திறனும்கொண்டவை. தொலைதூர விற்பனை மையங்களுக்கு எடுத்துச்செல்ல ஏற்றவை.

இந்த பையூர் 1 என்ற புதிய தக்காளி இரகம், சேலம், மற்றும் தருமபுரி மாவட்டங்களின் மானாவாரியாகத் தக்காளி பயிரிடப்படும் பகுதிகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.



வீ.எச்.சி 2 தென்னை

**சீமை அவரை தடியன் குடிசை 1 (டிகேடி.1)**

தடியன் குடிசை 1 சீமை அவரை (டி.கேடி.1) ஓர் உயர்விளைச்சல் தரும் கொடி அவரை வகையைச் சார்ந்தது. இதன் வயது 90 நாட்கள். எக்டருக்கு 5.6 டன் மகசூல் தரவல்லது. ஆண்டு முழுவதும் மலைப்பிரதேசங்களில் மானாவாரியாகப் பயிரிடலாம். இதனைத் தனிப்பயிராகவும், காப்பி, வாழை, சௌ-சௌ ஆகியவற்றுடன் ஊடு பயிராகவும் பயிரிடலாம்.

இதன் காய்களில் நார்த்தன்மை குறைவாகவும் இருக்கிறது. இவை நல்ல மணம் மற்றும் சுவையுடனும் உள்ளன. விதைகளை உணவிற்குப் பயன்படுத்தலாம். பழனி, சேர்வராயன், நீலகிரி போன்ற தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மலைப்பகுதிகளிலும் பயிரிட ஏற்றது.

**முல்லை கோ.2**

கோவைப் பல்கலைக்கழக வளாகத்தில் 18 முல்லைக் கலப்பின சந்ததிகளை ஆய்வுக்குட்படுத்தி, அதிலிருந்து தேர்வு செய்யப்பட்டது கோ.2. முல்லை என்ற புதிய இரகம். இதன் பூ மகசூல் எக்டருக்கு 11.2 டன். இது கோ. 1 முல்லை மகசூலைக் காட்டிலும் சுமார் 2.5 டன்கள் கூடுதலாம். இதன் காம்புகள் நீண்டிருப்பதால் மாலையாகத் தொடுக்க இந்த இரகம் மிகவும் ஏற்றதாகும். இந்தப்புதிய வகை, நோய்களைத்தாங்கும் சக்தி கொண்டது. மேலும் இலைக்கொப்புளங்களை உண்டாக்கும் சிலந்திப் பூச்சிகளின் தாக்குதலை முழுதுமாக எதிர்க்கும் ஆற்றல் கொண்டது.

மேற்கண்ட 11 புதிய பயிர் இரகங்களும் தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், வேளாண் பெருமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் துணைபுரியும். வேளாண் பெருமக்கள் அனைவரும், வரும் ஆண்டுகளில், இப்புதிய இரகங்களைப் பயிரிட்டு, அத்துடன் ஒருங்கிணைந்த மண்வள நிர்வாகம், புதிய பாசன முறைகள், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மற்றும் சிக்கன சாகுபடி முறைகள் யாவற்றையும் கையாண்டு பயன் பெற முயற்சிக்க வேண்டும்.

—தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை.



## ஓய்வூதியம் தொடர்பான குறைகளை நீக்க அரசு நடவடிக்கை



ஓய்வூதியம் பெறுவோர் குறைகளைக் கவனிக்கும்பொருட்டு, தமிழ்நாடு, அரசு தலைமைச் செயலகத்தில் பணியாளர் மற்றும் நிர்வாகச்சீர்திருத்தத் துறையில், ஒரு பிரிவு இயங்கி வருகிறது. இந்தப் பிரிவு பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஊழியர்களின் குறைகளைக் கவனிப்பதுடன், ஓய்வூதியம் தொடர்பான விஷயங்களில் மாநிலக் கணக்காய்வுத் தலைவருடன் ஒருங்கிணைந்து, ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட ஆலோசனை, விதிமுறைகள் கோட்பாடுகள் ஆகியவற்றைச் சுலபமாக்கி, ஓய்வூதியம் வழங்குவதில் ஏற்படும் சிக்கல்களை நிவர்த்தி செய்கிறது. 31-12-87 வரை 5603 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 1796 மனுக்களின் மீது இறுதி நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது முற்றிலும் தீர்க்கப்பட்டுள்ளது. 3545 பல்வகை மனுக்களும், மனுதாரருடைய வேண்டுகோள்களும் கவனிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 31-12-87 வரை 261 மனுக்களே நிலுவையில் உள்ளன.

ஓய்வூதியம் கோருபவர்கள் தங்களுக்கு இன்னும் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்றாலோ, தங்களுடைய ஓய்வூதியம் குறித்துக் காலதாமதம் இருப்பதாகக் கருதினாலோ அது குறித்து கீழ்க்கண்ட முகவரியிலுள்ள ஓய்வூதியம் குறைதீர்க்கும் பிரிவின் தொடர்பு அதிகாரியை அணுகலாம்:

''திரு எம். தட்சிணாமூர்த்தி,
அரசு துணைச் செயலாளர்,
பணியாளர் மற்றும் நிர்வாகச்சீர்திருத்தத்துறை,
சென்னை-9.
தொலைபேசி : அலுவலகம் : 562166
வீடு : 610178

# மனச்சுமை மறைந்தது

எஸ். லட்சுமிசுப்பிரமணியம்

கடற்கரை மணலைக் காலால் அளைந்தபடி நடந்தான் மாடசாமி. சுண்டல் விற்கும் பையன் அருகில் நடந்து சென்றபோது, நாவில் ஊறிய எச்சிலை விழுங்கிக் கொண்டான். உயரே பறக்கும் வண்ண பலூன்களைக் கயிற்றில் கட்டியவாறு நடந்து சென்ற கிழவன் அவனைக் கண்டதும், ''தோசி! அப்பாலே போ! ஒன்கை பட்டா வியாவாரம் ஆவாது!'' என்று ஒதுக்கிவிட்டு மேலே நடந்தான்.

மாலை மயங்கும் நேரம். அவனைப் போன்ற சிறுவர்கள், பெற்றோருடன் வந்து கடல் அலைகளிடையே நிற்பதும், விளையாடுவதும், தின்னுவதற்கு விதம் விதமாக வாங்கிக் கொண்டு செல்வதுமாக நாள்தோறும் அவன் கண்பார்வையில் விழும் காட்சிகள் எத்தனை? அவனுக்குத்தான் அப்படி வாழக் கொடுத்துவைக்கவில்லை....

பெரிய சுறாமீன் ஒன்றைப் பிடித்து வந்திருந்தார்கள் பரதவர்கள். அங்கு ஏகக்கூட்டம். குதிரை மீது செல்லும் குழந்தைகளின் ஆர்ப்பாட்டம். அதற்குப்பின் சிறுவர்களின் ஆரவாரம். பெரியவர்களும் குழந்தைகளுமாகக் கடற்கரையில் துணியை விரித்து, டிபன் டப்பாக்களை எடுத்துப் பரப்பிச் சிறு தட்டுகளில் வைத்துச் சாப்பிடும் கோலாகலம்.

மாடசாமி அவர்களுக்கருகே போய் நின்றான். அது அவனுடைய வழக்கம். சாப்பிடுபவர்கள் சில சமயம் இரக்கப்பட்டு எதையாவது போடுவார்கள். சாப்பிட்டு முடிந்த பின் சிலர் தட்டைக் கழுவி வைக்கும் வேலையைக் கொடுப்பார்கள். அப்போது இருபது பைசா கூலியாகவாவது கிடைக்கும்.

அந்தக் குடும்பம் அவனுக்கென்று ஏதும்மிச்சம் வைக்கவில்லை. கூடையில் தட்டுக்களைப் போட்டுக்கொண்டு, துணியை மடித்து முடிக்கொண்டு கிளம்பிவிட்டார்கள். அன்றைக்கு அவனுக்குப் 'போணி' யாகவில்லை. ஒரு வாடிக்கை கூடக் கிடைக்கவில்லை. அன்று வயிறு காலி. குழாய்த் தண்ணீரைக் குடித்துவிட்டுப் படுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

அவனுக்கென்று ஓர் அம்மா இருந்திருந்தால்?

இருந்தாள் - ஆனால் அவளும் வாழ்க்கையில் சுகப்படவில்லை. ஒரு வேளைச் சோறுகூட உருப்படியாகக் கிடைத்ததில்லை. ஒவ்வொரு நாளும் திட்டு, அடி, உதை, குத்து என்று வாங்கிக் கொண்டு அம்மா அழுவாள். திருவொற்றியூரில் திருட்டுச் சாராயம் குடித்துவிட்டு வந்து அப்பா அம்மாவைத் திட்டி உதைப்பார். கையில் கண்டதை எடுத்து மொத்துவார். இன்றையப்பொழுது எப்படியோ என்று அம்மா வயிற்றில் உலையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பாள்.

அவனுக்கு ஒருவேளைச் சோற்றிற்கும்கூட நாதி இல்லாமற் போயிருக்கும் அவன் பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் படிக்க உட்கார்ந்திராவிட்டால்! அங்கே அவனுக்குச் சுடுசோறு போட ஆரம்பித்தார்கள். காய்கறிவகைகளும், பருப்பும் போட்டுச் சோறு கொடுத்தார்கள். குழம்பும், மோருமாகச் சோறு கிடைத்தது. அவனுடைய குழந்தைப் பருவத்தில் அவன் சுடு சோற்றைக் கண்டதில்லை. தண்ணீர் ஊற்றிய பழைய சோறுதான். கடித்துக் கொள்ளப் பச்சை மிளகாயும் உப்பும்தான். அம்மா அவனுக்குச் சுடச்சுடச் சோறு பொங்கி, காய்கறிவகைகளோடு சமைத்துப் போட்ட நாட்கள் எத்தனை? விரல் விட்டு எண்ணி விடலாம்....

அம்மா ஒரு வீட்டில் பாத்திரம் துலக்கி, துணி தோய்த்து வேலைகளைச் செய்து விட்டு வருவாள். அவளுக்கென்று அந்த வீட்டுக்கார அம்மாள் கொடுக்கும் சோற்றில் தண்ணீர் விட்டுக்கொண்டு வந்து கொடுப்பாள். எப்போதாவது மோர் கிடைக்கும்.

அந்த மோர் மட்டும் அல்ல- வாழ்க்கையே புளித்துப் போய்விட்டது, அந்தச் சிறுவனுக்கு.

'அட சட்' என்று அந்தச் சட்டியைப் போட்டு உடைத்துவிட்டுத் துள்ளி எழுந்த நாட்கள் உண்டு. அம்மாவை அவன்தள்ளி விட்ட வேகத்தில், அவள் சுவரில் மோதிக் கொண்டு விழுவாள். அவனுக்கு வயிறு குமட்டி நெஞ்சில் எதிர்க்கும். அம்மா எழுந்து நின்று ஆவேசத்துடன் கத்துவாள்.

''என்னடா பட்டா கத்தியாட்டம் குதிக்கிறே? சுடுசோறு வேணுமின்னா வேலைக்குப் போறதுதானே? ஒக்காந்து சாப்பிடறதுக்கு இந்தச் சோறுதான் கெடைக்கும்!'' முதுகில் 'சுள்' ளென்று ஓர் அடி விழும்.

அவன் 'வீல்' என்று அழுது கொண்டே பாய்ந்து வெளியே ஓடுவான்.

படிப்பதா, பிழைப்புத்தேடுவதா? அவனால் தீர்மானிக்க முடியவில்லை. அப்போதுதான் பள்ளிக்கூடத்தில் படிக்கும் குழந்தைகளுக்குப் படிப்புடன் சுடுசோறும் குழம்பும் காய்கறிவகைகளும் கிடைக்க ஆரம்பித்தன. அவன் பள்ளிக்கூடத்துக்குப் போவதென்று முடிவு செய்துவிட்டான். அம்மாவுக்கு அது பிடிக்கவில்லை.

''எக்கேடாச்சும் கெட்டுப்போ! சிறுவயசிலே கடலுக்குப் போய் பளக்கம் வந்தா, பெரியவனானப் பொறவு, மீன் குவியலை அரிச்சுக் கொணந்து கொட்டலாம். நீயாச்சும் உருப்படுவியோன்னு பார்த்தேன். உன் புத்தி வேறெங்கேயோ போவுது.

''அம்மா! நான் படிப்பேன். பொறவு வேலைக்குப் போவேன். ஒனக்குச் சம்பாரிச்சுப் போடுவேன். பயப்படாதே! இன்னிப்பொழுதுக்கு என்னைப் படிக்க வைக்க ஒன்னாலே முடியுமா? படிப்பை உடு! சோறு போடமுடியுமா?''

அம்மாவுக்குத் திடீரென்று என்ன புரிந்ததோ, என்னவோ, தன் மகனை அவன் மனம் விரும்பிய போக்கில் போக விட்டுவிட்டாள். வேலை செய்யும் வீட்டில் கெஞ்சிக் கேட்டுக் கடன் வாங்கிச் சொக்காயும் சராயும் தைத்துப்போட்டாள். சிலேட்டும் பலப்பமும் வாங்கிக் கொடுத்துப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினாள்.

மகனுடைய வாழ்வில் நடந்த அந்தத் திருப்பம் அவளுக்குப் பிடித்துப் போயிற்று. நாளாக ஆக, அதுவே அவனுக்கு நல்லதென்று நினைக்கும் மனப்பாங்கும் வந்து விட்டது. உட்காரவைத்து முதுகைததடவி, தலையைச் சீவிச் சிங்காரித்து மகிழுவாள்.

''டேய்! சொல்லுடா! அப்பனைப்போலக் குடிக்க மாட்டியே? எதுவந்தாலும் மெய்யாவே திருட மாட்டியே? சொல்லுடா'' என்று கனிவான குரலில் கேட்பாள்.

''நிச்சயமாச் சொல்லுறேம்மா! ரெண்டையும் நினைக்கக்கூட மாட்டேன். பட்டினியாக் காய்ஞ்சாலும் சரி, ஒருநாளும் திருடமாட்டேன்! இந்த உசிர் இருக்கிறவரைக்கும்...

அம்மா அவன் நெற்றிப் பொட்டில் விரலை வைத்து எடுத்துச் சொடுக்கிக் கொள்வாள். ''ஒனக்கு ஒரு தாயத்து மந்திரிச்சு கட்டறேண்டா! நான் போயிட்டாலும் அந்தத் தாயத்தைப் பத்திரமா வச்சுக்க! தாயத்து உன்னைத் தாய் போலக் கட்டிக் காப்பாத்திடும்''!

மறுநாள் அம்மா அவனைக் குப்பத்துக் கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு போனாள். வேப்பிலை அடித்துத்தாடி சாமியார் தாயத்து கட்டினார். என்ன ஆயிற்றோ தெரியவில்லை- அதற்குப் பிறகு அவனுக்கு நல்லாவே படிக்க வந்து விட்டது.

அவன் பாஸ் பண்ணிவிட்டுக் குதித்துக் கொண்டே வருவான்.



அம்மா அவனை ஆசையோடு அணைத்து முத்தமிடுவாள். மதுரை வீரன் கோயிலுக்குக் காணிக்கை அனுப்பி வைப்பாள். அவனைக் கூட்டிக் கொண்டுபோய், அவள் வேலை செய்யும் வீட்டுப் பெரிய மனிதரை வணங்க வைப்பாள். அவர் முழுசாக ஒரு வெள்ளி ரூபாயை எடுத்துஅவனுக்குக் கொடுப்பாள்.

''வாங்கிக்கோடா பயலே! படிப்பு நல்லா வரணுமின்னு வேண்டிக்க! அவுங்க தெய்வம் மாதிரி!''

அவனும் தரையில் விழுந்து வணங்கி வேண்டிக்கொள்வான்.

ஒருநாள் அந்த நம்பிக்கை மண்டபம் தூணோடு பெயர்ந்து விழுந்து நொறுங்கிப் போய்விட்டது.

அம்மா காலரா வந்து இறந்து போனாள். அவளை யாராலும் காப்பாற்ற முடியவில்லை. ஆசுபத்திரியிலிருந்து உடம்பைக் கூட வீட்டுக்குக் கொண்டு வரவில்லை. குப்பத்துக்கு வந்தால் காலரா பரவிவிடும் என்று ஒதுக்கிவிட்டார்கள். மஞ்சளோடு போயும் கூட அம்மாவுக்கு மாலை கூடப் போட முடியவில்லை.

அப்பா, வீட்டுக்கு வந்தார். ஒரு மாதமாக வராதவர் அன்று வீட்டுக்கு வந்தார். மார்பின் மேல் கையை ஒடுக்கிக்கொண்டு மூலையில் உட்கார்ந்திருந்தார். அவன் இன்னொரு மூலையில் உட்கார்ந்திருந்தான். அவனால் அழக்கூட முடியவில்லை.

அப்பாவின் கண் ரப்பையெல்லாம் கள் குடித்த மாதிரி செக்கச் செவேலென்று இருந்தது. குப்பத்துல ரெண்டு மூணுபேர் மனசு இரங்கி வீட்டுக்குவந்து விசாரிச்சுட்டுப் போனாங்க. ''சாவு என்று வந்து விட்டால், மனுசன் ஒண்டியாத் திண்டாடக்கூடாது!'' என்று சொல்லிக் கொண்டதுகூட ஞாபகத்துக்கு வந்தது.

தனியாக விடாமல் அவர்கள் என்ன செய்தார்கள்! தவிக்காமல் இருக்க என்ன உதவி செய்தார்கள்? அப்பாவே வீட்டில் தங்கவில்லை. அவர்கள் மட்டும் வந்து என்ன சாதித்து விடப்போகிறார்கள்?

எல்லோரும் அவனை ஒதுக்கிவிட்டார்கள். குப்பத்தில் இருந்த அவனுடைய வயதுப் பையன்களுக்குக் கூட அவன் படிக்கப்போவது பிடிக்கவில்லை. அவர்களும் ஒதுங்கிவிட்டார்கள். தங்காலிலேயே அவன் நிற்க வேண்டிய அவசியம் பத்து வயதிலேயே வந்துவிட்டது.

அப்புறம் இப்படித்தான்-

பகலில் படிக்கப் போவான். அங்கே சோறும் கிடைக்கும். மாலை



வேளைகளில் இப்படிக் கடற்கரைக்கு வருவான். மூட்டைதூக்க, கார்துடைக்க, தட்டுக்கழுவ, குழந்தையைத்தூக்க - இப்படிக் கடற்கரைக்கு வருபவர்கள் அவனுக்கு சில்லறை வேலைகளைக் கொடுப்பார்கள். அது அவன் இரவுச் சாப்பாட்டிற்கு ஓரளவு கட்டுபடியாகும்படி இருக்கும். மிஞ்சியதைப் புத்தகம் வாங்க, துணி வாங்கச் சேர்த்து வைத்துக் கொண்டான். மாதம் ஐந்து ரூபாயாவது அப்படித் தனியாக மிஞ்சும்.

''ஏலே! இங்கே வா!''

சேட் மணலில் மனைவி குழந்தைகளுடன் உட்கார்ந்திருந்தார். கையெழுத்து மறையும் நேரம். மூக்குத் தண்டு வரை சேட்டின் மூக்குக் கண்ணாடி சரிந்தது. பெரிய விழிகள் வெளியே எட்டிப் பார்த்தன.

''என்னா மொதலாளி''

சேட்டின் கீழுதடு புன்னகையில் பிதுங்கிற்று. அவன் அப்படிச் சொன்னதில் அவருக்குத் தனி மகிழ்ச்சி என்பது கண்களின் சுடரில் தெரிந்தது.

''மரியாதை தெரிஞ்ச பையன்-சரி. இந்தக் கூடையிலே இருக்கிற தட்டு, கரண்டி எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு வா. கொளந்தைங்க கடல் அலையிலே நிக்கணும்னு சொல்லுது. நீ அப்படியே எல்லாத்தையும் கழுவிக் கொடு. திருப்பிக் கொணாந்து கார்லே ஏத்திடு. ஒனக்கு அரைரூவா தரேன்!'

''ஆகட்டும் மொதலாளி''!

அவன் கூடையைத் தூக்கிக் கொண்டு பின்னால் நடந்தான். குதித்துக் கும்மாளம் போடும் குழந்தைகளுக்கு நடுவே கூடையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு நடந்தான். அலைகடலின் நீர் கால்களை நனைத்துக் குழிபறிக்க, ஆர்ப்பாட்டமாகக் குதித்த குழந்தைகளுக்கிடையே அவன் எச்சிற் தட்டுகளைக் கழுவி, கரண்டிகளைக் கழுவி, பொறுக்கிப் போட்டுக் கொண்டிருந்தான்.

லேசாக இருட்டிவிட்டது. கண் சரியாகத் தெரியவில்லை. அவன் கைவிரல்கள் இயந்திரகதியில் வேலை செய்து கொண்டிருந்தன.

சேட்டின் மனைவி வந்தாள். கூடையில் அவன் அடுக்கி வைத்த தட்டுகளையும் சிறுகரண்டிகளையும் எண்ணினாள். அவளுடைய புருவங்கள் நெரிந்து உயர்ந்தன. குரல் கனத்துக் கிறீச்சிட்டது.

''ஆறுகரண்டிதானே இருக்குது''

சேட் கையில் குழந்தைகளின் கைவிரல்களைக் கொத்தாகப் பிடித்துக் கொண்டு அங்கே வந்தார்.

''என்னா? எதையாவது காணோமா?''

''ஏளு கரண்டி இருக்க வேணும். ஆறுதான் இருக்குது!''

''நல்லா பார்த்தியா? கூடையிலே நல்லாப் பாரு!''
சேட்டின் மனைவி தொந்தி சரிய, மேலாடை முகத்தின் மேல் கவிழ, இருட்டில் துழாவி எண்ணிப் பார்த்தாள்; உதட்டைப் பிதுக்கினாள்.

''ஆறுதான் இருக்குது!''

சேட் நகர்ந்து வந்து மாடசாமியின் கையைப் பிடித்துக் கொண்டார்.

''ஏழாவது கரண்டி எங்கேடா?''

அடிவயிற்றில், குடல் சதையை ஒரு குத்தாய் பனிக்கட்டி அள்ளிப் பிடித்தது.

''இன்னொரு கரண்டி எங்கேடா?''

சேட்டின் கைப்பிடி இறுகிற்று. அவன் அதை உதற முயன்றான். ஆனால் பிடி பூணாய்க் கவ்விக் கொண்டிருந்தது.

''திருட்டுப்பயலே, மரியாதையாக் கொடுத்துடு!''

''எனக்குத் தெரியாதுங்க, கொடுத்ததை நான் கழுவி எடுத்துக் கிட்டிருக்கேன்.''

அவன் ஒதுங்குவதற்கு முன் முகத்தில் அந்த அடி வீழ்ந்தது. கண்களில் மின்னல் பொறிந்து அடங்கிற்று. நிற்க முடியாமல் கீழே விழுந்தான். தோள்மேல் முரட்டுப் பிடி வீழ்ந்தது. அவனைப் பிடித்துத் தூக்கினார் சேட்.

''மரியாதையா கொடுத்திடு; இல்லையானா போலீசிலே சொல்லுவேன்-''.

''எனக்குத் தெரியாதுங்க! எனக்குத் திருடத் தெரியாதுங்க! நான் திருடியதே இல்லீங்க''

அவன் சொல்லி வாய் மூடவில்லை. வாய் மேல் விழுந்த அடியில் உடல் முழுவதும் அதிர்ந்தது. அழுகைச் சத்தம் கூட அடங்கிப் போய் விக்கித்து நின்றான்.

சுற்றிலும் ஒரு சிறு கூட்டம் கூடி விட்டது. ஆளுக்கு ஆள் விசாரணை செய்யத் தொடங்கினார்கள். சேட் புரிந்து கொண்டுவிட்டார். அங்கேயே நின்று கொண்டிருந்தால் நிச்சயமாக நேரம் தவறிவிடும். அவரால் வீட்டுக்குத் திரும்பிப் போகத் தாமதமாகிவிடும்.

அவன் கீழே உட்கார்ந்து தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான். சேட் கூடையுடன் குழந்தைகளுடன் புறப்பட்டுவிட்டார். அவன் எழுந்து நின்று கூவினான்.

''மொதலாளி! எனக்குக் கொடுக்க வேண்டிய அரைரூபாய்!''

''திருட்டுப்படவா! நீதான் எனக்குக் கொடுக்க வேணும்!''

சேட் அரைரூபாயை மிச்சம் பிடித்துக் கொண்டு போய்விட்டார். கடற்கரையில் குளிர்நிலவில் கிழிந்த சட்டையின் கையைத் தடவிப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். சில்லென்ற உணர்வு வெட்டி நின்றது. கையிலிருந்து தாயத்தைக் காணோம்! அது எங்கே விழுந்தது? இருட்டில் அதை எப்படித் தேடுவது?

அந்த இடத்தில் மணல் மீது கிடந்த பொருட்களை அடையாளம் காண முயன்று தேடுகையில், காலடியில் மணல் 'சரக்சரக்' எனப் புதைகையில் அவனுடைய கண்களில் கருவண்டுகள் மின்னின. இரவுப் பூச்சிகள் ஒலி எழுப்பின. மணல் மெத்தைமேல் எத்தனையோ பொருட்கள். அவையாவுமே அந்த இருளில் ஒரே விதமாகத்தான் தோன்றின.

''டேய்! யார்ராலே? இருட்டிலே இங்கே என்ன வேலை? ஓடிப்போ! இல்லாட்டி 'லாக்கப்'பிலே தள்ளிடுவேன்!''

ரோந்து சுற்றிக் கொண்டுவந்த காவல்காரர் தடியைச் சுழற்றினார். உதடுகளுக்கிடையே சிகரெட் தணல் அடையாளமாக ஒளிபெருக்கி ஓய்ந்தது. தடியடிக்குப் பயந்து கடற்கரையை விட்டு ஒதுங்கினான்.

விடியற்காலை வரை காந்தி சிலை அருகில் அமர்ந்திருந்தான். குளிரில் உள்ளே உடல் சிலிர்த்து அடங்கிக் கொண்டிருந்தது. இரவு முழுவதும் அம்மாவின் நினைப்புத்தான். அவளுக்குக் கொடுத்த வாக்கை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று வரையில் அவன் அதைக் காப்பாற்றி விட்டான்.

வயிறு பசித்துச் சுருண்டபோதும் அவன் திருடவில்லை.

அவனுக்குத் திருடன் என்று பட்டம் கட்டிவிட்டார்களே? அவனுடைய தாயத்தை யாரோ திருடிக் கொண்டு போய்விட்டார்களே?

அவன் விழி ஓரங்கள் சிவந்தன. கண்ணீர் முத்துமுத்தாக உருண்டு வழிந்தது. அவன் தாயின் நினைவுக்காகவா கண்ணீர் விடுகின்றான்? அல்லது வாழ்க்கையில் இழந்தவற்றுக்காகவா?

பொலபொலவென்று விடிந்து விட்டது.

கடற்கரைக்குக் கார்கள் வரத் தொடங்கிவிட்டன. நடைபாதையில் பயிற்சிக்காக நடப்பவர்களும் ஓடுபவர்களுமாகக் கூட்டம் வழிந்தது.

கடற்கரையை நோக்கி நடந்தான். முதல் நாள் மாலை, செய்யாத திருட்டுக்காக உதை வாங்கிய இடத்தை நோக்கி நடந்தான். குளிர்ந்த காற்று முகத்தை ஒற்றியது.

கடல் அலைகள் மெதுவாகப் புரண்டு கழுவிய மண்ணில் ஏதோ பளபளத்தது. குனிந்து பொறுக்கினான். சேட்டின் கரண்டி.

அவன் திருடவில்லை. காலைக் கதிரொளியில் அது மெய்ப்பிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது. கரண்டியைக் கையில் எடுத்து முழுப் பலத்தோடு கடலுக்குள் வீசினான். மனத்தின் சுமை குறையப் பெருங் குரலில் கூவினான்.

''அம்மா! நான் திருடவில்லை! பிறர்பொருள் எனக்கு வேண்டவே வேண்டாம்!''

திரும்பி நடந்தான். உணர்ச்சிப் புயலின் வேகம் மெல்ல மெல்லத் தணியத் தொடங்கிற்று. காலடியில் ஏதோ உறுத்திற்று. குனிந்து அதை மண்ணின் புதையலிலிருந்து உருவி வெளியே எடுத்தான்.

அது அவனுடைய தாய் அணிவித்த தாயத்து.




20 அம்சத் திட்டம் வெற்றி பெற...

**நமது பொருளாதாரம் முன்னேறுகிறது. நமது மக்களின் சுமையைக் குறைக்கக் கூடிய இம்முன்னேற்றத்தைத் தொடர்ந்து பராமரிப்பது நம் கையிலிருக்கிறது. 20 அம்சத் திட்டம், உங்கள் ஒவ்வொருவருக்குமல்லாது, சேவை செய்து, போற்றி, வலுக்கூட்ட வேண்டிய நமது நாட்டுக்கும் உரியது. இத்திட்டத்தை வெற்றி படையச் செய்வதில் உங்கள் மனமார்ந்த ஒத்துழைப்பைக் கோருகிறேன்.**

**(மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் 14-1-1982 அன்று ஆற்றிய உரையிலிருந்து.)**

# உலகம் போற்றும்

சிந்தித்துச் செயல்பட்டால்
தோல்வி இல்லை!
செயலூக்கம் குன்றுங்கால்
வெற்றி இல்லை!

நிந்தித்து நிந்தித்து
ஊரார் குற்றம்
நிதமும்நாம் ஆராய்ந்தால்
நேர்ந்திடும் தொல்லை!

எண்ணத்தில் தெளிவிருப்பின்
செயலும் சிறக்கும்
எளிமைக்கு இடந்தந்தால்
உலகம் மதிக்கும்!

மண்ணுக்குள் வைரமெனப்
பொறுமை காப்போம்!
மண்டுகின்ற வளமெல்லாம்
வாழ்வில் சேர்ப்போம்!

—வேலூர் ம. நாராயணன்



மாணவர் பக்கம்:

# தயிரோ தயிர்

கோடைக்காலத்தில் தினசரி ஒரு கப் தயிர் சாப்பிட்டால் நன்றாக ஜீரணமாகும். வயிற்றிலுள்ள அழிவுப் பொருட்களை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியை உண்டாக்கும்.

தேக ஆரோக்கியத்துக்குத் தயிர் மிகவும் ஏற்றது. அதில் கால்சியம் சத்து அதிகம் இருக்கிறது. கால்சியம் சத்து உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் தேவைப்படுகிறது.

முகத்தில் தயிரை, கிரீமைப் போல தடவிக் கொண்டால் முகம் அழகு பெறும். தயிரிலுள்ள கிருமிகள் முகத்தோலை மென்மையாகவும், பளபளப்பாகவும் ஆக்குகிறது.

பஞ்சாபி குடும்பங்களில்குழந்தைகளைக் குளிப்பாட்டுவதற்கு முன்பு உடல் முழுவதும் தயிரைத் தேய்த்து நன்கு ஊறியபின் தண்ணீரில் குளிக்க வைக்கிறார்கள். அதனால் அவர்களது தோல் வெண்மையாகிறதென நம்புகிறார்கள்.

பழங்குடி மக்கள் தலைமுடி நன்கு வளர்வதற்காகவும், சுத்தமாக இருப்பதற்காகவும் தயிரை உபயோகித்து வந்தார்கள். சீக்கியர்கள் இன்றும் தங்கள் முடி அழுக்கைப் போக்கி சுத்தம் செய்ய தயிரைத்தான் உபயோகிக்கிறார்கள். அது முடியை மிருதுவாகவும், உறுதியாகவும், ஆரோக்கியமாகவும் ஆக்குகிறது.

முகத்தில் தழும்பு இருந்தால் முள்ளங்கிச் சாற்றை மோரில் கலந்து முகத்தில் தடவி ஒரு மணி நேரம் கழித்து, குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவி, பின்னர் மெல்லிய துணியால் முகத்தைத் துடைத்துக் கொண்டால் முகத் தழும்பு நாளடைவில் மறைந்துவிடும்.

முகப் பருக்களைப் போக்க தயிரும் பருப்புப் பொடியும்கலந்த கலவையை முகத்தில் பூசிக் கொண்டு பின்னர் துடைத்து விட்டால் முகப்பருக்கள் மறைந்துவிடும்.

—நன்றி : 'செய்தி மடல்'



விளையும் பயிர்



வட ஆர்க்காடு மாவட்டம், வேலூர் திருவேங்கடவன் மேனிலைப்பள்ளியில் பதினோராம் வகுப்புப் பயிலும் மாணவர் எஸ். இராஜேஷ்.

இலக்கியத்தில் ஆர்வமுள்ள இவர், பல்வேறு பேச்சுப் போட்டிகளிலும், கட்டுரைப் போட்டிகளிலும் பரிசுகள் பெற்றுள்ளார். தேசிய நலப்பணித் திட்டத்திலும் இவர் ஈடுபட்டுப் பணியாற்றி வருகிறார்.

# கல்வி

"கல்வி வேறு, படிப்பு வேறு. கல்வியானது புத்தி, ஆத்மா சிறப்புப் பெறச் சீர்பட்டு நிற்பது, வெறும் எழுதப்படிக்கத் தெரிந்திருப்பது மட்டும் அதைத் தந்து விடாது. தண்ணீர் மட்டும் ஆகாரமாகிவிடாது; ஆனாலும் அவசியமானதுதான்! ஆயினும் அதை விடவும் உணவு முக்கியமானது. அதைப்போலவே எழுதப் படிக்கத் தெரிவது மட்டும் கல்வியைப் பெற்றதாகாது".

—மூதறிஞர் ராஜாஜி

மாணவர் பக்கம்

# அறிவுச்சுடர்

கடலின் ஆழத்தைக் கணக்கிடும் அளவு முறையின் பெயர் என்ன?
—ஃபேத்தம் (Fathem)

மின்சார வேலைகளைச் செய்யும் பொழுது ரப்பர் உறை அணிந்து கொள்வது ஏன்?
—ரப்பர் மின்சாரத்தை கடத்தாது.

மஞ்சள் காமாலையைக் குணப் படுத்த உதவும் தாவரம் எது?
—கீழாநெல்லி.

கோழிப்பண்ணை நிறுவ எக் காலம் சிறந்தது?
—இளவேனிற்காலம்.

மனித உடலிலுள்ள இரத்தத்தின் வகைகள் யாவை?
—இரத்தத்தை நான்கு வகை களாகப் பிரித்துள்ளனர். அவை: ஏ, பி, ஏபி, ஓ.

இயந்திரத் துப்பாக்கியைக் கண்டு பிடித்தவர் யார்?
—1961-ஆம் ஆண்டு ரிச்சர்டு ஹாட்லிஸ் என்ற அமெரிக்க நாட்டவர்.

மண்ணில் வாழும் முக்கிய உயிரி னங்கள் யாவை?
—மண்புழு, பாக்டீரியா.

மண்ணின் மணம் எப்போது நாம் உணர்கிறோம்?
—மழைபெய்து ஓய்ந்தபின்.

பிரிட்டிஷ் இந்தியாவின் கடைசி வைஸ்ராய் யார்?
—மவுண்ட்பேட்டன்.

விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் எங்குள்ளது?
—திருவனந்தபுரத்தில்.

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியப் பெண்மணியார்?
—பச்சேந்திரிபால்.

காப்பி உற்பத்தியில் முதலிடம் பெறும் மாநிலம் எது?
—கர்நாடகா.

தமிழ்நாட்டில் நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் இடங்கள் யாவை?
—குந்தா, மேட்டூர், பாபநாசம்.

நம்நாட்டில் அணுசக்தி நிலை யங்கள் உள்ள இடங்கள் கூறு?
—தாராப்பூர் ராணா பிரதாப் சாகர், கல்பாக்கம்.

உடன்கட்டை ஏறுதல் நீக்கப் பட்டது யாருடைய ஆட்சியில்?
—வில்லியம் பெண்டிங் பிரபு ஆட்சியில்.

கிராமபோன் ரிக்கார்டுகள் தயா ரிக்கும்போது மெழுகுத் தகட் டின்மேல் கிராபைட் ஏன் தூவப்படுகிறது?
—அதை மின் கடத்தியாக்க.

எலும்புச் சாம்பலில் அடங்கி யுள்ள வேதியப் பொருள் யாது?
—கால்சியம் பாஸ்பெட்

வெடி மருந்தாகப் பயன்படும் பாதரச சேர்மம் எது?
—பாதரச பல்மினேட்.



## ஆன்றோர் சொல்வழி நடந்திடுவீர்!

நாளைய தலைவராம் குழந்தைகளே
நாட்டை ஆளப் போகின்றீர்
காளைபோல் வீரராய் வாழ்ந்திடுவீர்
கூடியே பகையை வென்றிடுவீர்!

கோழையாய் வாழ எண்ணாதீர்
குமுறியே நெஞ்சம் துடிக்காதீர்
ஏழைகள் வாழ்வு உயர்ந்திடவே
ஈடிலா உழைப்பைத் தந்திடுவீர்!

மாந்தரில் தேவராய் வாழ்ந்தவரின்
மகிமை போற்றிக் காத்திடுவீர்
காந்தியைப் போன்ற உத்தமர்தம்
கருணை வழியில் சென்றிடுவீர்!

வையகம் பூத்த பூந்தளிரே
வளமை நாட்டிற் கீந்திடுவீர்
தூயநல் சிந்தை கொண்டவராய்த்
தொண்டுகள் பலவும் புரிந்திடுவீர்!

கலைகள் பலவும் கற்றிடுவீர்
கற்றநல் வழியில் சென்றிடுவீர்
அலையும் மனத்தை அடக்கிடுவீர்
ஆன்றோர் சொல்வழி நடந்திடுவீர்!

—கவிஞர் காசி



குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

## சென்னை-600 005.

( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2o$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்.
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
டிஐபிஆர்/17735/363/86/என்ஏஎஸ்.

**தொழிற்சாலை**

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

## பாரதிதாசன் தமிழ் முழக்கம்

தொகுப்பு: முல்லை மு.பழநியப்பன்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600098.

விலை: ரூ.5 பக்கம்: 56

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் கவிதைகளில் தமிழுணர்வுக்கு அதிக அளவு இடம் உண்டு.

தமிழைக் குறித்து அவர் தெரிவித்திருக்கும் கவிதை வரிகளைத் தொகுத்து நூலாக்கியிருக்கிறார் தொகுப்பாளர். நல்ல முயற்சி; வரவேற்கத் தக்க முயற்சி. தமிழ் குறித்துப் பாவேந்தரின் கருத்தை மேற்கோள் காட்டுவதற்கு இந்நூல் உதவுகிறது.

## ஒரு நாளிதழ் உருவாகிறது

ஆசிரியர்கள்: து.தமிழரசி
டாக்டர் க.சி.விஜயலட்சுமி
என்.ரெங்கநாதன்
வெளியீடு: சங்கப்பலகை 32, கக்கன்வீதி, செனாய்நகர், மதுரை-625020

விலை: ரூ. 13 பக்கம்: 130

ஒரு நாளிதழ் எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதை மிக விவரமாக எடுத்துச் சொல்கிறது இந்நூல். தினமும் நாளிதழைப் படித்து வரும் வாசக நேயர்களுக்கு, அவ்விதழ் எவ்வாறு உருவாகி வெளிவருகிறது என்ற செய்தி சுவையை வழங்குவதுல் வியப்பில்லை.

உலகத்தில் செய்தித்தாள் தோன்றிய வரலாறு, இந்திய செய்தித்தாள்களின் வளர்ச்சி, செய்தித்தாளின் அமைப்புமுறை ஆகியவை தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. பக்க அமைப்பின் பல்வேறு வகைகள், விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. பத்திரிகை நடத்த விரும்புவோர் - பத்திரிகையைப் பதிவு செய்து கொள்ளும் முறை என்ன? பத்திரிகைத்தாள் சலுகை விலையில் பெறுவது எப்படி? என்ற விவரம் எல்லாம் இந்நூலில் அடங்கியுள்ளன. விளம்பரங்களின் அவசியம் குறித்தும் இந்நூல் வலியுறுத்துகின்றது. இதழியல் துறை மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

## வண்ணத்தமிழ் வானிலே

ஆசிரியர்: கவிஞர் டாக்டர் தங்க இராசகோபாலன்,
வெளியீடு; பூவழகி பதிப்பகம், 29-2 சீனிவாசப் பெருமாள் சன்னதித் தெரு, ராயப்பேட்டை, சென்னை-600014.

விலை: ரூ. 7.00 பக்கம்:88

மரபுக்கவிதைகள் 28 கொண்ட தொகுப்பு இது. பெரும்பாலும் அகத்துறைக் கவிதைகளாக அமைந்துள்ளன. தமிழைக் குறித்தும், பெரியார்-அண்ணா ஆகியோர் குறித்தும் கவிதைகள் உள்ளன. அறுசீர்விருத்தம், எண்சீர் விருத்தம், ஆசிரியப்பா ஆகிய யாப்புகளில் கவிதைகள் யாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை மாறி மாறிப் படிக்கும்போது உள்ளத்தில் புதிய உற்சாக அலைகள் எழுகின்றன. நல்ல சொல்லாட்சி, கவிதைகளில் காணப்படுகின்றன. சில கவிதைகள் இசைப்பாடல்களாகவே ஒலிக்கின்றன. போதனையும் கவிதைகளில் உண்டு. மொத்தத்தில் பழச்சாற்றைப் பருகிய உணர்வு, இந்தக் கவிதை நூலைப் படிப்பதில் ஏற்படுகிறது.

—தமிழ்ப்பித்தன்

# நூல் நயம்

## விடுதலைப் போரில் சேதுபதி மன்னர்

ஆசிரியர்: டாக்டர் எஸ்.எம்.கமால்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி. சிட்கோ எஸ்டேட், சென்னை-600098.

விலை : ரூ. 25 பக்கம்: 198

நம் நாட்டு விடுதலைப் போரின் முன்னோடியாகத் திகழ்ந்த வீரர்களில் ஒருவர் முத்துராமலிங்கவிஜய ரகுநாத சேதுபதி மன்னர் (1760-1809). செம்பிநாட்டு மறவர் கிளையைச் சேர்ந்தவர்கள் வழித்தோன்றலான இவரது அந்நிய ஆதிக்க எதிர்ப்பு உணர்வை ஆதாரத்துடன் தொகுத்துக்காட்டியுள்ளார் நூலாசிரியர். தமிழில் ஆராய்ச்சிமிகுந்த நல்ல வரலாற்று நூலை எழுத முடியும் என்பதையும் நிரூபித்துள்ளார்.

இதுவரை ஆராய்ச்சி அறிஞர்களின் நூல்களில் சிறுகுறிப்பாகத் தென்பட்டவைகளை, விரிவாகத் தொகுத்து வழங்கியுள்ள முயற்சி பாராட்டுக்குரியது. சேதுபதி சீமையின் பெருமையும் மன்னரின் விடுதலை வேட்கையை உணர்த்திடப் பெரும் வாய்ப்பாக உள்ளது இந்நூல். ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமல்ல, வரலாற்று மாணவர்களும் படித்துப் பயன் பெறத்தக்க நூல்.

## வயிற்றுக் கோளாறுகள்

### காரணங்கள்
### தடுப்பு முறைகள்
### சிகிச்சைகள்

ஆசிரியர்: டாக்டர் இராம கிருஷ்ணன்,
வெளியீடு: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை-98.

விலை: ரூ.10 பக்கம்: 88

ஹோமியோபதி மருத்துவ முறைகளை விளக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல், வயிற்றுக் கோளாறுகள் பற்றிய விவரங்களுடன் செரிமான மண்டலம், செரிமானப் பிணிகள், முதலிய விவரங்களையும், வேறுசில நோய்கள் குறித்த செய்திகளையும் கூறி உள்ளன.

ஆரோக்கிய வாழ்க்கையை விரும்பும் அனைவரும் படித்துப் பயன் பெறத்தக்க நூல்.

—மாமூலன்

## கீதைப் பேருரைகள்

ஆசிரியர்: ஆச்சாரிய வினோபா பாவே,
வெளியீடு: காந்திய இலக்கிய சங்கம், தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை-625 020

விலை: ரூ.20 பக்கம்: 392

காலத்துக்கேற்ற ஆன்மீகக் கருத்துக்களையும், வாழ்வாங்கு வாழ்வதற்கான வழி முறைகளையும் கூறும் அற்புத நூலாகப் பகவத்கீதை விளங்குகிறது.

பைபிள், திருக்குறள், இராமாயணத்தைப்போல, பகவத்கீதையும் பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பது, இதன் அருமையை நன்குணர்த்தும். இந்நூல் பதினான்காம் பதிப்பாக வெளி வந்திருக்கிறது.

இந்நூலுக்கு, ஆச்சாரிய வினோபா பாவே மிகச்சிறந்த முறையில் உரை எழுதியுள்ளார். 1932இல் வினோபா பாவே சிறையிலிருந்தபோது, உடனிருந்த அரசியல் கைதிகளிடம் உரையாற்றிய 18 சொற்பொழிவுகளின் தொகுப்பே இந்நூல்.

இந்நூலைப் படித்து மகிழ்வதற்கேற்ற வகையில் இனிய எளிய உரை கைகொடுக்கிறது. எளிதில் மனப்

பாடம் செய்து கொள்ளத்தக்க வகையிலும் இதன் அழகிய உரைகள் அமைந்துள்ளன.

—பி.வி. கிரி

**இல்லற வாழ்வில்**
**ஏற்றம் பெறும் வழிகள்**

ஆசிரியர் : வாசன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை-600 098.

விலை : ரூ. 10. பக்: 123

இல்லறம் நல்லறமாக விளங்கிட-பல இனிய கருத்துக்களை இந்நூல் எடுத்தியம்புகிறது. குடும்பச் சூழலில் பல்வேறு பிரச்சினைகள், சிக்கல்கள் ஏற்படுவது இயல்பு தானே? அவற்றுக்கெல்லாம் சுமுகமான தீர்வு காணும் வகையில் பல யோசனைகள் - அறிவுரைகள் எல்லாம் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

குழந்தை வளர்ப்பு, நோயற்ற வாழ்வு, வீட்டுக் குறிப்புகள் முதலான 13 தலைப்புகளில் கட்டுரைகள் அமைந்துள்ளன. புது மணத் தம்பதியருக்கும், இல்லற வாழ்வில் ஈடுபட்டிருப்போர்க்கும் இது வழிகாட்டியாக விளங்கும்.

**இந்தக் காட்டுக்கு யார் ராஜா?**

ஆசிரியர் : பாபநாசம் குறள்பித்தன்.

வெளியீடு. வசந்தா பிரசுரம் 86, ஆரிய கவுடர் ரோடு கோடம்பாக்கம், சென்னை-600 024.

விலை : ரூ. 9. பக் : 96.

இந்நூலில் 22 குட்டிக் கதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் படிக்கச் சுவையானது; போதனை தரவல்லது. 'இந்தக் காட்டுக்கு யார் ராஜா?' என்னும் முதல் கதையே இந்நூலைப் படிக்கத்தூண்டுகிறது. அடுத்தடுத்து வரும் கதைகளும் குழந்தைகளைக் குதூகலப்படுத்தும் வண்ணம் உள்ளன. நல்ல கருத்துக்களை மனத்தில் பதிய வைக்கும் கதைத் தொகுப்பு இந்நூல்.

—பி.வி.ஜி.




**தமிழரசு அட்டைப்படம் (1-11-87) மிகச் சிறப்பாக இருந்தது. இந்த இதழில், 'புதுக்கோட்டை மாவட்டத்தில் கலையழகு மிக்க சுற்றுலாத் தலங்கள்' கட்டுரை விராலிமலை பற்றி விரிவாக அறிய உதவியது.**

—மு. வேதபுரி
கோட்டுப்பாக்கம்.

பேராசிரியர் கா. சு. பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்ததன் மூலம் (16-11-87) அன்னாரது பெருமைகளைத் தெரிந்து கொண்டேன்.

—சொ. முத்தமிழ்வாணன்
தஞ்சாவூர்.

நேருவின் பொன்மொழிகளைப் படித்தபோது, தன் உயிருக்கு மேலாக தேசத்தை நேசித்து இருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டேன்.

—ச. வேலு சுந்தர்,
சின்னமனூர்.

மகாகவி பாரதியின் வாழ்க்கைக் குறிப்பு மற்றும் மூதறிஞர் இராஜாஜி வாழ்க்கைக் குறிப்பு (1-12-87) படிப்பதற்குப் பயனுள்ளதாக இருந்தது.

—டாக்டர் கே.சுப்பையா
இருமேனி.

'புகையில்லா அடுப்புகள்' என்னும் கட்டுரை மூலம் சாணஎரி வாயுத் திட்டத்தால் எவ்வளவு நன்மை என்பதைப் புரிந்துகொண்டேன். 'எழுதுகோல் தெய்வம் எழுத்தும் தெய்வம்' கட்டுரையில் பாரதியின் கவிதைத் தொழில் கருத்துக்கள் மிளிர்ந்தன.

—கோ. தவச்செல்வம்,
கோ. சுரேஷ்ராஜா
கீரனூர்.

**'அகிலம்போற்றும் ஆர்க்காட்டு இரட்டையர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மலராகவும், நாமக்கல் கவிஞர் நூற்றாண்டுத் தொடக்க விழா மலராகவும், சிதம்பரனார் மாவட்டம் ஓராண்டு நிறைவு விழா மலராகவும் 'தமிழரசு' முப்பெரும் விழாச் சிறப்பு மலர்ந்து மணம் பரப்பியிருந்தது. (16.10.87)**

—அரிமா பூபாளம்,
ப.முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

**பண்டித ஜவகர்லால் நேருவின் திருவுருவத்தை அட்டையில் அழகுடன் வெளியிட்ட (16.12.87) தமிழரசுக்கு நன்றி.**

—எம்.சடையாண்டி,
வேப்பம்பட்டி.

**தமிழரசு இதழில், மிக அருமையான செய்திகள் உள்ளன. அவை படிக்கப் படிக்க இனிமை தருகின்றன.**

—கே. புஷ்பராஜ்,
களியக்காவிளை.

**'மாணவர் பக்கம்' 'நூல் நயம்' பகுதிகள் மூலமாகப் பல பயனுள்ள செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது.**

—எம்.செல்வராஜ்,
திருவள்ளூர்.

**"நூல் நிலையம் இல்லாத வீடு உயிரில்லாத உடம்பு போன்றது. வீட்டிற்கு ஒரு நூல்நிலையம் தேவை. மனிதன் ஓய்வு நேரங்களில் நூல்களைப் படித்து அறிவைப் பெருக்க வேண்டும். தொழில் செய்து ஓய்ந்திருக்கும்போது அவனது உள்ளத்திற்குக் கிளர்ச்சி தரக் கூடியவை நூல்களே"**

**—தாமஸ் ஆல்வா எடிசன்**



# பிணி தீர்க்கும் மணத்தக்காளி

உலகில் வெப்ப மண்டல நாடுகளில் மணத்தக்காளிக்கீரை காணப்படுகிறது. இந்தியாவிலும், இலங்கையிலும் இது மிகுதியாகக் கிடைக்கிறது. நம் நாட்டில் வறண்ட பகுதிகளில் இது நன்கு வளரக் கூடியது.

கீரை வகைகளில், சிறந்த கீரையாகக் கருதப்படும் கீரைகளில் மணத்தக்காளிக் கீரையும் ஒன்றாகும். இதற்குப் பல பெயர்கள் உள்ளன. மிளகுத் தக்காளி, கறிஞ்சுக் கட்டி, மணித்தக்காளி, செஞ்சுக் கட்டி, சுக்கிட்டுக்கீரை என்னும் வேறு பெயர்களிலும் இதை அழைப்பதுண்டு. மணத்தக்காளிக்கு உலக மாதா, விடைக்கந்தம், வாயசிம், காகமாசி என்ற மற்றப் பெயர்களும் இருக்கின்றன.

இச்செடியானது வெண்ணிறமான பூக்களைப் பூக்கும். காய்கள் கரும் பசுமை நிறத்தோடு இருக்கும். முதிர்ந்த காய் மிளகு அளவு இருக்கும். இதனாலேயே இச்செடியை மிளகுத்தக்காளி என்பர். இக்காய்கள் கொத்துக்கொத்தாய் செடியின் தண்டுகளில் அடைந்திருக்கும். காய்கள் கசப்புத் தன்மை உடையன.

கீரை, தண்டு, காய், பழம் யாவும் உணவுக்குச்சிறந்தவை. இவற்றில் மிகுந்த புரதம், மாவுப்பொருட்கள், தாதுப்புக்கள் இருக்கின்றன.

இந்தக் கீரையின் இலை, தண்டு, காய், கனி, வேர் அனைத்தும் சிறந்த மருந்தாகப் பயன்படுகின்றன.

மணத்தக்காளியெனவுடல் வாழ
உயிர் நல்கு
மணத்தக் காளியுண்ண வெகுவாய்

**பொருள் :**

மணத்தக்காளியினது காய், கனி, இலை, வேர் இவற்றை ஊறுகாய், வற்றல், குடிநீர் முதலியவைகளாக உட்கொள்ள, நீண்ட வாழ்நாளுடனும் நோயற்ற உடலுடனும் இருக்கச் செய்யும்.

**தீரும் வியாதி:**

காய்ச்சல், உடல்வலி, களைப்பு, வலிப்பு நோய், தலைவலி, கட்டி, கல்லீரல், மலச்சிக்கல், மர்மநோய், காமாலை, வீக்கம், வைசூரி நோய், தேமல், கோழை, இருமல், எலிக்கடி, பாம்புக்கடி, தேள்கடி, வாய்ப்புண், நாக்கில்புண், குடல்புண், கரப்பான்நோய், பித்தநீர், க்ஷயம் மற்றும் எல்லாப்பிணிகளும்போகும்.

கீரை: (இலை) உபயோக விளக்கம்:

**கரப்பான் வகையைச் சேர்ந்த பிணிகள் நீங்க:**

இக்கீரையைப் பருப்புடன் சேர்த்துக் கூட்டுச் செய்யலாம். பொரியல் செய்தும் கடைந்தும் சாப்பிடலாம். இதைச் சாம்பாரிலும் சேர்ப்பதுண்டு. ஆக இதை வாரத்திற்கு 3 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வரும் பட்சத்தில், உடலில் ஆரம்பமாகும் கரப்பான் வகையைச் சேர்ந்த பிணிகள் கொஞ்சம் கொஞ்சமாய் நீங்கும்.

**காமாலை விலக :**

தேவையான மணத்தக்காளிக் கீரையைக்கொண்டு வந்து அதைக் கசக்கிப் பிழிந்து சாறெடுக்கவேண்டும். இச்சாற்றில் ஒரு தேக்கரண்டியும், வல்லாரைக் கீரையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து அதைத் தட்டி அதில் ஒரு தேக்கரண்டியளவு சாறும் எடுத்து, இரண்டையும் ஒன்றாகக் கலந்து அத்துடன் கொஞ்சம் தேன் சேர்த்து அருந்திட வேண்டும். இந்த விதமாக ஒரு நாளைக்கு மூன்று வேளை விதம் 2 நாள் சாப்பிட வேண்டும். இந்த விதமாக நோய் குணமாகும் வரை அருந்த வேண்டும்.

வீக்கம், நீர்ப்பாண்டு, பெருவயிறு, வாய்ரணம், உட்சூடு இவைக்கு.... உடலில் வீக்கம் இருக்கும் பட்சத்தில் இந்த கீரையைச் சாப்பிடுவதன் மூலம் வீக்கம் அறவே நீங்கும். இந்த இலையினுடைய சாற்றை 1.5 அவுன்ஸ் தினம் மூன்று வேளை கொடுக்க, நீரைப்பெருக்கி, நீர்ப்பாண்டு, பெருவயிறு, வாய்ப்புண், உட்சூடு இவற்றை அகற்றும்.

**வாய் நாற்றத்தை அகற்ற :**

மணத்தக்காளிக் கீரையைக் கொண்டுவந்து அதைச் சுத்தம் பார்த்து ஒரு பிடியளவு எடுத்து ஒரு சுத்தமான சட்டியில் போட்டுக் கொண்டு, வெந்தயம் 35 கிராம், வெங்காயம் 3 பலம் (105 கிராம்), ஏலரிசி 2 கிராம் எடை ஆகிய இவற்றைச் சிவக்க வறுத்து, இரண்டு ஆழாக்குத் தண்ணீர் (400 மி.லி.) ஊற்றி சுண்டக்காய்ச்சி கஷாயத்தில் அரை அவுன்ஸ் அளவு, காலை, பகல், மாலை ஆக 3 வேளைக்கும் 3 நாள் கொடுத்து வந்தால் வாய் நாற்றம் மாறிவிடும்.

**தூக்கம் இல்லாதவர்களுக்கு**

இக்கீரை உடம்பின் களைப்பை நீக்கி நல்ல தூக்கத்தைக் கொடுக்க வல்லது. எனவே இஃதொரு சிறந்த தூக்க மருந்தாகக் கருதப்படுகிறது.

**வலிப்பு நோய்க்கும் கட்டிகளுக்கும்**

விட்டுவிட்டு வரும் வலிப்பு நோய்க்கும் இது மருந்தாகப் பயன்படுகிறது. மற்றும் சீழ்பிடித்த கட்டிகளுக்குக்கூட இந்த இலையைக் கசக்கி வைத்துக் கட்டச் சீழ் நீங்கி குணம் ஏற்படும்.

**மூலத்தில் இரத்தம் விழுந்தால்...**

மணத்தக்காளிக் கீரையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து அதனுடன் பாசிப் பருப்பைச் சேர்த்துக் கூட்டு வைத்து ஒருநாள் விட்டு ஒரு நாள் சாப்பிட்டு வரும் பட்சத்தில் மூலத்தில் இரத்தம் விழுவது நிற்கும் (நீங்கும்).

**குடல்ரணம் வாய் வேக்காடு :**

இக்கீரையைப் பருப்புடன் சேர்த்துக் கடைந்து சாப்பிட்டால், குடல் ரணம் வாய் வேக்காடு ஆகியவை நீங்கும்.

**நாக்குப்புண், வாய்ப்புண் ஆற :**

மணத்தக்காளி இலையைக் கொண்டுவந்து அதைச் சுத்தம் பார்த்து, கொஞ்சம் எடுத்து வாயில் போட்டு நன்கு மென்று பிசைந்து நாக்கு உதடுகளில் சிறிது நேரம் ஊறும்படி வைத்து, பிறகு உமிழ்ந்து விடவேண்டும். இவ்விதமாக ஒரு நாளைக்கு 3 வேளை செய்து வந்தால் வாய்ப்புண், நாக்கில் புண் இவை ஆறும்.

**குடலில் ரணம் ஏற்பட்டிருந்தால்:**

ஆகாரம் சாப்பிட்டவுடன் அல்லது ஜீரணிக்கும் நேரத்தில் வயிற்றில் வலி இருக்கும். வயிற்றில் ரணம் உண்டானால்தான் வாய், நாக்கு, உதடுகளில் ரணம் உண்டாகும். இதற்கு மணத்தக்காளி இலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து அவித்து, அவித்த தண்ணீரைக் குடித்துவிட வேண்டும். அவித்த கீரையை வெங்காயம் மிளகாய்

**ஏ. ஆர். என். துரைராஜ்**

தேங்காய் சேர்த்துத் தாளித்துச் சாதத்துடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் குடல் புண் ஆறும்.

**சமையலில் பல பக்குவம் செய்தல் பற்றி:**

மணத்தக்காளிக் கீரையையெடுத்து முதலில் தண்ணீரில் அலசி சுத்தம் பார்த்து, பிறகு சமையலில் பருப்புடன் சமையல் செய்து உணவில் கலந்து உண்ணலாம். பொரியலாகச் செய்தும் உண்ணலாம். பற்கள் இல்லாதவர்கள், கடைந்த கீரையைச் சாப்பிடலாம். மற்றவர்கள் பொரியல் செய்து சாப்பிடச் சாலச் சிறந்தது.

கீரையைப் பொரியலாகச் செய்யும்பொழுது கொஞ்சம் தேங்காய் திருகி அத்துருவலைச் சேர்த்துக் கொண்டால் தொடுகறிக்குச் சுவை மிக அதிகரிக்கும்.

இக்கீரையுடன் பயிற்றம் பருப்பும், வெங்காயம் மற்றவைகளைச் சேர்த்துக் கடைந்தும் உண்ணலாம். கூட்டுச் செய்தும் உண்ணலாம்.

இதன் வற்றலை வறுத்துப்பொடி செய்து சாதத்தில் போட்டுப் பிசைந்து நெய் சேர்த்துச் சாப்பிடலாம்.

**மணத்தக்காளிக் கீரையிலிருந்து எடுக்கப்படும் சாற்றின் உபயோக விளக்கம்:**

இக்கீரையிலிருந்து எடுக்கப்படும் சாறானது ஒரு சிறந்த மருந்தாகும்.

கல்லீரலில் ஏற்படும் வீக்கத்தைத் தணிப்பதற்கு இந்த இலையின் சாற்றை ஆறிலிருந்து எட்டு அவுன்ஸ் உள்ளே கொடுக்கலாம். தோல் சம்பந்தமான நோய்களுக்கு இந்த இலையினுடைய சாற்றை உடல் மீது தடவலாம்.

உடல் தோலின் மீது ஏற்படும் தேமல் போன்ற நிற மாற்றத்திற்கு இக்கீரையைக் கசக்கித் தேய்ப்பதனால், நிற மாற்றம் நீங்கி, உடம்பின் உண்மை நிறத்தைப் போல் பெறும். வைசூரி நோய் கண்டவர்களுக்கு அந்த நோயின் வேகத்தைத் தணிப்பதற்கு இந்தச் சாறு பயன்படுகிறது.

மஞ்சள் காமாலைக்கும் பயன்படுகிறது. உடம்பில் ஏற்படும் வீக்கங்கள். கொப்புளங்கள் முதலியவற்றின் மீது இச்சாற்றைப் பூசுவதனால் குணமாகிறது. குழந்தைகளுக்கு ஏற்படும் குடல் இறக்கம், குடல் ஏற்றத்திற்கு இந்த இலைச்சாறு, மருந்தாகப் பயன்படுகிறது.

ஈரலில் ஏற்படும் 'சிர்ரோசிஸ்' ( Cirrhosis ) என்னும் நோய்க்குப் புதிதாகப் பறித்த இலையிலிருந்து எடுத்த சாற்றினைக் கொடுக்க அந்த நோய் குணமாகும் என மருத்துவச் சாத்திரம் கூறுகின்றது.


## 'தமிழரசு'
### தமிழ் - மாதம் இருமுறை
### சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா ரூ. 24.00
6 மாதச் சந்தா ரூ. 12.00

**'தமிழரசு' - ஆங்கிலம்**

ஆண்டுச் சந்தா ரூ. 12.00
6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

—சந்தா தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிராஃப்ட் மூலமோ செலுத்தலாம்.

அனுப்பவேண்டிய முகவரி :

உதவி இயக்குநர்,
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.


**காய்:**

**உடல்வலி தீர, களைப்பு அகற்ற, நல்ல தூக்கம் பெற:**

மிளகு அளவுள்ள இதனுடைய கசப்புக் காயை வற்றல் போடுவார்கள். இதனால் தயாரிக்கப்படும் வற்றல் குழம்பு மிகவும் சுவையுடையது. இரவு நேரங்களில் இந்த வற்றல் குழம்புடன் உணவு உண்பதனால் உடல்வலி போன்றவை நீங்கும். களைப்பை அகற்றி நல்ல உறக்கத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. இதனால் காலை எழும்போது உடலில் தெம்பும் தெளிவும் சுறுசுறுப்பும் ஏற்படுகின்றன. இப்பழமும் வற்றல் குழம்பு செய்யப் பயன்படுகிறது.

காயை உலர்த்தி வற்றல் செய்து எண்ணெயில் பொரித்துச் சாப்பிடலாம். வற்றலைப் பலவிதங்களில் சமையலில் பாகத்தோடு செய்து உண்ணலாம். இவ்வற்றல் வாந்தியைப் போக்கும் தன்மையுடையது. வாய் இளைப்பை நீக்கக்கூடியது. பசியில்லாமையை நீக்கும். முக்கியமாக நோயாளிகளுக்கு இது ஏற்ற ஓர் உணவாகும்.

**பழம்:**

கேக் முதலியவைகள் செய்யும் பொழுது அவற்றின் மேல் பகுதியில் திராட்சை போன்ற பழ வகைகள் வைக்கப்படுவதை நாம் காண்கிறோம். அப்பழ வகைகட்குப் பதிலாக அந்த இடத்தில் மணத்தக்காளிப் பழத்தைப் பயன்படுத்துகிறார்கள். இதனால் கேக்கிற்குச் சுவை கூடுகிறது.

மற்றும் இந்தப் பழமானது ஜாம் போன்ற சுவையான பண்டங்கள் செய்யப் பயன்படுகிறது. சர்பத் செய்யவும் பயன்படுத்துகிறார்கள்.

நுரையீரலில் ஏற்படும் காச நோயைக் கட்டுப்படுத்த இந்தப் பழத்தைத் தேனுடன் சேர்த்து உண்ணக் கொடுப்பதுண்டு.

இப்பழம், பசியைப் பெருக்கி, உண்ணும் உணவிற்கு உருசியைக் கொடுக்கிறது. மூலநோய், வயிற்று எரிச்சல், காதுவலி, வயிற்று உளைச்சல், இருமல், சுவாய்ச்சல், போன்ற பிணிகளைத் தடுக்கும் மருந்தாக இப்பழம் பயன்படுகிறது. மேலும், குரலை இனிமைப்படுத்துவதற்குப் பாடகர்கள் இப்பழத்தை உண்பதுண்டு. கருத்தரித்தலுக்கும், இவ்வாறு தரிக்கப்பட்ட கருவானது கருப்பையில் நின்று வலிமை பெறுவதற்கும் இப்பழம் செயல்படுகிறது. அத்துடன் பிரசவ காலத்தில், பிரசவத்தை எளிமைப்படுத்தவும் இப்பழம் உதவுகிறது.

இச்செடியின் வேரானது மூலிகை மருந்து வகைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் வேர், மலச்சிக்கலை நீக்கும். மருந்துகளிலும் இது சேர்க்கப்படுகிறது.

மற்றும் இவ்வேர், மலத்தை இளக்கி ஆசன வாயைச் சுத்தப்படுத்துகிறது.

இந்தக் கீரையில் 82.1 விழுக்காடு நீரும், 5.9 விழுக்காடு கொழுப்பும், 2.1 விழுக்காடு தாது உப்புக்களும் உள்ளன. மற்றும் 8.9 விழுக்காடு மாவுச் சத்துக்களும் இக்கீரையில் இருக்கின்றன.

இக்கீரையானது 68 பங்குவெப்பச் சக்தியைக் கொடுக்கிறது. இதில் நிறைந்துள்ள தாது உப்புக்களில் சுண்ணாம்புச் சத்து, மணிச்சத்து, இரும்புச்சத்து முதலியன இருக்கின்றன. அத்துடன் உயிர்ச் சத்துக்களில் ஒன்றான வைட்டமின் 'சி' இந்தக் கீரையில் நிறைந்திருக்கிறது.

100 கிராம் கீரையில் 410 மில்லிகிராம் சுண்ணாம்புச் சத்தும், 70 மி. கிராம் மணிச்சத்தும், 20.5 மி. கிராம் இரும்புச்சத்தும் இருக்கின்றன. 11 மி.கிராம் வைட்டமின் 'சி' இக்கீரையிலிருந்து கிடைக்கிறது.

இவ்வுணவுகளை உண்பதனால் மனதிற்கு மகிழ்ச்சி உண்டாகிறது. உடல் நலம் சீர் பெறுகிறது. குறிப்பாக இந்த நவநாகரிக காலத்தில் சிலர் இந்த மணத்தக்காளிக் கீரையை அநாகரிகமாக நினைக்கிறார்கள். இவற்றில் மிகுந்த புரதம், மாவுப் பொருட்கள், தாது உப்புக்கள் இருக்கின்றன. எனவே, நல்ல மருந்தாகவும், சிறந்த உணவாகவும் பயன்படும் இந்தக் கீரை எளியோரின் மருத்துவன் எனப் போற்றப்படலாம்.

# வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ்

# தருமபுரி மாவட்டத்தில் முன்னேற்றம்

பொதுவாக தருமபுரி என்றவுடன் 'அது ஒரு பின்தங்கிய மாவட்டம்' என்ற கருத்துதான் நினைவுக்கு வரும். இந்த நிலையைப் போக்க இதன் வளர்ச்சிக்குப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன. தருமபுரி மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்கள் முன்னேற்ற மடையவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், கிராமத்தில் உள்ள நிலமற்ற வேளாண் கூலிகளுக்கு வேலை வாய்ப்பளித்து வாழ்வளிக்கவும், அரசு பல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகிறது. இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கென்றே 'தருமபுரி மாவட்ட வளர்ச்சிக்கழகம்' என்றவொரு கழகம் அரசால் ஏற்படுத்தப்பட்டு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தீவிர விவசாயப் பெருக்குத் திட்டம், தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மேற்கண்ட வறுமை ஒழிப்புத் திட்டங்களின்கீழ் இந்த ஆண்டு (1988) ஜனவரித் திங்கள் முடிய அடைந்த சாதனை குறிப்பிடத் தக்கது: ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1987-88-ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப் பட்ட இலக்கான 11,516-இல் பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை 7,582 ஆகும். இவர்களுக்கு ரூபாய் 85.15 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இவர்களில் 2,330 பேர் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாசிவ் திட்டத்தின்கீழ் (தீவிர விவசாயப்பெருக்குத்திட்டம்) நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூபாய் 39.681 இலட்சத்தில், ரூபாய் 29 236 இலட்சத்தொகை மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பயனடைந்த நிலத்தில் மொத்தப் பரப்பளவு 1,157 எக்டேர் ஆகும். பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை 1,480.

தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூபாய் 205.740 இலட்சம் ஆகும். இதில் 1988 ஜனவரி முடிய ரூபாய் 148.121 இலட்ச மதிப்புக்கு வேளாண்மைக் கூலிகளுக்கு அரிசி மற்றும் கோதுமைப் பொருட்களுடன் செலவினம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 1,040 இலவச வீடுகள் கட்ட நிர்ணயம் செய்யப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது. நிர்ணயிக்கப்பட்ட மனித சக்தி நாட்கள் இலக்கான ரூபாய் 10.83 இலட்சத்தில், ரூ. 5.34 இலட்சம் சாதனை அடையப்பட்டுள்ளது. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1,080 எக்டேர் நிலப் பரப்பில் 14.776 இலட்சம் கன்றுகள் நடப்பட்டன. 3 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் 20 கசிவு நீர்க்குட்டைகளும், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 102.346 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளதோடு, 61 வேலைகள் கிராமப் புறங்களில் முடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்திட்டத்தின் மனித சக்தி நாட்கள் இலக்காக ரூ. 13.664 இலட்சங்கள் நிர்ணயிக்கப்பட்டதில், ரூ. 6,983 இலட்சங்கள் சாதனை எய்தப்பட்டுள்ளது.



# சென்னை மாநகராட்சியின்
# இருபது அம்சத் திட்டச் சாதனை



## சுகாதார வசதி (அம்சம் 8)

சென்னை மாநகராட்சியின் முக்கிய குறிக்கோள், துப்புரவை மேம்படுத்துவதாகும். 9000 துப்புரவுத் தொழிலாளர்கள் தினசரி காலை, பிற்பகல், இரவு வேளைகளில் துப்புரவுப் பணி செய்து, நகரத்தில் 2772 கி.மீ. நீளமுள்ள சாலைகளைத் தூய்மைப்படுத்துகின்றனர். துப்புரவுக்கென 208 வண்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன. மணியடித் துப்புரவு, அஃதாவது, குப்பையை வீதியில் உள்ள குப்பைத் தொட்டியில் கொட்டாமல் நேராக மணியடித்துக்கொண்டு வரும் வண்டியிலேயே சேர்க்கும் முறை, 100 இடங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சாலையோரங்களையும், நடைபாதைகளையும், கழிப்பிடங்களாக மாற்றுவதைத் தவிர்க்க, மாநகராட்சிக் கழிப்பிடங்கள் 98, இலவசக் கழிப்பிடங்கள் 839, கட்டணக் கழிப்பிடங்கள் 92 ஆகியவற்றை சென்னை மாநகராட்சி நடத்தி வருகிறது. துப்புரவுப் பணிகளின் நெறிமுறைகளை விளக்கும் துப்புரவுக் கையேடு ஒன்றையும் மாநகராட்சி வெளியிட்டுள்ளது.

மாநகராட்சி மருந்தகங்கள் 72, தொழுநோய்ச் சிகிச்சை நிலையங்கள 27, காசநோய்ச் சிகிச்சை நிலையங்கள் 2 ஆகியவற்றின் மூலம் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு மருத்துவ வசதி சிறந்த முறையில் அளிக்கப்படுகிறது. இம்மருத்துவ நிலையங்களில் 1986-87-இல் கிட்டத்தட்ட 30 லட்சம் நோயாளிகள் சிகிச்சை பெற்றனர்.

கொசு மருந்தடித்தல், புகைபோர்டுதல், இரத்தத் தடவல் பரிசோதனைகளை அதிகரித்தல் போன்ற மாநகராட்சியின் மலேரியாத் தடுப்பு நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்கவை. 1986-87-ல் 6 இலட்சத்திற்கு மேற்பட்ட இரத்தத் தடவல் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. மலேரியா நோய் அதிகம் காணப்படும் இடங்களில் மும்முறை டி.டி.டி. மருந்து தெளிக்கப்பட்டது. இவற்றால் மலேரியா நோயாளிகளின் எண்ணிக்கை கணிசமான அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

1985-86ல் மேற்கொள்ளப்பட்ட 4 லட்சத்து 89 ஆயிரத்து 441 இரத்தத்தடவல் பரிசோதனைகளின் மூலம் 49 ஆயிரத்து 574 பேர் மலேரியாவால் தாக்குண்டதாகக் கணக்கெடுக்கப்பட்டது. 1986-87ல் மேற்கொள்ளப்பட்ட 6 லட்சத்து 6 ஆயிரத்து 743 இரத்தத் தடவல் பரிசோதனைகளின் மூலம் 37 ஆயிரத்து 938 பேர் மலேரியாவால் தாக்குண்டதாக விவரம் அறிந்து கொள்ளப்பட்டது. முந்தைய ஆண்டைவிட, தாக்குண்டவர் தொகை 24 சதவீதம் குறைந்துள்ளது.

சென்னை மாநகரில் 44 மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலமையங்கள் மூலம் அனைத்துப் பச்சிளங் குழந்தைகளுக்கும், சிறுவர் சிறுமியர்க்கும் நோய்த் தடுப்புச் சிகிச்சையளிக்கப்படுகிறது. 1986-87ஆம் ஆண்டில் இளம்பிள்ளை வாதத் தடுப்பின் மூலம் முதன்முறையாக 27,867 பேர், இரண்டாம் முறையாக 24,877 பேர் பயன் பெற்றனர்.

தொண்டை அடைப்பான், கக்குவான், ரண ஜன்னித் தடுப்பின் மூலம் முதன்முறையாக 27,581 பேர், இரண்டாம் முறையாக 24,630 பேர், பயன்பெற்றனர்.

தட்டம்மைத் தடுப்பின் மூலம் முதன் முறையாக 19,413 பேர் பயன்பெற்றனர்.

காசநோய்த்தடுப்பின் மூலம் முதன்முறையாக 12,225 பேர் பயன்பெற்றனர்.

ரணஜன்னித் தடுப்பின் மூலம் (பிள்ளைத்தாய்ச்சியர்க்கு) முதன் முறையாக 26,559 பேர், இரண்டாம் முறையாக 28,159 பேர் பயன் அடைந்தனர்.



(டி.டி.) தொண்டைஅடைப்பான் தடுப்பின் மூலம் முதன்முறையாக 6,095 பேர், இரண்டாம் முறையாக 5,155 பேர் பயன் அடைந்தனர்.

ரண ஜன்னித் தடுப்பின் மூலம் (10 வயதினர்க்கு) முதன்முறையாக 3,973 பேர், இரண்டாம் முறையாக 904 பேர் பயன் அடைந்தனர்.

ரண ஜன்னித் தடுப்பின் மூலம் (16 வயதினர்க்கு) முதன்முறையாக 1,473 பேர், இரண்டாம்முறையாக 314 பேர் பயன்பெற்றுள்ளனர்.

காலராத் தடுப்பூசியின் மூலம் முதன் முறையாக 5,236 பேர் பயன்பெற்றனர்.

## இரு குழந்தை நெறி (அம்சம் 9)

சென்னை மாநகராட்சியில் 48 நகர்ப்புறக் குடும்ப நல நிலையங்கள் குடும்பநலப் பணியைச் சிறந்த முறையில் ஆற்றிவருகின்றன. குடும்பநல அறிவுரை, திரைப்படக் காட்சிகள், ஒலிபெருக்கி அறிவிப்புகள், கருத்துத் தலைவர்களுக்குரிய பயிற்சி முகாம்கள் இவற்றின் வாயிலாக சிறுகுடும்ப நெறி பரப்பப்படுகிறது.

### 1986-87-க்கான இலக்குகளும் சாதனைகளும்

54,874 அறுவைச் சிகிச்சை இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இலக்கு மீறிய சாதனையாக, 59,752 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

50 ஆயிரம் ஐ.யூ.டி. (லூப்,காப்பர்டி) இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இலக்கை மீறி 68,610 தாய்மார்களுக்கு லூப், காப்பர்டி பொருத்தப்பட்டது. வழக்கமாக கருத்தடை முறைகளைக் கையாள்வோர் தொகை 12,567என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இலக்கை மீறிய சாதனையாக 14,667 பேர் வழக்கமான கருத்தடை முறைகளைக் கையாண்டனர்.

தாய்மைப்பேறு மற்றும் குழந்தைகள் நலத்தைப்பேண மாநகராட்சி 44 மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்களை நடத்துகிறது. நகரில் பிறக்கும் குழந்தைகளில் நான்கில் ஒரு பங்கினர் மாநகராட்சி மகப்பேறு மனைகளில் பிறக்கின்றனர். 1986-87இல் 21,267 குழந்தைகள் இங்கே பிறந்தனர்.





## கல்வி விரிவாக்கம் (அம்சம் 10)

1986-87இல் மாநகராட்சி 362 துவக்க நடுநிலைப்பள்ளிகளையும், 25 உயர்நிலைப்பள்ளிகளையும், 10 மேல்நிலைப்பள்ளிகளையும் நடத்தியது. இவற்றில் 1,90,811 மாணவ மாணவியர் கல்வி கற்றனர். 9 வகுப்பறைகள் கொண்ட இரு பள்ளிக் கட்டிடங்கள் ரூ. 9.91 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டன. மாணவ மாணவியர்களுக்கு இலவசப் பல் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இதனால் 30,000 பேர் பயன் பெற்றனர். முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் மூலம் 1,66,172 மாணவ, மாணவியர் பயனுற்றனர். இண்டாக் நிறுவனத்தினர் நடத்திய சுற்றுப்புறச் சூழ்நிலையறியும் பயிற்சி முகாம்களில் மாநகராட்சி மாணவ, மாணவியர் சேர்ந்து பயன்பெற்றனர். **12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் பூகோளம் மற்றும் தத்துவப் பாடங்களில் மாநிலத்திலேயே முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்கள் மாநகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்தவர்களேயாவர்.**

> **அறிவு**
>
> **"கற்க வேண்டியவற்றையும், கற்றவற்றையும் கருத்தில் வைப்பவனே கல்வியில் விருப்பமுடையவன்".**
>
> **—கன்பூசியஸ்**



## சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு (அம்சம் 17)

பொது மக்களிடையே, சுற்றுப்புறச் சூழல் சீர்கேடு அடைவதால் ஏற்படும் அபாயங்களைப் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதற்கு அவர்களுடைய ஆதரவைத் திரட்டவும், மாநகராட்சி 1986-87-இல் விரிவானதொரு மரம் நடும் இயக்கத்தை நடத்தியது. 10,000க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நகரின் பல்வேறிடங்களில் கல்விக்கூடங்கள் அரசு அலுவலகங்கள் ஆகியவற்றில் நடப்பட்டன. மக்கள் வசிக்கும் குடியிருப்புகளில் மரம் நடுதல் ஊக்குவிக்கப்பட்டது. தங்கள் வீடுகளின் முன் நடப்படும் மரங்களைப் பேணிக் காக்க மக்கள் முன்வந்தனர்.

மாணவர்களை இப்பணியில் ஈடுபடுத்தப் பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் பல்கலைக் கழக வளாகங்களில் மரம் நடும் விழா நடத்தப்பட்டு ஏராளமான மாணவ, மாணவியர் மரம் நட்டனர்.

பொதுத்துறை நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், சேவை நிறுவனங்கள் முதலியவையும் மரம் நடும்பணியில் ஈடுபடுத்தப்பட்டன. சென்னை மாநகராட்சி, நட்ட மரங்களைப் பாதுகாக்க, பாதுகாப்புக் கூண்டுகளையும் தானே வடிவமைத்து உருவாக்கியது.

# ஊரக இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்புப் பயிற்சி

எம். லஜபதி
கல்லூரி முதல்வர்
ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையம்
தே. கல்லுப்பட்டி

இருபது அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக 1979இல் துவங்கப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஊரகப் பகுதிகளில் வறுமைப்பட்ட மக்களை வறுமைக் கோட்டிற்கு மேலே கொண்டு செல்ல சுய வேலை வாய்ப்புத் திட்டங்களுடன் மானியம் மற்றும் கடன் வசதிகளையும் அளித்து வருகிறது. இதனை மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் நடத்தி வருகிறது.

கிராமங்களில் விவசாய வேலை தவிர வேறு தொழில்கள் தெரியாத நிலை இருப்பதோடு வேறு தொழில்கள் செய்வதற்கான வாய்ப்பும் இல்லாத சூழ் நிலை இருந்தது. அத்தோடு வான் பொய்த்து விட்டால் கொடிய வறுமைதான். அன்றாடம் வயிற்றுப் பிழைப்பு நடத்துபவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வறுமைப் பிணியில் அகப்பட்டுத் துன்புறுகிறார்கள்.

பெருகிவரும் மக்கள் பெருக்கத்தால் ஈடு செய்ய முடியாத வேலை இல்லாத் திண்டாட்டம் தனியாரது பெரிய கம்பெனிகளுடன் சிறு தொழில் போட்டியிட முடியாமை காரணமாக, ஊரகத் தொழிலாளர் வேலை யின்மையும் தொடர் கதையாக உள்ளது.

ஊர்களில் இந்நிலை அகன்றிடவே வறுமை ஒழிப்பு வழிவகைகளில் முதன்மையாகக் கருதி தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டப் பயனாளிகளில் 50 சதவீதம் பேர் தொழில் சேவை மற்றும் வாணிபப் பிரிவின் கீழ் இருக்கவேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது.

இதனை ஊக்குவிக்கும் பொருட்டு தே. கல்லுப் பட்டி ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையமானது, ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி அளித்து வருகிறது.

ஊர்களில் நிறைந்துள்ள மனித சக்தியையும், தொழிலுக்கான ஆதாரப் பொருட்களையும் இணைத்துத் தொழில் செய்ய, தொழில் நுணுக்கம், தொழில் திறன் மற்றும் சீரான நிருவாகம் காணக் கற்றுத் தருகிறது.

### சுய வேலைவாய்ப்புப் பயிற்சி விவரம்

தொழில் துவங்க ஆர்வமுள்ளவராக்குதல்,
தொழில்கள் தேர்வு,
கச்சாப் பொருட்கள் கிடைக்கும் அளவு,
தொழில் திட்டம் தயாரித்தல்,
கடன் மனுக்கள் தயாரித்தல்,
நிருவாக முறை முடிவு செய்தல்,
சந்தை உருவாக்குதல்,
சமூக நிலைமையைச் சீர்திருத்தல்,
வங்கிகளையும் பயிற்சியாளர்களையும் ஒருவருக் கொருவர் நம்பிக்கை ஏற்படுத்துதல்.
மாவட்டத் தொழில் மைய உறவு,
வட்டார வளர்ச்சி அதிகாரிகளின் தொடர்ந்த உதவி,
பல்வேறு துறைகளின் உறவும், உதவியும்,
கூட்டுறவு நிர்வாகம்,
தொழில் நிலையங்களை நேரில் காண்பித்தல்,
பயிற்சி பெற்ற சுய வாய்ப்புத் தொழில் நிபுணர் களைப் பேசவைத்தல்,
பயிற்சிக் காலத்திலும் வருமானம் பெற வழிவகை செய்தல்,

### பயனடைவோர்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களாகக் கணக்கிடப் பட்டவர்கள் வருமாறு:

சிறு உழவர்கள்,
குறு நில உழவர்கள்,
நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள்,
ஊரகக் கைவினைஞர்கள்,

கொத்தடிமை நிலையிலிருந்து விடுவிக்கப்பட்ட வர்கள்,
50 சதவீதம் பேர் ஒதுக்கப்பட்டவர்கள் மலை வாழ் மக்கள்,

### தகுதி

16 வயது முதல் 35 வயது வரை,
தாய்மொழியில் எழுதப்படிக்கத் தெரிதல்,
தொழில் ஊக்கம் மற்றும் விருப்பம் உள்ளவர்,
ஒரு குடும்பத்திற்கு ஒருவர்.

### தேர்வு செய்யும் முறை

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், ஊர்நல அலுவலர்கள் உதவியுடன் ஊரக இளைஞர்கள் விவர அடிப் படை சர்வே தயாரித்து வைக்க வேண்டும்.

பின்பு தேவையானவர்களை வட்டார அளவு ஆலோசனைக் குழு மற்றும் ஊரக ஆலோசனைக்குழு தேர்வு செய்கிறது.



இத்தேர்வுப் பட்டியலை, சம்பந்தப்பட்ட மாவட்டத் திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்) அங்கீகரித்துத் தேவையான மானியத்தை அளிக்கிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலுள்ள குழு இதனைப் பொறுப்பாக நடத்தி வருகிறது.

**ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதந்தோறும் செய்கிற செலவு**

ரூ. 250 வீதம் உதவித் தொகை (இலவச தங்குமிடமில்லாமல்)
ரூ. 200 - வீதம் உதவித்தொகை (இலவச தங்குமிடத்துடன்)
ரூ. 75 - வீதம் பயிற்றுவிப்பவருக்கு
ரூ. 40- வீதம் கச்சாப் பொருள் மற்றும்
ரூ. 500 - வீதம் தொழிற் கருவிகள்

பயிற்சி நிலைய அடிப்படை வசதிகளுக்காக மானியம் வழங்கப்படுகிறது.

பயிற்சி பெறாதவர்களுக்கும் ''தொழில், சேவை, வாணிகத்' திட்டத்தில் மானியமும் கடனும் கொடுக்கப்படுகிறது. இருப்பினும் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

மாவட்டத் தொழில் மையங்கள், மானியம் மற்றும் கடன் வழங்குவதில் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**இதர வசதிகள்**

சிறு தொழில்களுக்கு உதவ ''மாவட்ட விநியோக மற்றும் விற்பனைச் சங்கம்'' அமைக்கப்பட்டு வருகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் அமல் மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைத்திருந்தாலும் திட்டமிடுதலும் நிதி வசதி செய்து கொடுப்பதும் மாவட்டத் தொழில் மையத்தின் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

**தற்போது நடைபெறும் பயிற்சியும், பயிற்சியாளர்களும்**

| | மதுரை | இராமநாதபுரம் |
|---|---|---|
| மின் பற்றவைப்பு | 9 | 6 |
| பொருத்துதல் மற்றும் கடைசல் | 5 | 15 |
| மோட்டார் மின்சுருள் கம்பி சுற்றுதல் | 5 | 14 |
| வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரித்தல் | 8 | 20 |
| இரு சக்கர விசை ஊர்தி பராமரிப்பு | 9 | 10 |
| வானொலி மற்றும் தொலைக்காட்சி பராமரிப்பு (பெண்கள்) | 12 | — |

மற்றும் வீட்டு மின் விசை இயந்திரங்கள் பராமரிப்பு.

மின் கம்பி அமைத்தல் போன்ற சிறு அளவிலான எத் தொழிலிலும், பயிற்சி கொடுக்கத் தயாராக உள்ளது. அதிகப்படியாக 220 பேருக்குப் பயிற்சி கொடுக்க வசதியுள்ளது.



இம்மாதிரி தமிழ்நாட்டில் எல்லா ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களிலும், தொழிற் பயிற்சி நிலையங்களிலும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி நடைபெறுகிறது.

**தொழில் திட்டம்**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்-தொழில் சேவை, வாணிகம்:

**தனிமையில்—**

| | |
|---|---|
| திட்டம் | ரூ. 9,000 |
| மானியம் | ரூ. 3,000 |
| வங்கிக் கடன் | ரூ. 6,000 |

**தனிமையில்—**

மாவட்டத் தொழில் மையத் திட்டங்கள்:

| | |
|---|---|
| திட்டம் | ரூ. 35,000 |
| தமிழ்நாடு அரசு மானியம் | ரூ. 8,750 |
| வங்கிக் கடன் | ரூ. 26,250 |

**கூட்டு முயற்சி—**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட உதவியுடன் கூட்டுறவு மூலம் தொழில் செய்ய முனைவோருக்கு அடிப்படை வசதிகளுக்காக மானியத்துடன் கடன் பெற்றவர்களுக்கு நபருக்கு ரூ. 3,000 வீதம் கணக்கிட்டு அரசு மானியமாகக்கட்டடம், இயந்திரம் மற்றும் நிருவாக வசதி செய்து கொடுக்கப்படுகிறது.

இது தவிர கூட்டுறவுத்துறைக் கடன் மற்றும் துறைகளின் மூலம் தொழில் நுணுக்க உதவிகள் கச்சாப் பொருள், விற்பனை உதவிகள் கிடைக்கும்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மூலமாகவும் தேவையான கட்டட வசதிகள் பெறவும் வாய்ப்புள்ளது.

வேலையில்லாத கிராமப்புற இளைஞர்கள் மற்றும் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பை அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்காமல் சுய தொழில் செய்து முன்னேற இத்திட்டம் உதவும்.

# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே
# ஆரோக்கியம் இருக்குமிடம்!




**லைப்பாய்**

**அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது**

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

LINTAS L 98 203 TM

# அஞ்சல் தலையின் கதை

தற்போது புழக்கத்தில் இருக்கும் தபால் தலைகள் 1840-ஆம் ஆண்டு மே மாதம் 6-ந் தேதி ஸர் ரௌலண்ஹில் என்னும் ஆங்கிலேயரால் முதன் முறையாக உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டன. அதற்கு முன்பு அஞ்சல் கட்டணங்கள், கடிதங்கள் செல்ல வேண்டிய தூரத்தைச் சார்ந்தே நிர்ணயிக்கப்பட்டன. அவை முன்னதாகவே வசூலிக்கப்பட்டன. கடிதங்கள் பெறுவோரிடமிருந்தும் வசூலிக்கப்பட்டன. ஆயினும் முறையான வகையில் செயல்படாமையால், மக்களைத் திருப்தி செய்யமுடியவில்லை. மேலும், அரசாங்கத்தின் வருமானமும் மிகவும் குறைந்தே காணப்பட்டது. எனவே, ஸர் ரௌலண்ட் ஹில் இது குறித்து1835-ஆம் ஆண்டு தம் ஆய்வைத் துவங்கினார்.

வெளியூரிலிருக்கும் மகனொருவன் தன் தாய்க்கு வெற்றுக் கடிதங்களை அனுப்பிக் கொண்டிருந்தான். அப்படிக் கடிதங்கள் வந்தாலே தன் மகன் நலமாயிருக்கிறான் என்பதனைத் தெரிந்து கொண்ட அந்தக் கெட்டிக்காரத் தாய், கடிதத்தைப் பெற்றுக்கொள்ளாமலும்,கட்டணம் ஏதும் செலுத்தாமலும் அரசுக்கு இழப்பை ஏற்படுத்தினார். இந்த நிகழ்ச்சியின் பின்னணியில் ஸர் ரௌலண்ட் ஹில் தம் ஆராய்ச்சியின் முடிவாக ''அஞ்சல் அலுவலகச் சீர்திருத்தம்'' என்ற பிரசுரத்தை 1837-ஆம் ஆண்டு அரசுக்குச் சமர்ப்பித்தார். கடிதங்கள் செல்லவேண்டிய தூரம் எவ்வளவாக இருப்பினும், சமமான கட்டணத்தொகை முன்பணமாகவே வசூலிக்கப்பட வேண்டுமெனவும், இக்கட்டணத்தைச் செலுத்த பசை தடவிய அஞ்சல் தலைகளை அச்சிட்டு, அவற்றை அஞ்சல் அலுவலகங்கள் விற்பனை செய்ய வேண்டும் எனவும் யோசனை தெரிவித்தார்.

**டி. ராமஸ்வாமி,**
**தமிழ்நாடு அஞ்சல் தலைகள் சேகரிப்பு அதிகாரி,**
**அஞ்சல்துறைத் தலைவர் அலுவலகம்,**
**சென்னை-2.**

இதன் பேரில் மேலும் செய்யப்பட்ட ஆய்வின் பயன்தான் இன்றைய அஞ்சல் தலையாக வடிவெடுத்துள்ளது. இவ்வாறு முதன் முதல் அச்சிடப்பட்டு வெளிவந்த அஞ்சல் தலைகள் 'Penny Block' என்று அழைக்கப்படுகின்றன.

ஆசியாவின் முதல் தபால் தலை அன்றைய இந்தியாவில் சிந்து மாகாணத்தில்தான் அதன் கமிஷனரால் 1852-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. Scinde Dawk என்றழைக்கப்படும் இந்த அஞ்சல் தலைகள் அந்த மாகாணத்திற்குள் மட்டுமே செல்லுபடியாயின. ஆகவே, அனைத்து இந்தியாவிலும் பயன்படக்கூடிய தபால் தலைகளை கிழக்கிந்தியக் கம்பெனியார் 1854-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிட்டனர். அவை விக்டோரியா அரசியாரின் உருவத்தைத் தாங்கி வெளிவந்தன. இத்தலைகள் லண்டனில் இருந்து தாமஸ் டிலா என்ற கம்பெனியாரால் 1856 முதல்1926வரை அச்சிடப்பட்டன. 1926-இல் மராட்டிய மாநிலத்தில் நாசிக் என்ற இடத்தில் ''இந்தியா செக்யூரிட்டி பிரஸ்'' என்ற அச்சகம் நிறுவப்பட்டது. அன்றுமுதல் இந்திய அஞ்சல் தலைகளை வெளியிடும் பொறுப்பு இந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கபபட்டது. இந்திய அரசின் பலவிதத் தபால் தலைகளையும் இவ்வச்சகமே வெளியிடுகின்றது. நமது நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, நம் அரசாங்கம் கண்கவர் வண்ணத் தபால் தலைகளைக் கருத்துச் செறிந்த தலைப்புகளின்கீழ் வெளியிட்டு வருகின்றது. இக்கவின்மிகு வண்ணத் தலைகள் உள் நாட்டில் மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் பெரிதும் போற்றி வரவேற்கப்படுகின்றன.

ஒவ்வொருவருக்கும் ஒருபொழுது போக்கில் ஈடுபாடு உண்டு. அஞ்சல்



BRAHADEESWARAR TEMPLE - THANJAVUR

# தமிழ்நாடு அஞ்சல்தலைக் கண்காட்சி



**சென்னை** அண்ணாசாலையில் உள்ள தலைமை அஞ்சல் நிலையத்தில் 11-2-88 முதல் 14-2-88 முடிய தமிழ்நாடு அஞ்சல்தலைக் கண்காட்சி நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியை, சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் எஸ். மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் திறந்து வைத்தார்.

அப்போது அவர் பேசுகையில், ''ஒருநாட்டின் கலை, கலாசாரம் ஆகியவற்றை அஞ்சல் தலைகள் பிரதிபலிப்பதால், பள்ளிகளில் மாணவர்களுக்கு அஞ்சல் தலை சேகரிப்புப் பற்றிக் கற்றுக்கொடுக்க வேண்டும்'' என்றார்.

இந்த அழகிய கண்காட்சியில், 45 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அஞ்சல் தலைகள் இடம் பெற்றிருந்தன.

இந்தியாவில் முதன் முதலாக 1852-இல் அன்றைய சிந்து மாகாணத்தில் வெளியிடப்பட்ட அஞ்சல் தலை, அலகாபாத் - நைனிக்கிடையே முதலாவதாகத் தொடங்கப்பட்ட விமான அஞ்சல் முறையைக் குறிக்க 1911-இல் வெளியிடப்பட்ட அஞ்சல் தலை மற்றும் முதல் அஞ்சலட்டை ஆகிய அரிய அஞ்சல் தலைகள் காட்சியில் இடம் பெற்றிருந்தன.

14-2-88 அன்று நடந்த நிறைவு விழாவில், மிகச் சிறந்த அஞ்சல் தலைகளைச் சேகரித்தவர்களுக்கு, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. எம். என். சந்தூர்க்கர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். அப்போது அவர் பேசுகையில், ''அஞ்சல்தலை சேகரிக்கும் பழக்கம் உடையவர்கள் பொது அறிவு பெற வாய்ப்பு உண்டு. ஜாலியன்வாலா பாக் படுகொலை பற்றிய அஞ்சல் தலைகளைப் பார்க்கும்போது, நமது சுதந்திரத்தின் பெருமையை உணர முடிகிறது. இத்தகைய அஞ்சல்தலைகளை அதிக அளவில் வெளியிட வேண்டும்'' என்றார்.

தமிழ்நாடு தலைமை அஞ்சல் நிலைய அலுவலர் திரு எம். எஸ். ரங்கசாமி அனைவரையும் வரவேற்றார். கூடுதல் தலைமை அலுவலர் திரு. வி. பாலகுரு நன்றி நவின்றார்.

தலைகளைச் சேகரிப்பதென்பது மிகச் சுவையான ஒரு பொழுது போக்குமட்டுமல்லாது, சிறந்ததொரு கலையாகவும் பரிணமித்துள்ளது. இப்பொழுதுபோக்குக் கலை எப்போது துவங்கியது எனத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை என்றாலும், 'லண்டன் டைம்ஸ்' நாளேட்டில் வெளியான விளம்பரமொன்றை ஆதாரமாக வைத்து இதன் வரலாறு வடிக்கப் படுகின்றது. லண்டன் நகரில் சிங்காரச் சீமாட்டி ஒருவர், தன் அறைக்குப் பொலிவு கூட்ட எண்ணினார். அறையின் சுவரை அலங்கரிப்பதற்காக உபயோகிக்கப்பட்ட தபால் தலைகளைத் தேடிய அவர், அதற்கான விளம்பரம் ஒன்றினை 1841-ஆம் ஆண்டில் வெளியிட்டார். அதன் விளைவாக அஞ்சல் தலை சேகரிக்கும் பொழுதுபோக்குக் கலை தோன்றியது. பள்ளிச் சிறார்கள் முதல் முதிர்ந்தோர் ஈறாக அனைவரையும் ஈர்க்கும் துறையாக இக்கலை மலர்ந்துள்ளது இன்று. தபால் தலைகளைச் சேகரித்தல் என்பதொன்று, கலையார்வத்துடன் அத்துறையில் ஈடுபடுவதென்பது பிறிதொன்று. இரண்டிற்குமிடையே வேறுபாடுகள் பல உண்டு.

உலகின் பல பாகங்களிலிருந்தும் ஒரே மாதிரியான பல பொருட்களை ஆர்வம் காரணமாகச் சேகரித்தல் என்பது சாதாரண ரகம். தீப்பெட்டிப் படங்கள், பலவிதமான பேனாக்கள், கைக்கடிகாரங்கள் சேகரித்தல் இவ்வகையினைச் சாரும். அறிவியல் அடிப்படையில் ஒரு பொருளின் முழு விவரங்களையும் ஆய்ந்து, ஒரு கலை உணர்வுடன் அறிவார்ந்த நிலையில் சேகரித்தல் பிறிதொரு ரகமாகும். ஆங்கிலத்தில் முன்னவர்களை Stamp Collectors என்றும், பின்னவர்களை Philatalists என்றும் சொல்கிறோம்.

இன்று இப்பொழுதுபோக்கு ஒரு கலையாக, அறிவியலாக உலகின் தலைசிறந்த பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. முதன்மையாக, கல்லூரி மாணவர்களில் பலர், தபால் தலை சேகரிக்கும் கலையைத் தம் தலையாய பொழுது போக்காகக் கொண்டுள்ளனர் என்பது கண்கூடு. அமெரிக்க நாட்டில் தொகுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரம் பறை சாற்றும் உண்மையே இது. இவ்வாய்வினை வேறெந்த நாட்டில் செய்தாலும் முடிவு இதனையே வெளியிடும். ஏனெனில் இக்கலையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு மாணவனுக்கும் பல நாட்டின் பல தலைப்பின்கீழ் வெளியிடப்பட்ட தபால்தலைகள் பற்றி அறிந்துகொள்ளும் பெருவாய்ப்பு கிடைக்கிறது. இவ்வாய்ப்பு அம் மாணவனைப் பலநாடுகளின் வரலாறு, புவியியல், விலங்கினங்கள், புள்ளினங்கள், புகழ்மிக்க பெருந் தலைவர்கள், கலை, கலாச்சாரம், பண்பாடு இவை குறித்து மேலும் தெரிந்துகொள்ள ஒரு தூண்டுகோலாக அமைகிறது. எனவே, அம்மாணவன் பள்ளிப் படிப்பில் மட்டுமின்றி, பொது அறிவிலும் மிகச் சிறந்து விளங்குகிறான். எடுத்துக்காட்டாகப் புதுடில்லி எந்த ஆண்டு நமது நாட்டின் தலைநகராக நிர்மாணிக்கப்பட்டது என்ற கேள்வி எழுவதாக வைத்துக் கொள்வோம். 1931ஆம் ஆண்டு என்ற இக்கேள்வியின் விடையைச் சரித்திரம் படிக்கும் ஒரு மாணவனுக்கும் முன்னதாக அஞ்சல் தலை சேகரிப்பில தொடர்புடைய மாணவன் கூறிவிடுவான். ஏனெனில் இந் நிகழ்ச்சியினை முன்னிட்டு நம் நாட்டில் பொதுவான படங் கொண்ட முதல் தபால் தலை அவ்வாண்டே வெளியிடப்பட்டது.

## அஞ்சல் தலை சேகரிப்பில் இளைஞர்கள் ஈடுபாடு

அஞ்சல் தலை சேகரிக்கும் பழக்கம் இளைஞர்கட்கு, குறிப்பாக, மாணவர்கட்கு, மற்ற எந்தப் பொழுது போக்குக் கலையையும்விட மிக்க பயன் தரத்தக்கது என்பது மேற்கூறியவற்றிலிருந்து தெளிவாகத் தெரியும். இப்பழக்கம் மாணவர்கட்குப்பொது அறிவை வளர்ப்பதுடன் சேமிப்பாகவும் அமையக் கூடும். ஏனெனில், அதில் இடப்

படும் முதலீடு மதிப்பிற் குறையாமல், அதே சமயம் சில அரிய அஞ்சல் தலைகளின் மூலம் அவற்றின் மதிப்பிற்கும் கூடுதலான விலையைப் பிற்காலத்தில் பெற்றுத் தரும் வாய்ப்பும் உண்டு. எடுத்துக்காட்டாக, முதன்முதலில் வெளியிடப்பட்ட பிரிட்டிஷ் கயானா நாட்டின் ஒரு செண்ட் அஞ்சல் தலையின் மதிப்பு 1965-ஆம் ஆண்டு 36 லட்சம் ரூபாயாகவும், 1847ஆம் ஆண்டு மொரிஷியஸ் நாட்டில் வெளியிடப்பட்ட ஒரு பென்ஸ் அஞ்சல்தலை, அதில் ஏற்பட்ட சிறு அச்சுப் பிழை காரணமாக 1968-இல் 28½லட்சம் ரூபாயாகவும் மதிப்பு உயர்ந்தன.

அவ்வாறே இந்திய அஞ்சல் தலைகளில் இந்திய சுதந்திரத்திற்குப் பின்னர் வெளியிடப்பட்ட மகாத்மா காந்தியின் உருவம் பொறித்த 10 ரூபாய் அஞ்சல் தலை மிக விலை மதிப்புள்ளதாக உயர்ந்தது.

மாணவர்களிடையே குழுக்கள் அமைத்தலும், மாதந்தோறும் ஓரிருமுறை அவர்களிடையே கருத்துப் பரிமாறல்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்துவதும், ஒருவரிடம் உபரியாக உள்ள அஞ்சல்தலைகளை மற்றவரிடம் பரிமாறிக்கொள்ளுதலும் இக்கலை மாணவர்களிடையே வளர்ந்து பெருக வாய்ப்பளிக்கும். இது மாணவர்களிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்கும், பொது அறிவு பெருகவும் வழிவகுக்கும். இந்திய அஞ்சல் துறை அவ்வப்போது நடத்தும் கருத்துப் பட்டறைகள் வாயிலாகவும் மாணவர் மிக்க பயன் பெறலாம். இந்திய அஞ்சல் துறையினர் நடத்தும் இம்மாதிரியான கருத்துப்பட்டறைகளில் பள்ளி மாணவர்களைப் பங்குபெறச் செய்து அம்மாதிரி பயிற்சி பெற்ற மாணவர்களைக் கொண்டு பள்ளிகளில் உள்ள தபால் தலை சேகரிப்போர் சங்கத்தைப் பயனுள்ளதாக்கலாம்.

புதிதாக அஞ்சல் தலைசேகரிக்கத் துவங்கும் மாணவர்கள் பொதுவாக உபயோகிக்கப்பட்ட இந்திய அஞ்சல் தலைகளைச் சேகரிப்பது சுலபமானதாகவும், அதிகச் செலவு ஆகாததா்கவும் இருக்கும். ஏனெனில், இத் தபால் தலைகளைப் பற்றிய விவரங்களை எளிதில் அறிந்துகொள்ள முடியும். இந்திய அஞ்சல் துறையினர் 1947ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்ட தபால் தலைகளின் விவரங்கொண்ட பட்டியலை வெளியிட்டிருக்கிறார்கள். இதன் உதவியால் நம்முடைய தொகுப்பில் விட்டுப்போன தபால்தலைகளைக் குறிப்பெடுத்துக் கொண்டு சேகரிக்கலாம். இத்துடன் புதிய தபால் தலைகளையும் சேகரிக்க ஆரம்பித்துக்கொண்டே வரலாம்.

புதிய தபால் தலைக்கள் வெளியிடப்படும்போது அவைகளைவிட்டுப் போகாமல்சுலபமாகப் பெற்றுக்கொள்ள வசதியாகச் சில பெரிய அஞ்சலங்களில் தனிப் பிரிவுகள் Philatalic Bureau இயங்கி வருகின்றன. இம்மாதிரி அலுவலகங்கள் தமிழ்நாட்டில் சென்னை அண்ணாசாலை. கோவை, திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலும், பாண்டிச்சேரியிலும் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் தனிப் பிரிவுகளாக இயங்குகின்றன. இவற்றில் நாம் முன் பணமாக ரூ. 100 செலுத்தி கணக்கு வைத்துக்கொண்டு, நமக்குத் தேவையான அஞ்சல் தலைகள், முதல் நாள் உறைகள் மற்றும் இவை சம்பந்தப்பட்ட விளக்கப் பிரசுரங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இந்த அலுவலகங்களில் முதல் நாள் சிறப்பு முத்திரைகளும் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த Philatalic Bureau என்ற தனி அலுவலகங்களிலும், நம் தமிழ்நாட்டில் 19 முக்கிய இடங்களில் உள்ள அஞ்சல் அலுவலகங்களிலும், புதிய தபால் தலைகள், முதல் நாள் உறைகள், மற்றும் விளக்கப் பிரசுரங்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய பிரிவுகள் PhilatalicCounters என்று அழைக்கப்படுகின்றன.

## குறும்பப்பட்டி உயிரியல் பூங்கா

வளர்ந்துவரும் சேலம் நகரத்தில் வாழும் மக்கள் தங்கள் பொழுதினை இன்பமாகப் போக்குவதற்கு ஏற்ப, தமிழக அரசு ஒரு உயிரியல் பூங்கா ஒன்றினை 40 எக்டேர் பரப்பளவில் வனத்துறை மூலம் தற்போது ஏற்படுத்தியுள்ளது. சேலத்தில் இருந்து 12 கி.மீ. தூரத்தில் ஏற்காடு மலை அடிவாரத்தில்உள்ள 'குறும்பப்பட்டி' என்னும் ஊரில் இந்தப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. சிறுத்தை, யானை, மலைப் பாம்பு, மான், மயில், முதலை, குரங்கு, குள்ளநரி, முயல், சரகு கோழி, போன்ற வனவிலங்குகளும் பறவை இனங்களும் இங்கே உள்ளன. கபில்தேவ், என்று அன்போடு எல்லோராலும் அழைக்கப்படும் குட்டி யானையின்மீது, சிறுவர்களும், சுற்றுலாப் பயணிகளும் ஏறிப் பயணம் செய்யவும், குழந்தைகளுக்கு வேடிக்கை காண்பிக்கவும், பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கண்ணைக் கவரும் வகையில் வண்ணமலர்கள் பலவும் இப்பூங்காவில் உள்ளன.



தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு இப்பூங்காவினை விரிவுபடுத்த ரூ. 6 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி, வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக ஒரு சிற்றுண்டிச்சாலை ஏற்படுத்தவும், பூங்காவில் மின்விளக்கு வசதி அமைக்கவும், பறவைகளை அவை இருக்கும் இடத்திலேயே சென்று எளிதில் கண்டு களிக்க ஒரு பறவைகள் கூடம் கட்டவும், குரங்குகளுக்கான தனிக் கூண்டும், பறவைகள் கூண்டும் அமைக்கவும், பூங்காவிற்குள் சாலை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணிகள் நிறைவேற்றப்பட்ட உடன் மிகப்பெரிய உயிரியல் பூங்காவாக இது திகழும் என்பதில் சந்தேகம் இல்லை.



# புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புகள்

## ஒரு கண்ணோட்டம்

புதுக்கோட்டை மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமை செயல்படுத்தப்படும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டங்களின்கீழ் இம் மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதிதிராவிடர்கட்குக் கூட்டுக் குடியிருப்புகள் 1984-85ஆம் ஆண்டு முதல் கட்டித் தரப்படுகின்றன.

1984-85-ஆம் ஆண்டு முதல், இம்மாவட்டத்தில் கட்டப்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகள் விவரம் கீழே தரப்படுகின்றது.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1984-85-ல் 821 குடியிருப்புகள், 1985-86-ல் 298 குடியிருப்புகள், 1986-87-ல் 550 குடியிருப்புகள்1987-88ல்(15.12.87 முடிய) 420 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 1984-85-ல் 980 குடியிருப்புகள், 1985-86-ல் 575 குடியிருப்புகள், 1986-87-ல் 933 குடியிருப்புகள்,1977-88ல் (15-12-87 முடிய) 609 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இவை அனைத்துக்கும் செலவிடப்பட்ட தொகை ரூ. 425.06 இலட்சம் ஆகும்.

வீடு ஒன்றுக்கு ரூ. 6,000 என்ற மதிப்பீட்டில் 1984-85-ல் ஆரம்பிக்கப்பட்ட ஆதிதிராவிடர் குடியிருப்புகள் கழிவறைகள் இன்றிக் கட்டித் தரப்பட்டன.

இக்குடியிருப்புகட்குக் கழிவறைகள், குடிநீர், சாலைகள் மற்றும் மின் விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர 1985-86ஆம் ஆண்டு முதல், வீடு ஒன்றுக்கு ரூ. 9,000 என்ற அளவில் பணம் வழங்கப்பட்டது.

கிராமப்புறத்தில் வாழும் மக்களுக்குச் சுற்றுப்புறசுகாதாரம் பற்றிய எண்ணங்கள் வளர வேண்டும் என்ற எண்ணத்தில் ஆதி திராவிடர் குடியிருப்புகட்குக் கழிவறை கட்டித் தர வேண்டும் என்று அரசு அனுமதி அளித்தது.

மேலும் ஆதி திராவிடர் குடியிருப்புகட்குக் குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி, சாலைவசதிபோன்ற அடிப்படை வசதிகளும் செய்து தர அனுமதி அளித்தது. மேலும் குறைந்தது 20 வீடுகளிலாவது (ஒவ்வொரு குடியிருப்புக்கும்) எடுத்துச் செய்ய வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டு, கூட்டுக் குடியிருப்புகளை 1985-86ஆம் ஆண்டு முதல் அனைத்து அடிப்படைவசதிகளுடன் கட்டத்திட்டமிட்டு நிறைவேற்றப்


**க. இளங்கோவன் இ.ஆ.ப.**

**மாவட்ட ஆட்சித் தலைவர்,**

**புதுக்கோட்டை மாவட்டம்.**


பட்டது. 1986-87ஆம் ஆண்டில் கட்டப்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகள் குறிப்பாக அகன்ற சாலை வசதிகள், ஆழ்குழாய்க் கிணற்றுடன் கூடிய கைப்பம்பு, தெரு விளக்குகள், வீட்டு மின் விளக்குகள், அணுகு சாலைகள் போன்ற அனைத்து வசதிகளையும் பெற்ற மாதிரிக் குடியிருப்புகளாக உருவாக்கப்பட்டன.

மரம், ஓடு போன்ற மூலப் பொருட்களின் விலை ஏற்றத்தாலும், வீடுகள் தரமான முறையில் கட்டப்பட வேண்டும் என்ற எண்ணத்திலும், ஆதி திராவிடர் மக்களுக்கு மேலும் கூடுதல் வசதிகள் செய்து தரவேண்டும் என்ற நன்னோக்கிலும், ஒரு வீட்டின் மதிப்பீட்டுத் தொகை 1987-88ஆம் ஆண்டில் ரூ. 9,000லிருந்து ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டது.

நடப்பு நிதியாண்டில் இம்மாவட்டத்தில் கட்டப்படும் ஒவ்வொரு ஆதி திராவிடர் குடியிருப்புக்கும் கூடுதலாக, சமையல் அறை ஒன்றும் குளியல் மேடை ஒன்றும் கட்டித் தரப்பட்டு வருகின்றன. மேலும், ஒவ்வொரு குடியிருப்புக்கும் நிதி இருப்புக்கு ஏற்றவாறு ஆழ்குழாய்க் கிணறு, சாலை வசதி போன்ற அடிப்படைவசதிகளுடன்வானொலி அறை, சமுதாயக்கூடம் ஆகியவைகளும் செய்து தரப்பட்டு வருகின்றன. வீடுகளின் சுவர்கள் சுண்ணாம்புக் கலவையில் கட்டப்பட்டுச் சுவர் மற்றும் தரை சிமெண்டினால் பூசப்பெற்று, வண்ணப் பூச்சுகளுடனும் பொலிவுடனும் திகழ்கின்றன. எல்லா வீடுகட்கும் கழிவறைகளும், புகையற்ற அடுப்பும் அமைத்துத் தரப்பட்டுவருகின்றன. தெருக்களுக்கும், வீடுகளுக்கும் மின்சார வசதியும் உறுதி செய்யப்படுகிறது. குறிப்பாக இவ்வாண்டில் துவக்கப்பட்ட 66 இடங்களில் 30.9.87க்குள் 40 இடங்களில் 800 வீடுகள் கட்டி முடித்தது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

1984-85ஆம் ஆண்டு கழிவறைகள் இல்லாமல் கட்டித் தரப்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் கழிவறைகள் கட்டித் தரவும் அரசு அனுமதித்துள்ளது. அதன்படி 1984-85-ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குக் கழிவறைகள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றுப்புறச் சூழ்நிலை மேம்பாட்டைக் கருத்தில் கொண்டும், காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் மக்கள் நேரடிப் பங்கேற்றுச் சிறந்த முறையில் திட்டம் செயலாக்கும் நோக்கத்திலும், 1986-87 மற்றும் 1987-88-ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட குடியிருப்புகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் எரிபொருள், பழம் மற்றும் கால்நடைத் தீவனம் தரும் 30 முதல் 60 மரக் கன்றுகள் நடப்பட்டு, மேற்படி கன்றுகளைப் பராமரிக்க வீட்டில் குடும்பத் தலைவிக்கே 1986-87-ல் மாதம் 8 நாள் கூலி வீதம் ரூ. 80 பராமரிப்புச் செலவாகவும்,1987-88-ல் மாதம் 4 நாட்கள் கூலி வீதம் ரூ. 40- பராமரிப்புச் செலவும் கொடுக்கப்பட்டு வருவதால்,குடியிருப்பில் உள்ளோர் மிக்க ஆர்வத்துடன் கன்றுகளை வளர்த்துக் குடியிருப்புக்கு நல்ல சுற்றுப்புறச் சூழ்நிலையை அமைத்துக்கொண்டுள்ளனர். கழிவு நீரும் சுகாதாரக் கேடு விளைவிக்காமல் செடிகளுக்குப் பயன்படுகின்றது.

இவ்வாண்டில் 30.9.87க்குள் சுமார் 800 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. அனைத்துலக வீடற்றோருக்கு உறைவிடம் வழங்கும் சிறப்பு ஆண்டாகக் கொண்டாடப்படும் இவ்வாண்டில் இம் மாவட்டத்தில் வீடற்ற 1320 ஆதி திராவிடர் குடும்பங்கள் நிரந்தரமாகக் குடியமர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

5ஆம் பக்கத் தொடர்ச்சி

வறுமையை ஒழிப்பதற்காக ஐந்து தொழில்நுட்பக் குழுக்களை அரசு நியமித்துள்ளது. நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கல், தொற்றுநோய்களுக்கு எதிராக இரண்டு கோடி கருவுற்ற மகளிர், மற்றும் 1.8 கோடி குழந்தைகள் ஆகியோருக்குத் தடுப்பு ஊசி போடுதல், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரித்தல், தொலைத்தொடர்பு வசதியை மேம்படுத்துதல் போன்ற பணிகளுக்காக நியமிக்கப்படடுள்ள இந்தக் குழுக்கள் தங்களின் செயல் திட்டங்களை வரைந்துள்ளன.



ஊரகப்பகுதிகளில் ஒருங்கிணைந்த எரிசக்தித் திட்டத்தை அரசு பின்பற்றுகிறது. புதிய எண்ணெய் வகைக் கண்டுபிடிப்புப்பணிகள் முடுக்கிவ்டப்பட்டுள்ளன. எண்ணெய் சுத்திகரிப்புத் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மின்னணுத் துறையில் நாம் குறிப்பிடத்தக்க சாதனைகள் நிகழ்த்தியுள்ளோம். 500 மெ.வா. திறனுள்ள ரியாக்டர்களை நம் நாட்டிலேயே வடிவமைக்கும் உத்தியை நாம் கண்டறிந்துள்ளோம். அணு மின் திட்டங்களுக்கு உதவிபுரிவதற்காக அணுமின் கழகம் ஒன்று ஏற்படுத்தப்படவிருக்கிறது.

இந்திய அண்ட ஆய்வு அமைப்பு வடிவமைத்த முதலாவது இந்திய செயற்கைக்கோள் அடுத்தமாத வாக்கில் விணணில் ஏவப்படவிருக்கிறது. ஜூலை மாதத்தில் நமது தகவல்தொடர்பு **இன்சாட் 1 சி** விண்ணில் ஏவப்படவிருக்கிறது.

சுமார் 15 மாநிலங்கள், மற்றும் ஆறு நேரடி ஆட்சிப்பகுதிகளில் 45 மில்லியன் எக்டேர் நிலப்பரப்பில் கடுமையாக வறட்சி பாதிக்கப்பட்டபோதும், நமது உணவு உற்பத்தி அவ்வளவு மோசமாகப் பாதிக்கப்படவில்லை. அத்தியாவசியப் பொருட்கள் தொடர்ந்து பொது விநியோக முறையின்கீழ் கட்டுப்பாடின்றி வழங்கப்பட்டன. உணவு தானியங்களின் இருப்பைக் கணிசமாக அதிகரிக்க,கிழக்கு மாநிலங்களில் அரிசி உற்பத்தித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியதுடன், ஏழாவது திட்ட இறுதிக்குள் 175 மில்லியன் டன் தானிய இருப்பு என்ற இலக்கை அடையத் தொடர்ந்து முயற்சி செய்து வருகிறோம். புன்செய் நிலப்பயிரிடும் உத்திகளைப் பற்றி ஆராய்வதற்காகச் செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணப்பணிகளுக்காக எதிர்பார்த்ததைத்-திட்டமிட்டதைக் காட்டிலும் அதிக அளவில் நிதி தேவைப்பட்டதால், வருமானவரி, செல்வவரி, நிறுவனங்களின்வரி ஆகியவற்றின்மீது தாற்காலிக மேல்வரி ஒன்று விதிக்கப்பட்டது. அரசின் செலவில் கடுமையாக சிக்கன நடவடிக்கைகளைப் பின்பற்றியதன் மூலம், பணவீக்கத்தைப் பெருமளவிற்குக் குறைக்க முடிந்தது.

முதலீட்டையும் உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கு ஏற்ப தொழில்துறை சிறப்பாகச் செயலாற்றியுள்ளது. 1984-85ஆம் ஆண்டிலிருந்து 8.5-9 சதவீதமாக இருந்த சராசரி தொழில் வளர்ச்சி, கடந்த ஆண்டில் 10.2 சதவீத வளர்ச்சியை எட்டியது. தொழில்துறையின் இந்த வளர்ச்சிக்குச் சிறு தொழில்துறைப் பிரிவும் தனது பணியை ஆற்றியுள்ளது. சிறுதொழில் உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்காக, தேசிய முதலீட்டு நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. நலிவடைந்த தொழில் நிறுவனங்கள் சட்டம் 1987-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட தொழில் நிதி புனரமைப்பு வாரியம் கடந்த மே மாதத்திலிருந்து செயல்படத் துவங்கியுள்ளது.

பொதுத்துறை வளர்ச்சி ஆரோக்கியமாக இருக்கிறது. மின்உற்பத்தி 10.2 சதவீதமாகவும், நிலக்கரி உற்பத்தி 7.5 சதவீதமாகவும், ரெயில்வே சரக்குப் போக்குவரத்து 7.4 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. இந்தியாவின் பொருளாதார விடுதலைக்காக பொதுத்துறை ஆற்றவேண்டிய பணிகளை உணர்ந்து, அவற்றுக்குக் கூடுதல் சுயாட்சி உரிமைகளை வழங்கியுள்ளோம்.

ஏற்றுமதி 24.7 சதவீதம் அதிகரித்துள்ளது. எனினும், இறக்குமதியின் வளர்ச்சி 13.5 சதவீதமாகவே இருந்துவருகிறது. கடந்த ஆண்டைக்காட்டிலும், தற்போதைய வர்த்தகப் பற்றாக்குறை மிகவும் குறைவே.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய இடைக்கால மதிப்பீட்டு அறிக்கை விரைவில் தேசிய வளர்ச்சிக் குழுவிலும் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்படும்.

நிகழ்கால சர்வதேச உறவுகளுக்கு வழிகாட்டியாகக் கூட்டுச்சேராக் கொள்கையை நாம் தொடர்ந்து பின்பற்றி வருகிறோம். கடந்த 40 ஆண்டுகளில், சாவதேச அமைதிக்காக இந்தியா ஆற்றிவரும் பணி மகத்தானது. ஆயுதக் குறைபபிற்காக அந்நாளைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூட்டிய ஆறு நாடுகள் கூட்டமும், அதனை அடுத்து சமீபத்தில் சோவியத் அதிபர் திரு. கோர்பச்சேவ், அமெரிக்க அதிபர் திரு ரீகன் ஆகியோரிடையே கையெழுத்தான நடுத்தர ஏவுகணை ஒழிப்பு ஒப்பந்தத்தைப் பாராட்டியது போன்றவை அணுஆயுதக் குறைப்புக்கு இந்தியாவின் பணியை விளக்குவதாகத் திகழ்கின்றன.

கடந்த ஜூலையில் ஏற்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழ்நாட்டில் மட்டுமின்றி, இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றது. இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழர்களின் உரிமைக்காக இந்தியா மேற்கொண்ட இந்த ஒப்பந்தத்தைச் சிறந்த ராஜதந்திரச் செயல் என்று சர்வதேச நாடுகளும் பாராட்டியுள்ளது. இலங்கை வாழ் தமிழர்களின் அனைத்து சட்டபூர்வ உரிமைகளுக்கும் வழிகோலுகின்ற அதேநேரத்தில், அந்நாட்டின் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் இந்த ஒப்பந்தம் வகைசெய்கிறது. அந்நாட்டின் நீடித்த அமைதிக்கும், நிலையான தன்மைக்கும் வழிவகுக்கும் இந்த ஒப்பந்தம், நமது மண்டலத்தில் கூட்டுச் சேராக் கொள்கையை நலிவுறச் செய்யும் நடவடிக்கையாகத் திகழ்கிறது: ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடியும், இலங்கை அதிபர் திரு. ஜெயவர்த்தனாவின் வேண்டுகோளுக்கு இணங்கியும், இந்திய அமைதிப்படை இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது. சிக்கல் மிகுந்த சூழ்நிலையில் அவர்கள் ஆற்றிய அரும்பணியைப் பாராட்டுகின்ற அதேநேரத்தில், நம் வீரர்கள் செய்த தியாகம் வீணாகிப் போகாமல், இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் அனைத்து அம்சங்களையும் முழுமையாக நிறைவேற்ற உறுதி கொண்டுள்ளோம்.

நம்மை எதிர்நோக்கியுள்ள சவால்களை உறுதியுடன் எதிர்கொள்ளவும்,நம் குடியரசின் நோக்கங்களை எட்டுவதற்கு அயராது உழைக்கவும் உறுதி ஏற்போம்.

**(1988 பிப்ரவரி 22ஆம் நாளன்று, மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து...)**

# ஆடலீ அருங்கலை

நடன காசிநாதன்,
துணை இயக்குநர்,
தொல்பொருள் ஆய்வுத் துறை.
தமிழ்நாடு அரசு.



தஞ்சை கலைக்கூடம்
(தஞ்சாவூர்)

சிவபெருமான் பஞ்ச பூதமாக விளங்கி, பஞ்சகிரியைகளைச் செய்யும் நாயகன் என்பது பொதுவான கருத்து. திருக்காஞ்சியில் நிலமாகவும், திருவானைக்காவில் நீராகவும், திருவண்ணாமலையில் தீயாகவும், திருக்காளத்தியில் காற்றாகவும், திருத்தில்லையில் ஆகாயமாகவும் இறைவன் அருள்புரிவதையே பஞ்சபூதநாயகன் என்பர் ஆன்றோர். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழிலையும் சிவபெருமானே புரிவதாகக் காட்டும் ஒப்பற்ற வடிவமே நடராஜர் வடிவம்.

இக்கருத்தையே திருமூலர் தம் 'திருமந்திரத்'தில்,

''காளியோ டாடிக் கனகா சலத்தாடிக்
கூளியோ டாடிக் குவலயத்தே ஆடி
நீடியநீர் தீ கால் நீள்வா னிடையாடி
நானுற அம்பலத் தேயாடும் நாதனே''

என்று விளக்கியுள்ளார்.

வலக்கையில் உள்ள உடுக்கை ஆக்கல் தொழிலையும், இடக்கையில் உள்ள தீ, அழித்தல் தொழிலையும், அபயமளிக்கும் வலக்கீழ்க்கரம் காத்தல் தொழிலையும், முயலகன் மீது ஊன்றிய திருவடி மறைத்தல் தொழிலையும், தூக்கிய திருவடி அருளலையும் சுட்டும் என்பது அறநூல்கள் தரும் விளக்கம்.



நாமக்கல்
(சேலம் மாவட்டம்)

# வல்லான்— நாயகன்

இக்கருத்துக்கு முழு விளக்கம் கூறும் வகையில் உண்மை விளக்கம் என்னும் நூல் கீழ்வருமாறு விவரிக்கிறது.

''மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தையார் பாதம் தான்''

என்பதாக.

- சிவனின் நடனத்தைப் பஞ்சாட்சரத்தோடு ஒப்பிட்டும் கூறுவர்.

திருவடி 'ந' கரத்தையும், உதரம் 'ம' கரத்தையும் வளர் தோள் 'சி' கரத்தையும், முகம் 'வா' யையும், முடி 'யா' வையும் குறிக்கும் என்று ஒப்பிட்டுப் பேசுவர்.



கொடுமுடி
(பெரியார் மாவட்டம்)



நல்லூர்
(தஞ்சாவூர் மாவட்டம்)



கரைவீரம்
(தஞ்சாவூர் மாவட்டம்)




நடராஜர் உருவத்தைச்சுற்றி வளர்ந்து நிற்கும் பிரபாவளியை (திருவாசி) ஓங்காரத்தின் கொம்பாகவும், சிவபெருமானை ஓங்காரமாகவும் 'உண்மை விளக்கம்' கூறும்.

''ஓங்கார மேநல் திருவாசி யுற்றதனின்
நீங்கா வெழுத்தே நிறைசுடராம்-ஆங்காரம்
அற்றார் அறிவரணி யம்பலத்தா னாடலிது
பெற்றார் பிறப்பற்றார் பின்''

என்பது அப்பாடல்.

நடராசர் ஐந்து வகைத் தாண்டவத்தை நிகழ்த்தினார் என்று நூல்கள் இயம்பும்.

<u>முகப்பில்</u> :

**மேதகு ஆளுநர்**

**டாக்டர் பி. சி. அலெக்சாண்டர்**

**அவர்கள் பதவி ஏற்புக் காட்சி.**

**அட்டைப் பட விளக்கம்**

<u>கடைசிப் பக்கம்</u> : **அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோவில், இராமேஸ்வரம்.**

30-12-1987 'தமிழரசு' இதழில் இடம்பெற்ற தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஒப்புதலளிக்கப்பட்ட வாழ்க்கைக் குறிப்பின் மறுபதிப்பு. இதில் நிகழ் காலம் இறந்த காலமாக மாற்றப்பட்டு, இறுதிப் பத்தி இணைக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

முதல்வகைத் தாண்டவம் அற்புதத் தாண்டவம் என்றும்; இரண்டாம்வகை அநவரதத் தாண்டவம் என்றும்; மூன்றாம்வகை ஆனந்தத் தாண்டவம் என்றும; நான்காம் வகை பிரளயத் தாண்டவம் என்றும்,ஐந்தாம் வகை சங்கர தாண்டவம் என்றும் கூறப்படும்.

தில்லைச்சிற்றம்பலத்தில் ஆடும் தாண்டவம் ஆனந்தத் தாண்டவமாகும்.

தாருகா வனத்தில் மீமாம்சை வழியைப் பின்பற்றி வாழ்ந்து வந்த தவமுனிவர்களை நல்வழிப்படுத்த விருப்பம் கொண்ட சிவபெருமானும், மஹாவிஷ்ணுவும் முறையே ஆடையற்ற ஆடவர் வடிவிலும், மோகினி வடிவிலும் தாருகா வனம் சென்றனர். மோகினியின் அழகிலே மோகம் கொண்ட முனிபுங்கவர்கள், தம் தரும பத்தினிகள் சிவனது அழகிலே தங்கள் உள்ளத்தைச் செல்ல விடுவதையறிந்து வெகுண்டெழுந்தனர். சிவபெருமானை அழிக்க எண்ணி, பெரும் வேள்வி வேட்டனர். அவ்வேள்வியிலிருந்து தோன்றி சிவபெருமானை எதிர்த்த சினப்புலியைக் கிழித்துத் தோலாடையாகவும், நச்சரவத்தை நல்மாலையாகவும், தம் இடையிலும், கழுத்திலும் அணிந்துகொண்டு நடமாடத் தொடங்கினர்.

வேள்வியிலிருந்து அடுத்தடுத்துப் புறப்பட்டுவந்த குள்ள பூதத்தையும், மான் மழு ஆகியவைகளையும், முறையே காலுக்கடியிலும், இடக்கையிலும், வலக்கையிலும் கொண்டார். நடனத்தின வேகம் மேலும் மேலும் அதிகரிக்கலாயிற்று. நடனத்தைக் கண்ணுற்ற முனிபுங்கவர்கள் தங்களை மறந்து சிவபெருமானைப் போற்றினர்.

பின்னர் ஆதிசேடன் சிவபெருமானை வணங்கி, தாம் அந்நடனத்தைக் காண அருள்பாலிக்க வேண்டினர். அவரது வேண்டுகோளுக்கிணங்க தில்லையில் ஆடிய வடிவே உலகமக்கள் அனைவராலும் போற்றக் கூடிய நடராசர் வடிவமாக ஆகியது.

தமிழகத்தில் செப்புத்திருமேனியில் இவ்வடிவம் கி.பி.8-ஆம் நூற்றாண்டு முதல் காணப்படுகிறது. பல்லவர் காலக் கலைப் பாணியில் காஞ்சிபுரத்துக்கருகில் உள்ள கூரம் என்னும் ஊரைச்சார்ந்த நடராஜர் செப்புத்திருமேனி சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது. பிறகு சோழர்கள் காலத்தில் நடராசர் வடிவம் செப்புப்படிமக் கலையில் சிறந்த உச்சக் கட்டநிலையை எய்தியது.

சோழமன்னன் பராந்தகன் காலமுதல் இத்திருமேனி மிகவும் செல்வாக்குப் பெற்று பேரரசன் முதலாம் இராஜராஜன் காலத்தில் மிகவும் உச்சநிலைக்குச் சென்றிருக்கிறது. நடராஜர் வடிவம் பல்வகைத் தோற்றங்களில் காணமுடிகிறது.

வலக்காலை முயலகன் மீது ஊன்றி, இடக்காலைத் தூக்கி ஆடும் நடராஜர் திருமேனி பிரபையுடனும், பிரபையில்லாமலும், படுத்திருக்கும் முயலகன்மீது காலை ஊன்றிய நிலையிலும், அமர்ந்திருக்கும் முயலகனின் தலை மீது காலை ஊன்றிய நிலையிலும், சதுர தாண்டவமாகவும், பிரபை தோரணவாயில் போன்றும், நடராசரின் ஜடாமுடி பிரபையைத் தொட்ட நிலையிலும், பிரபையைத் தொடாத நிலையிலும், பிரபையில் காணும் தீச்சுடர் பல அமைப்புக்களிலும் என, பல வடிவில் எண்ணிறந்தவை தமிழகத்தில் கிடைத்துள்ளன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை.600 002.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

